www.tamilarangam.net

THAYAGAM

3 . 5 . 94

உண்மை:5
தொடர்:48

# தாயகம்

## பௌத்த மதத்திற்கு முன்னுரிமை கொடுக்க பீடாதிபதிகள் கோரிக்கை

## மாத்தயாவின் ஆதரவாளர்கள் மூவருக்கு மரணதண்டனை

## சொத்தி உபாலியின் கதை

### தேடகம் தீவைப்பிற்கு எதிராக கண்டன ஊர்வலம்

### பத்திரிகைகள் நடுநிலையாக இயங்க ஜனாதிபதி கோரிக்கை

### இலங்கை அரசியலில் புதிய நட்சத்திரம் சந்திரிகா

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CDவிற்பனையாளர்

SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

www.tamilarangam.net

Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru Niru

# தரத்தின் சின்னம்

## நிரு பிராண்ட்®

## Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்
Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை
உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

Niru Enterprises Inc,

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை
வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன்
தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள்
எப்பொழுதும் கிடைக்கக் கூடிய
வர்த்தக நிலையங்களை அறியலாம்

www.tamilarangam.net

Second class mail Registration No:8435

# தாயகம்

'உண்மையைத் தேடி'

## பௌத்தத்தை வளர்க்க இனவாத அமைப்புகள் கையெழுத்து வேட்டை

சிங்கள பௌத்த அமைப்பு ஒன்று தற்போது பத்து லட்சம் கையொப்பங்களைச் சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதற்கு முக்கியமான பௌத்த தலைவர்களின் ஒத்துழைப்பு உள்ளதாக நம்பப்படுகிறது.

அரசியலமைப்பில் கூறியபடிக்கு பௌத்த சாசனத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும், மற்ற மதங்களுடன் பௌத்த சாசனத்தை ஒப்பிடுவதை தவிர்க்க வேண்டும், பௌத்த மதத்தை அரசு பேணிக் காக்க வேண்டும், வேறு மதங்களுக்கு பௌத்தர்களை மதம் மாற்றும் மதப் பிரசாரத்தை தடை செய்ய வேண்டும், தனியான பௌத்த ஆலயங்களில் வேறு மத ஆலயங்கள் அமைக்கப்படுவதை நிறுத்த வேண்டும், சர்வமதக்கோட்பாடு என்ற ஏமாற்று முயற்சி நிறுத்தப்பட வேண்டும் என்று பல கோரிக்கைகள் இதில் விடுக்கப்பட்டிருக்கின்றன. மல்வத்தை பீடாதிபதிகளும் தியவன நிலமேயும் கைச்சாத்திட்டு இந்த விண்ணப்ப இயக்கத்தை ஆரம்பித்து வைத்துள்ளனர்.

## பதவிகளுக்காக காமினி காத்திருக்கிறார்

பலத்த எதிர்பார்ப்புகளுடன் ஐ.தே.கட்சியில் சேர்ந்த காமினி திசநாயக்கவிற்கு மகாவலி அமைச்சு மட்டுமே வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர் கட்சியில் சேர்ந்ததும் நுவரெலியாவில் பல இடங்களில் இவரது இணைப்புக்கு ஆதரவும் எதிர்ப்பும் தெரிவிக்கும் குழுக்களுக்கு இடையில் மோதல்கள் நடைபெற்றிருக்கின்றன. நுவரெலியா அரச அலுவலகக் கட்டடம் எரிந்ததற்கும் இந்த மோதலே காரணம் என்று கூறப்படுகிறது. நுவரெலியா மேயரே காரணம் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால் அவர் அதை மறுத்திருக்கிறார்.

காமினி பதவி ஏற்ற போது அவர் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி ஏற்பார் என்று நம்பப்பட்டது. அவர் பதவி ஏற்ற போது அவரை வாழ்த்துவதற்கு உடுகம்பொல, சிங்கப்பூரிலிருந்து பொருட்களைக் கடத்தி வந்ததாக குற்றம் சாட்டி நீக்கப்பட்ட அவரது தம்பியான இராணுவ அதிகாரி பத்மசிறி உடுகம்பொல, அமெரிக்காவில் திருட்டுக் குற்றச்சாட்டில் வேலை நீக்கப்பட்ட ஜயந்த கொத்தலாவல, வடக்கே தடை செய்யப்பட்ட பொருட்களை அனுப்பிய குற்றச்சாட்டில் அகப்பட்ட பிரிகேடியர் பண்டார ஆகியோர் அவரை வாழ்த்த வந்திருந்தனர்.

## மாகாண அரசை முடக்க அரசு முயற்சி

தென்மாகாண சபைக்கு தேவையான அதிகாரிகளை நியமிக்காமல் அரசாங்கம் மாகாண சபையின் செயற்பாடுகளை மந்தப்படுததுவதாக தென்மாகாண முதலவர் அமரசிறி தொடங்கொட குற்றம் சாட்டியிருக்கிறார். இவ்வாறு செய்வதன் மூலம் மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்க முடியாதுள்ளதாகவும் அபிவிருத்தித் திட்டங்கள் ஸ்தம்பித்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

## பிரேமா கொலையில் மேலும் சந்தேகங்கள்

பிரேமதாசா கொலை சம்பந்தமாக மேலும் சந்தேகங்கள் கிளப்பப்பட்டிருக்கின்றன. பிரேமதாச கொல்லப்பட்ட இடம் ஏன் அவசரம் அவசரமாக துப்புரவு செய்யப்பட்டது என்பதில் தற்போது சந்தேகங்கள் எழுந்துள்ளன. சட்டமருத்துவ அதிகாரி குண்டுவெடிப்பு நடந்த இடத்திற்கு நான்கு மணிக்கு வருவதற்கு முன்னதாக இடம் துப்புரவு செய்யப்பட்டது. குண்டு வெடித்த முக்கால் மணி நேரத்தினுள் இடம் துப்புரவு செய்யப்பட்டதற்கான கட்டளையைப் பிறப்பித்தது யார் என்பதிலும் சர்ச்சை எழுந்துள்ளது. நீதிபதி ஒருவரே இதற்கு அனுமதியளித்தார் என்று கூறப்பட்ட போதும் தான் அவ்வாறாக அனுமதியளிக்கவில்லை என்று அந்த நீதிபதி மறுத்திருந்தார். அத்துடன் குண்டுவெடித்ததும் குண்டுவெடிப்பு நிபுணர் வரவழைக்கப்படாமல் துப்பாக்கி சம்பந்தமான நிபுணரே அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்திலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கிறார்.

## சந்திரிகாவுக்கு வழிவிடக் கோரிக்கை

சிறிமாவோ பண்டாரநாயக்க பதவி விலகி சந்திரிகாவுக்கு வழி விட வேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டிருப்பதாக சண்டே ரைம்ஸ் தெரிவித்திருக்கிறது. பாராளுமன்றத்தின் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் சிறிமா மீண்டும் தேர்தலில் பங்கு கொண்டால் அது ஐ.தே.கட்சியின் வெற்றிக்கே வழி வகுக்கும் என்றும் இதனால் சந்திரிகாவே அடுத்த தேர்தலில் போட்டியிட வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புகலிடம் வரை நீளும் புலிகளின் (அ)நீதியின் கரங்கள்

## ஏடு இட்டோர் இயல்

பாரிஸில் சமீபத்தில் சபாலிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டதும் ரொறன்ரோவில் தேடகம் நூலகம் எரிக்கப்பட்டதும் சமீப கால புகலிடத் தமிழர் வரலாற்றில் ஒரு புதிய பரிமாணத்தைத் தோற்றுவித்திருக்கின்றன. இதுவரை காலமும் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகள், விமர்சனங்களைக் கொண்டிருந்தவர்கள் தாக்கப்பட்டும் மிரட்டப்பட்டும் வந்திருந்தாலும் அது கொலை, தீ வைப்பு என்ற பரிமாணங்களை எட்டியது இப்போது தான். அதிருப்தியாளரை அடக்கி மௌனிக்கச் செய்வது என்பது அவர்களை அழித்தொழிப்பதன் மூலம் தான் என்ற எமது மண்ணின் ஆயுதக் கலாசாரப் பாரம்பரியத்தின் நிழல் நிம்மதியான வாழ்வு தேடி வந்த புகலிடங்களிலும் படிவது இது எங்கு போய் முடியும் என்ற கேள்வியை எங்கள் மத்தியில் எழுப்பியிருக்கிறது. வடக்கில் நடைபெறும் இவ்வாறான விடயங்களை நியாயப்படுத்துவதற்கும் கண்டும் காணாமல் விடுவதற்கும் எமக்கு காரணங்கள் இருந்தன. 'உரிமைக்காக போராடி உயிரை தியாகம் செய்பவர்களை கொச்சைப்படுத்தலாமா?' என்ற நியாயங்களும் 'எங்களுக்கு ஏன் தேவையில்லாத பிரச்சனை? அவங்களைப் பற்றித் தெரியும் தானே?' என்ற ஒதுங்கல்களும் நாங்கள் கண்டவை. இந்த நியாயப்படுத்தல்களும் ஒதுங்கல்களும் தான் எங்களை மேலும் படுகுழிக்குள் தள்ளியிருக்கின்றன என்பது இன்னமும் பலருக்குப் புரியாமல் உள்ளது. இதனால் தான் அடிப்படை மனித உரிமைகளுக்காக குரல் எழுப்பியவர்கள் எமது மண்ணிலேயே எமது மண்ணின் மைந்தர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். சாத்வீக முறையில் தங்கள் ஆட்சேபங்களைத் தெரிவித்தவர்களை புலிகள் அங்கே கொன்றிருக்கிறார்கள். அராஜகங்களை ஆவணப்படுத்திய ராஜினி முதல் விஜிதரன் கடத்தல் சம்பந்தமாக ஆர்ப்பாட்டத்தில் முன்நின்ற விமலேஸ்வரன் வரை புலிகளால் கொல்லப்பட்டார்கள்.

ஆனால் புகலிடத்திலும் இதைத் தொடர அனுமதிப்பது என்பது எந்தளவுக்கு இனச்சீரழிவுக்கு வழிவகுக்கும் என்பது இன்னமும் பலரால் புரியப்படாமல் தான் உள்ளது. வெளிநாடுகளில் ஆரம்ப காலங்களில் மாற்றியக்க உறுப்பினர்கள் தாக்கப்பட்டு மிரட்டப்பட்டதும் பின்னர் கருத்துச் சுதந்திர மறுப்பாக பத்திரிகைகள், சஞ்சிகைகள் மீதான தாக்குதலும் யாழ்ப்பாண தேசவழமைச் சட்டத்தை எந்த மண்ணிலும் அமுல்படுத்தும் முயற்சிகளே.


முன்பும் பல நாடுகள் வெளிநாடுகளில் தங்களது அதிருப்தியாளர் மீது தாக்குதல்களை நடத்தியிருக்கின்றன. இதில் முதலாவது லிபியா. லண்டனில் லிபியத் தூதுவரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது தூதுவரகத்திலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு பெண் பொலிசார் கொல்லப்பட்டிருந்தார். இதையடுத்து தூதுவரகம் மூடப்பட்டு அனைவரும் வெளியேற்றப்பட்டனர். லிபியாவின் கடாபி தனது ஆட்சிக்கு எதிராக விமர்சனங்களை வைப்பவர்கள் மீது இவ்வாறான நடவடிக்கைகள் எடுப்பவர். ஐரோப்பாவில் பல இடங்களிலும் லிபிய அதிருப்தியாளர்கள் கொல்லப்பட்டது பற்றி கடாபியிடம் கேட்ட போது 'நாங்கள் எங்கள் நாட்டுக்காரர்களைத் தானே கொல்லுகிறோம், உங்கள் நாட்டுக்காரரை அல்லவே' என்று பதிலளித்தார்.

ஈரான் கூட சல்மான் ருஷ்டி மீதான மரண தண்டனையை விதித்து அந்த கொலையை நிறைவேற்றுவதற்கு பணம் தருவதாகக் கூட பகிரங்கமாக அறிவித்திருக்கிறது. சல்மான் ருஷ்டி சம்பந்தமாக நடந்த ஆர்ப்பாட்டம் ஒன்றில் ரொறன்ரோவில் ஒரு இஸ்லாமியரை 'நீங்கள் ருஷ்டியை அன்னிய மண்ணில் கொல்லும்படி கூறுவது அந்நாட்டு சட்டத்திற்கு முரணானதே' என்று கேட்ட போது 'எங்களுக்கு அதைப் பற்றி கவலையில்லை. எங்கள் இஸ்லாமிய சட்டம் எங்கும் செல்லுபடியாகும்' என்று பதில் வந்தது.

இந்த நடவடிக்கைகளில் பேர் போனது இஸ்ரேல். இன்னொரு நாட்டின் இறைமையைக் கூட மதிக்காமல் அந்நிய மண்ணில் தனது சட்டத்தை நிலை நாட்டுகின்ற நாடு அது. சில வாரங்களுக்கு முன்னர் கூட லெபனானில் ஒரு இயக்கத் தலைவரை கொமாண்டோ தாக்குதலில் கடத்தியது. முன்பு டுனீசியாவில் அரபாத்தின் அடுத்த தளபதியாக இருந்த அபு ஜிகாத்தைக் கொன்றது. (இப்போது அரபாத் அதே இஸ்ரேலுடன் கைகுலுக்க வேண்டிய நிலை!)

இஸ்ரேலுக்கு எதிரான எந்தப் பயங்கரவாத நடவடிக்கையிலும் ஈடுபடுபவர்கள் மீது இஸ்ரேலின் 'நீதியின் நீண்ட கரங்கள்' தண்டனை கொடுத்து வந்திருக்கின்றன. இப்போது இந்தியா கூட தனது நாட்டிற்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களில் குற்றவாளியாகக் காணப்படுவோர் மீது அந்நிய மண்ணில் கூட நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. நொரியேகா கூட பனாமாவிலிருந்து இப்படியாக கடத்தப்பட்டு வந்தவர் தான். முன்பு இவ்வாறு கடத்தப்பட்ட ஒருவரின் மனித உரிமை மீறப்பட்டதாகக் கூறி அமெரிக்க நீதிபதி ஒருவர் அவரை விடுதலை செய்திருந்தார். நைஜீரிய அரசு ஒரு தடவை மாஜி மந்திரி ஒருவரை லண்டனில் இருந்து கடத்தி அவரை கொள்கலன் ஒன்றுக்குள் வைத்து, சுவாசிக்க வசதிகளும் செய்து நாட்டை விட்டு வெளியே கொண்டு போக முயன்ற போது பிடிபட்டிருந்தது.

இப்படி கிட்டத்தட்ட எல்லா நாடுகளும் தங்கள் சட்டங்களை நிலை நாட்ட அன்னிய மண்ணின் இறைமையையோ, அந்த நாட்டு சட்டதிட்டங்களையோ மதிக்காமல் நடந்து கொள்வதுண்டு. இதைப் போலத் தான் இன்றும் எம்மவர் மத்தியிலும் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருப்போர் மீதும் துரோகி என்று கருதுவோர் மீதும் அவர்கள் எந்த மண்ணில்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தாலும் அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று நிருபிக்கப்பட்டிருக்கிறது. ராஜீவ் கொலை கூட இந்தவகையைச்சேர்ந்தது தான். அங்கீகரிக்கப்பட்ட அரசுகளுக்கு என்றாலும், இந்த நடவடிக்கைகள் குறித்து கண்டனங்கள் எழும் போது பதிலளிக்க வேண்டிய தேவை உண்டு. அல்லது பொருளாதாரத் தடைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. ஆனால் புலிகள் போன்ற அமைப்புக்கு இவ்வாறாக யாருக்கும் பதிலளிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒட்டுமொத்தமாக மறுப்புத் தெரிவித்து விட்டால் பிரச்சனை தீர்கிறது.

சபாலிங்கம் கொலையோ, தேடகம் தீ வைப்போ யார் நேரடியாகச் சம்பந்தப்பட்டார்கள் என்பது விசாரணைகளுக்குள் இருந்தாலும், சுட்டுவோர்களின் விரல்கள் ஒரே திசையையே காட்டி நிற்கின்றன. சபாலிங்கம் கொலைக்கு வந்த அவசர அவசரமான மறுப்பும் தேடகம் தீ வைப்பில் 'அவர்களே தீ வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது' என்ற பிரசாரமும் எதைக் காட்டுகின்றன? இவ்வாறான மனிதவிரோதச் செயல்களைச் செய்ய வேண்டிய தேவை யாருக்கு இருக்கின்றது என்பது பலருக்கும் தெரிந்த விடயம் தான். (நல்ல காலம் சபாலிங்கம் கொலைக்கு சாட்சியம் இருக்கிறது. இல்லாவிட்டால சபாலிங்கம்தற்கொலை செய்துகொண்டு விட்டார் என்று இவர்கள் பிரசாரம் செய்திருக்கக் கூடும்)

ஒரு அப்பாவி மனிதன் சட்டத்தின் பிடிக்குள் அநியாயமாகப் பலியாகக்கூடாதுஎன்பதற்காகத் தான் 'நிருபிக்கப்படும் வரை சுற்றவாளி' என்ற நிலைப்பாடு பயன்படுகிறது. ஆனால் அடிக்கடி சிறை சென்று வருகின்ற ஒரு குற்றவாளி மீது குற்றம் சுமத்தப்படும் போது நிலைமை மாறி 'தான் நிரபராதி என்பதை அவரே நிருபிக்க வேண்டிய' நிலை வருகிறது. காரணம் அவரது கடந்த கால நடவடிக்கைகள். இதைப் போன்றே தான் இவ்வாறான நடவடிக்கைகள் தங்களுடையன அல்ல என்ற நிருபிக்க வேண்டிய நிலை குற்றம் சாட்டப்படுபவர்களுக்கு உண்டு. இதற்கெல்லாம் சாட்சிகள் உண்டா என்று யாராவது கேட்டால, குற்றவாளிகள் சாட்சிகளை வைத்துக் கொண்டா குற்றம் செய்வார்கள் என்று பதில் கேள்வி கேட்க வேண்டிய நிலை இங்கே.

மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்கள் மீது நேரடியாகவும் மறைமுகமாவும் நடத்தப்பட்ட தாக்குதல்களும்மிரட்டல்களும் இன்று நேற்று தொடங்கியன அல்ல. எழுபதுகளின் நடுப்பகுதியில துரையப்பா கொல்லப்பட்டது முதல் இரண்டு தசாப்தங்களாக நடைபெற்று வருவன. நியாயப்படுத்துவதற்கு வசதியாக துரோகி என்ற முத்திரை பயன்பட்டு வந்தது. இது இறுதியில் தங்கள் இருப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக கருதப்படும் அனைவருக்குமே குத்தப்பட்டு வந்தது. கோழித் திருடர்களும் துரோகிகள், மாற்று இயக்கத் தலைவர்களும் துரோகிகள், மனித உரிமை செயற்பாட்டார்களும் துரோகிகள், கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்துவோரும் துரோகிகள், துரையப்பாவும் துரோகி, துரையப்பாவை துரோகி என்ற அமிர்தலிங்கமும் துரோகி, அமிர்தலிங்கத்தை துரோகி என்ற மாத்தயாவும்துரோகி என்று 'துரோகி' என்ற பதம் வசதிக்கு தகுந்த மாதிரித் தான் பயன்பட்டு வந்திருக்கிறது.

இந்த வன்முறைக் கலாசாரத்தின் தொடர்ச்சி தான் புலம் பெயர்ந்த நாடுகளில் நடைபெற்ற அடாவடித்தனங்கள். புலம் பெயர்ந்த நாடுகளில் பார்த்தோமானால் மற்ற இயக்கங்கள், அமைப்புகளிற்கு ஆதரவானவர்களை விட, புலி ஆதரவாளர்கள் மத்தியில தான் வன்முறைக்கான வேகம் இருப்பதை அவதானிக்கலாம். மாற்றுக் கருத்துக் கொண்டோர் நடத்துகின்ற கூட்டங்களைக் குழப்புவதாயினும் சரி, தாக்குவதாயினும் சரி, பத்திரிகைகளை மிரட்டுவதாயினும் சரி இதில புலிகளின் ஆதரவாளர்களே முன் நிற்கிறார்கள். கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ள முடியாத இயலாத்தனமும் அதிகாரத திலிருப்பவர்களின் அடியாட்கள் போன்ற திமிர்த்தனமுமே இவர்களின் இந்த நடவடிக்கைக்கான காரணங்கள். புலிகள் தொடக்கி வைத்த வன்முறைப் பாரம்பரியம் அவர்களின் ஆசீர்வாதத்துடன் புகலிடங்களில் வளர்ந்து வந்தது.

இந்த வன்முறைகளில் தங்கள் பெயர்கள் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக 'கோபம் கொண்ட மக்களின்' மேல் குற்றத்தைச் சுமத்தி வந்தார்கள். நோர்வேயில் மாற்று இயக்க பிரமுகர் நடத்திய கூட்டத்தை குழப்பிய பின்னர் 'கோபம் கொண்ட மக்கள் வன்முறையில் இறங்கினர்' என்று பிரசாரம் நடந்தது.

இந்த வன்முறையின் உச்சக்கட்டமாக சபாலிங்கம் கொல்லப்பட்டது புதிய விழிப்புணர்வை இந்த விடயத்தில் தோற்றுவித்திருக்கிறது. இவர்களின் வன்முறைகள் வெறும் தாக்குதலோடு நிற்கப்போவதில்லை, கொலைகள் வரை தொடரும் என்பதைக் காட்டியது. சபாலிங்கம் கொலைக்கும் எந்த வகையில் இவர்களால் நியாயம் சொல்ல முடியும்? கொலைக்கு இருக்கக் கூடிய நோக்கங்கள், முறைகள், அதன் பின்னணி தந்திரங்கள் என்பன வழமையான புலிகளின் பாணி என்பதால் வழமை போலவே புலிகளின் மீது குற்றம் சாட்டப்படுகிறது.

இங்கு வெளிவரும் பத்திரிகை ஒன்று தான் 'ஐரோப்பிய பாராளுமன்றம் புலிகளின் அலுவலகங்களை மூடும்படி எடுத்த முடிவு சபாலிங்கத்தின் முயற்சி என்ற கருத்து உண்டு' என்று சொன்னது. இன்னொரு பத்திரிகை அவரை டெலோ உறுப்பினர், புலி எதிர்ப்பு அரசியல் நடத்தினர் என்று சொன்னது. இவை எல்லாம் மொத்தத்தில் புலிகள் இவரைக் கொன்று விட்டார்கள், ஆனால் காரணம் இதுதான் என்று நியாயப்படுத்தவே முனைகின்றன.

தேடகம் தீ வைப்புக் கூட திட்டமிட்ட செயற்பாடு தான். அன்றைய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பேசிய கௌதமாலாவைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஒருவர் கூறியபடி 'இந்த தீ வைப்பு வெறும் குண்டர்களின் செயல் அல்ல. (Vandalism). இது திட்டமிட்ட செயல்'. யாழ்.நூலகத்திற்கு தீ வைத்தது ஒரு காட்டுமிராண்டித்தனமான செயல என்றால் இதுவும் அவ்வாறானதே.

இந்த காட்டுமிராண்டித் தனமான செயற்பாடுகள் தொடர அனுமதித்தால், குடாநாட்டுக்குள் நடைபெறுகின்ற அதே அராஜகங்கள். [illegible]டத்தி கப்பம் வாங்குதல் முதல் [illegible] மாற்றுக்கருத்துக் கொ[illegible]ரை கொல்வது வரையிலா[illegible] மனித உரிமை மீறல்களும் பு[illegible]களிலும் நீளலாம்.

'எங்[illegible]களைத் தானே நாங்கள் கொ[illegible]றும்' என்ற பாணியில் புகலிடங்கள் வரை நீ[illegible] புலிகளின் (அ)நீதி[illegible] எங்கள் பதில் என்ன? [illegible] [illegible]?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதவி விலக தேசிய பட்டியல் உறுப்பினர் மறுப்பு

தேசியப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை பதவி விலகும்படி அழுத்தம் பிரயோகிக்கப்பட்ட போதும் பலர் மறுத்து வருகிறார்கள். தன்னை பதவியிலிருந்து நீக்கினால் தான் தலைமைப்பீடத்திற்கு எதிராக நீதிமன்றம் செல்லப் போவதாக தேசியப் பட்டியல் உறுப்பினர் காளிங்க ஒபேவன்ச தெரிவித்திருக்கிறார்.

தேசியப் பட்டியல் உறுப்பினர்களை நீக்க சட்டம் இடமளிக்கவில்லை. இதனால் அவர்களை நீக்கினாலும் தேர்தல் ஆணையாளர் அனுமதிக்க மாட்டார். ஹேமா பிரேமதாசா பாராளுமன்றத்தில் நுழைவதாக இருந்தால் மட்டுமே தான் பதவி விலகுவதாக இவர் கூறியிருக்கிறார். ஆயினும் இன்னமும் ஹேமாவை உள்ளே கொண்டுவருவது பற்றி தீர்மானிக்கப்படவில்லை.

# மதமாற்றங்களுக்கு தீவிரவாத இந்துஅமைப்பு எதிர்ப்பு

இந்தியாவில் பெருமளவு நடைபெறும் மதமாற்றங்களை இந்து தீவிரவாத அமைப்பான விஸ்வ இந்து பரிசத தடை விதிக்க வேண்டும் என்று கோரியுள்ளது. வெளிநாட்டு நிதியுதவியுடன் பெருமளவில் பலர் மதம் மாறுவதாகவும் இதன் நோக்கம் மத ரீதியானதல்ல, அரசியல் ரீதியானதே என்றும் தமிழ் நாட்டி[illegible] மட்டும் ஐந்து லட்சத்திற்கு மேற்ப[illegible] அரிசனங்கள் மதம் மாறி[illegible]கவும் இந்த அமைப்பை[illegible]சார்ந்த மோகன்லால் [illegible] ஜோசி [illegible] தெரிவித்திருக்கி[illegible] இந்தியாவில் உள்ள அரிஜன[illegible]ள் தங்கள் மீதான சமூ[illegible] ஒடுக்குமுறை காரணமாக முஸ்லிம். இந்து, பௌத்த மத[illegible]கு மாறி வருகின்றனர்.

# பிரஜைகள் குழு அமைக்க முயற்சி

பிரஜைகள் உரிமை அவதானிப்புக் குழுக்கள் நாடெங்கும் அமைக்கப்பட வேண்டும் என்று அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது. பொலிஸ்மா அதிபரால் அமைக்கப்படவிருக்கும் இந்த குழுக்கள் நாட்டில் உள்ள ஒவ்வொரு பொலிஸ் பிரிவுக்கும் ஒன்று நியமிக்கப்பட்டு செயற்படும். பொலிசாரால் மீறப்படும் உரிமைகளை அவதானிக்கவும் பொலிசாருடனான விசாரணைகளுக்கு உதவவும் என்றுமே இந்த குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அப்பகுதிகளில் உள்ள முக்கிய பிரஜைகளில் பதினைந்து பேர் வரை இந்தக் குழுவில் அங்கம் வகிப்பார்கள். பொதுமக்கள் பொலிசார் பற்றிக் கூறும் முறைப்பாடுகள் குறித்து பொலிசாருடன் இந்தக் குழுக்களே பேச்சுவார்த்தையில் ஈடுபடும்.

# வசாவிளானில் தாக்குதல்

வசாவிளானில் நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் ஐந்து புலிகளும் ஒரு இராணுவத்தினரும் கொல்லப்பட்டதாகவும் ஒரு இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் இராணுவ தரப்பில் கூறப்பட்டிருக்கிறது.

புலிகளின் வள்ளம் ஒன்றும் இராணுவத்தினரின் தாக்குதலுக்கு ள்ளாகி நான்கு புலிகள் கொல்லப்பட்டிருக்கின்றனர். வடபகுதியில் கரையோரங்களில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற பகுதிகளில் கடற்படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். உட்பகுதிகளிலும் ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இன்னொரு செய்தி ஒன்றில் சிறுவிளான் பகுதியில் புலிகள் தாக்குதல் நடத்த முயற்சித்ததாகவும் அது முறியடிக்கப்பட்டதாகவும் இராணுவ தரப்பில் கூறப்பட்டது. நான்கு புலிகள் கொல்லப்பட்டு அவர்களின் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வடபகுதியில் பலவேறு இடங்களில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் விமானங்கள் தாழப் பறந்து திரிந்து மிரட்டல் வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றன. தாக்குதல் ஒன்று நடைபெறலாம் என்ற அச்சம் பரவலாக உள்ளதாக அங்கிருந்து வருவோர் தெரிவிக்கின்றனர்.

# செஞ்சிலுவைச் சங்கத்திற்கு புதிய பிரதிநிதி

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.பிரதிநிதியாக தற்போது மேரி பெர்க்கின்ஸ் என்ற பெண்மணி நியமிக்கப்பட்டிருக்கிறார். முன்பு பணியாற்றி வந்தவர் இடமாறிச் செல்வதால் இவர் நியமிக்கப்படுகிறார். இவர் ஆப்கான், கம்போடியா மற்றும் ரஷ்யக் குடியரசுகளில் முன்பு பணியாற்றியவர்.

# கடன் தொல்லையால் தற்கொலை

கடந்த இரண்டு மாத காலத்திற்குள் இலங்கையில் கடன் திருப்பி செலுத்த முடியாததால் பதினாறு விவசாயிகள் தற்கொலை செய்திருக்கிறார்கள். சமீபத்தில் 45 வயதான ஆறு பிள்ளைகளின் தாயான லொக்குமெனிக்கா 12 ஆயிரம் ரூபா கடனை திருப்பிச் செலுத்த முடியாததால் தற்கொலை செய்திருக்கிறார். இந்தக் கடன் மாதம் இருபது வீத வட்டிக்கு உள்ளூர் முதலாளிகளிடம் இந்தப் பெண் கடனுக்கு வாங்கியிருந்தார்.

பொலநறுவப் பகுதியில் மழையில் தங்கள் பயிர்கள் அழிந்ததால் விவசாயிகள் கடனை திருப்பி செலுத்த முடியாமல் தற்கொலை செய்வது அதிகரித்துள்ளது. பலர் கிருமிநாசினி அருந்தியே தற்கொலை செய்து கொள்கிறார்கள். அரசாங்கம் இது குறித்து எதுவுமே செய்யவில்லை என்று 25 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நிர்வாண இரவுகள்

பாதுகாப்பற்ற இரவு
பெண்களுக்கு
பாதுகாப்பற்ற இரவு
இப்படி இருக்கையில்
வானத்தைக் கிழித்து
வெளிவரும் இந்த விடியல்
வெளிச்சமான பகல் பொழுது
அர்த்தம் இழந்தது
பொய்யானது
தேவையற்றது

எங்கள் இருப்பிற்கு
உரிமை
உண்டென்றால்
இருண்ட வானம்
மட்டுப்படுத்தும்
சுதந்திரம்
விலைமதிக்க முடியாதது

கத்தி முனை போன்ற
கூரிய சிறகுகளை விரித்து
கோழிக்குஞ்சாய்
காவிச் சென்று
செட்டைகளை உரித்து
எங்களை சிறுமைப்படுத்தலாம்

எங்கள் இருப்பிற்கு
உரிமை உண்டென்றால்
இருண்ட வானம்
பறித்து வைத்துள்ள
என் விடுதலை
விலைமதிக்க முடியாதது

எங்கள் வாழ்வில்
சூரியன் பொய்
விடியல் பொய்
விடியலைத் துரத்தி வரும்
இரவின் கொடூரமே
நிஜம்

எங்கள் இரவுகள்
இப்படி இருக்கையில்
அதிகாலையில் மலரும்
பூக்களின் நிறங்களும்
பறவைகள் பாடும் பாடலும்
இலையை அணைக்கும்
பனித்துளிகளின் அழகும் பற்றி
எப்படி பாட முடியும்
எங்களுக்கு இவை தேவையற்றதே

பாமதி

எரிந்து போன சாம்பல்களின்
மேடுகளில் நீ மலர வேண்டும்...
உன்னை எரித்து சாம்பலாக்கிய
தீப்பந்தங்கள் வெட்கி
தலை குனிய வேண்டும்...

அறிவுச் சுடரை
எரித்து விட்டீர்கள்

தெருவிளக்குகளை
தூரிகையாக்கி
சுவர்களிலே
ஓவியம் வரையவே
நாம் கற்றுக்கொண்டோம்

நள்ளிரவில்
முகமூடிஅணிந்து
அறிவை அழிக்கவல்ல!

ஒரு தீப்பொறியால்
உலகையே அழித்து
இன்புற நினைப்பது ஏன்?

அழிவில் அத்துணை
இன்பமா உங்களுக்கு
அழிப்பதுவே உங்களுக்கு
இன்பம் என்றால்
படைத்தவனுக்கு
என்ன சொல்லப் போகிறீர்கள்?

நிவேதிகா

## விட்டுச் செல்லப் போவதென்ன?

காற்றும் ஒரு கணம் நின்றது அன்று
யாழ் நூல் நிலையம் எரிக்கப்பட்டபோது

இதயமும் ஒரு கணம் நின்றது இன்று
நம் கயவர்கள் தேடகத்தை எரித்தபோது
நமது தேசத்தை சுடுகாடாக நாசம் செய்தவர்
அன்னிய தேசத்தில் அறிவினை நாசம்செய்தல்முறையோ

குரூரம் நிறைந்த இந்தக் கொடியவர்கள்
நமக்கு விட்டுச் செல்லப் போவதென்ன?
விலைமதிக்க முடியாத சாவுகளும்
அர்த்தமற்ற அழிவுகளுமே...!

இந் நிகழ்வுகள் என்று தான் ஓயும்?
சுதந்திரம் விடுதலை என்ற கோசங்கள்
தமக்கே தாம் சமாதி கட்டிக் கொண்டனவா...?
இல்லையேல்....!
பகுக்கும் அறிவற்றோர் சமாதி கட்டினரா?

எடுத்து வாருங்கள் அந்த சவுக்கை
மனிதர்களை வேட்டையாடும்
இந்தக் காட்டு மிருகங்களை
சிறைதனில் அடைத்திடும் வல்ல
சங்கிலியால் பிணைத்திடுவோம்
அவர் தம் தொட்டதை அடக்கிடுவோம்

இளம் குமணன்
(ரொரன்ரோ)


கிளிநொச்சி கருணை நிலைய நிதிக்காக
நாட்டியக் கலாலயம்
திருமதி வசந்தா டானியல்
தயாரித்து வழங்கும்
சிவதரிசனம்

யூலை 9ம் திகதி ஸ்காபரோ
பேர்ச்மவுண்ட் பார்க் கல்லூரி
மண்டபத்தில் நடைபெறுகிறது




உணவு வகை தயாரிக்க
ஆள் தேவை
சகல இலங்கை உணவுவகைகளையும்
தயாரிக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த
சமையல்காரர் தேவை
(விசேடமாக கொத்துரொட்டி, புரியாணி,
சிற்றுண்டி வகைகள்)
UNIQUE CATERERS
292 3535
498 7481




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குடும்பத்திற்காக ...



பிரெஞ்சுமூலம்; ஆல்பேர்த்தோ மோருவியா
தமிழில்; க. கலாமோகன்

(உலகப் புகழ் பெற்ற இத்தாலிய எழுத்தாளரான ஆல்பேர்த்தோ மோருவியா (ALBERTO MORAVIA) 1907 ஆம் ஆண்டு ரோமாபுரியில் பிறந்தார். ஒரு கவிதைத் தொகுப்புடன் தனது இலக்கிய வாழ்க்கையைத் தொடங்கிய இவர், மிகவும் விரைவிலேயே தனது கவிதை முயற்சிகளைக் கைவிட்டுக் கொண்டார். 1929 இலே தனது முதலாவது நாவலை வெளியிட்ட இவரது, முதலாவது, சிறுகதைத் தொகுப்பு 1935 இல் பிரசுரமானது. நவயதார்த்தம், இருத்தலியல் இவைகளின் நிழலில் தனது படைப்பியக்கத்தை நடத்தும் மோருவியாவின் எழுத்துகளிலே சர்ரியலிஸப் பாதிப்புகளும் உள்ளன. நவீன உலகின் சமூகப் பிரச்சனைகள், புத்திஜீவிகள் பிரச்சனைகளைக் கலாபூர்வமாக்குவதில் வல்லவரான இவர், நாடகங்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். இத்தாலிய மூலத்தில் உள்ள இக்கதை, பிரெஞ்சு மொழிபெயர்ப்பை மூலமாகக் கொண்டே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது).

இரவு நடந்த விஷயங்களின் பின்னர், பெடரிக்கோ குடும்பத்தைச் சந்திப்பதை நான் தவிர்த்துக் கொண்டேன். உண்மையிலேயே நான் எரிச்சலடைந்திருந்தேன். எப்படி? பயிற்றப்பட்ட ஒரு துணிச்சலான தொழிலாளி, இரண்டு பெண்பிள்ளைகளின் தந்தை, ஒரு உயரமான மனிதன், சக்திமிக்கவன், நல்ல அந்தஸ்திலுள்ளவன், அமைதியானவன், பார்த்த மாத்திரத்தில் நம்பிக்கையைத் தோற்றுவிப்பவன்– இப்படிப்பட்ட ஒருவனுக்கு இரட்டை வாழ்க்கை இருந்தது. எப்படிப்பட்ட இரட்டை வாழ்க்கையாம். பகலில் மெக்கானிக். இரவில் கள்வன், நாள் முழுவதையும் தொழிலகத்தில் என்னுடன் கழிப்பது, இதைவிட அவனது மனைவியுடனே, குழந்தைகளுடனே குடும்பமாக எங்களைச் சந்தித்துக் கொள்வது.. இரவிலோ களவெடுக்கப்பட்ட ஒரு வண்டியில், குற்றச் செயல்கள் புரியும் குழுக்களுடன் வீதிவீதியாகச் சுற்றுவது. அப்படியும் இப்படியுமாகக் கேட்ட செய்திகளின்படி, இரண்டு வருடத்தில் ஐந்து அல்லது எட்டுக் கடைகளைக் கொள்ளையடித்திருக்கின்றான். பகலில் கௌரவமான தொழிலாளி, இரவிலே கறுப்புத்துணி முகத்தில், பொக்கெட்டுக்குக்குள் ஒரு குறடு, இடையில் ஒரு துவக்கு, கொலரோ,ரையோ, இல்லாமலும் முன்னுக்கு நீண்ட நாடி, மடிந்த இமைகள் ஆகியவற்றோடு, இவனது போட்டோவை பத்திரிகைகளில் நான் கண்டிருக்காது விட்டால் இதனை என்னால் நம்பியிருக்கமுடியாது என்று சத்தியம் பண்ணி உங்களுக்குச் சொல்வேன். இது உண்மையாயிருக்க வேண்டும் என என்னை நம்பச் செய்ய நான் விட்டுக் கொடுக்கவில்லை. இது உண்மையாக இருக்கக்கூடாது எனுமளவிற்கு செய்தி என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது. நான் சற்றே கோபப்பட்டிருந்தேன். ஏதோ தாக்கப்பட்டவன் போன்றும் உணர்ந்தேன். இன்னொரு துக்க நிகழ்ச்சிக்கு போகக்கூடியதைப்போல என்னால் அவனது குடும்பத்தைப் போய்ச் சந்திக்க முடியாததாகவிருந்தது.

முடிவில், அங்கே போகுமாறு என்னை வற்புறுத்தியது எனது மனைவியே. நான் மறுத்தேன். "பெடரிக்கோ என்னுடன் இப்படி நடந்திருக்கக்கூடாது. இப்படியொரு இரட்டை வாழ்க்கையை இரண்டு வருடங்களாக நடத்திக் கொண்டிருந்ததை எனக்கு பு... ,பதா?"

"அட, இப்போது என்னவாம்? சொல்லியிருந்தால் நீ பெரிதாக எதனைச் செய்திருப்பாய்?" என மனைவி கேட்டாள்.

"நீ என்ன சொல்ல வருகின்றாய்?"

"நீ என்ன செய்திருப்பாய்? காட்டிக் கொடுத்திருப்பாயோ?"

"ஆ, அப்படியாயின் காட்டிக் கொடுப்பவனாக நான் மாறியிருக்க வேண்டும் என்கின்றாயா?"

"பார்த்தாயா, உன்னால் அது முடியாது. அவன் சொல்லியிருப்பின் அவனைக் காட்டிக் கொடுக்கும் துணிச்சல் உனக்கு வந்திருக்காது. இப்போது அவன் சிறையில். நீயோ மாறாக அவனைக் கண்டிருக்கின்றாய். உன்னோடேயே நீ முரண்பட்டுக் கொள்வதை நீ விளங்குகின்றாயா?" என வெற்றிப் பெருமிதத்துடன் சொன்னாள். எனக்கோ என்ன சொல்வதென்று விளங்கவில்லை.

சரி, போய்ப்பார், இனியாவது ஒரு நல்ல காரியத்தைச் செய்" என மனைவி சொன்னவுடன், இந்தக் கடைசி ஞாயம் எனக்கு நல்லதாகப் பட்டது. எனவே, குடும்பத்தைப் போய்ப் பார்க்க முடிவெடுத்தேன்.

இதற்கு மறுநாள் எதிர்பாராத விதமாக புனித ஜோஸப் தினமாக இருந்தது. பெடரிக்கோவின் மனைவி ஜியூஸபினா என்று அழைக்கப்பட்டாள். எனது வீட்டிற்குக் கீழேயுள்ள மதுக்கடையில் நான் இருபத்தைந்து பொரித்த பண்டங்களை வாங்கினேன். பின் பஸ் எடுக்கப் போனேன். புனித போல் பகுதியிலுள்ள, ஜூனியா

7ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேடகம் எரிப்பை கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம்



தேடகம் நூல் நிலையம் எரிக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து ரொறன்ரோவில் கண்டன ஊாவலம் ஒன்று நடத்தப்பட்டது. இலங்கையில் ஜனநாயகத்திற்கான இயக்கம், மனித உரிமைகளுக்கான இலங்கையர்கள், விழிப்பு, கிரியா குரல் ஆகியவற்ருல் குறுகிய நேர இடைவெளிக்குள் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கானேர் கலந்து கொண்டனர். வெலஸ்லி பகுதியில் தேடகத்தின் முன்ஞல் ஆரம்பமான இந்த ஊர்வலம் ஒன்ராறியோ சட்டசபை கட்டடம் வரை சென்றது. இந்த எரிப்பை கண்டிக்கும் சுலோகங்களே தாங்கிய பதாகைகளே ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் கொண்டு சென்றனர். 'அன்று யாழ் நூலகம், இன்று தேடகம்' 'மௌனம் எமது மொழியல்ல, எமது மொழியும் தமிழ்தான்' போன்ற பதாகைகள் காணப்பட்டன.

ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் பலர் பேசினர். ரொறன்ரோ மேயர் பதவிக்கான வேட்பாளர் பார்பரா ஹோல் பேசிய போது இந்த நூலக எரிப்பைக் கண்டித்ததுடன் ரொறன்ரோவின் இவ்வாருன வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டிய அவசியம் பற்றியும் தெரிவித்தார். கௌதமாலாவைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஒருவர் பேசும் போது 'இது வெறும் வன்முறை அல்ல, திட்டமிட்ட தாக்குதல். இது தமிழ் மக்களுக்கு தேடகத்திற்கு எதிரான தாக்குதல் மட்டுமல்ல. எல்லா இனங்களிலும் இவ்வாருன ஜனநாயக மறுப்புகள் உண்டு. இதற்கெதிராக நாங்கள் ஒற்றுமையாக எங்கள் பலத்தைக் காட்ட வேண்டும்' என்று தெரிவித்தார். கென்யாவைச் சேர்ந்த இன்னெரு மனித உரிமையாளர் பேசும் போது தான் தேடகத்தில் உள்ள நூல்களால் பயன்பட்டு வந்ததாகவும் இதனுல் அதன் பாதிப்பை தான் நேரடியாகவே உணரக் கூடியதாக உள்ளது என்றும் இவ்வாருன நடவடிக்கைகள் கண்டிக்கப்பட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினுர். மற்றும் சோசலிச அமைப்பு உட்பட வேறு அமைப்புகளேச் சேர்ந்தவர்களும் இக்கூட்டத்தில் உரையாற்றினர். தேடகம் எநத விதமான அரச நிதியுதவியுமின்றி அங்கத்தவர்களின் சொந்தப் பணத்திலும் பொதுமக்களின் நிதியுதவியிலுமே இயங்கியது என்ற கருத்தை அங்கு பேசிய பலரும் வலியுறுத்தியிருந்தனர்.

இந்த நூலகத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய அவசியத்தை தேடகம் சார்பில் அமிர்தவர்ஷினியும் பா.அ. ஜயகரனும் வலியுறுத்தினர். இது தொடர்பாக உதவிகள் புரிய விரும்புவோர் தங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டனர்.

இந்த ஊர்வலம் பற்றி ரொறன்ரோ ஸ்டார், சண் போன்றன செய்தி வெளியிட்டதுடன் வானெலி நிலேயங்களும் செய்திகளே ஒலிபரப்பின. சபாலிங்கம் கொலே தொடர்பாக தேடகம் நடத்திய கண்டனக் கூட்டம், மற்றும் தேடகத்தின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தியுற்றவர்களின் செயற்பாடே இந்த தீவைப்பு என்பதை அங்கு வந்த சிலரை மேற்கோள் காட்டி அந்த செய்திகள் அமைந்திருந்தன. அத்துடன் பயம் காரணமாக பலர் ஊர்வலத்தில் கலந்து கொள்ளவில்லே என்றும் சிலர் கருத்து தெரிவித்திருந்தனர். இலங்கைப் பத்திரிகைகளும் இது பற்றி செய்தி வெளியிட்டுள்ளன. சண்டே ரைம்ஸ் முன்பக்கச் செய்தியாக இந்த ஊர்வலம் பற்றி செய்தி வெளியிட்டிருந்தது.

---

## குடும்பத்திற்காக ...

வீதியிலமைந்த புதிய கட்டிடம் ஒன்றில்தான் நான் வசிப்பது. பொரியல் பண்டங்களேக் கொண்ட பக்கெட்டை மடியில் வைத்துக்கொண்டு பஸ்ஸில் நான் இருந்தேன். பெடரிக்கோ பற்றி யோசிக்க வெளிக்கிட்டேன். அந்த விஷயம் தொடர்பாக எனக்கு எதுவுமே விளங்கவில்லே. நல்ல தந்தையாகவும், இதமான கணவஞகவும் இருந்த பெடரிக்கோ கடைகளின் கண்ணுடிகளே உடைக்க இரவில் அலேந்து திரியும் ஒருவஞக இருந்தான் என்பதை என்ஞல் தொடர்பு படுத்திப் பார்க்க முடியாமல் இருந்தது. "நாங்கள் ஒன்றில் நல்லவர்களாக இருக்க வேண்டும் அல்லது கெட்டவர்களாக இருக்க வேண்டும்" எனச் சிந்தித்தேன். அனேத்துக் குடும்பத் தந்தையும் தர்க்கப்படி நல்ல கௌரவமான தந்தையாக இருக்க வேண்டும். அப்படியில்லேயெனில், அவனுக்கு எதிலும் நம்பிக்கையில்லே என்றுதான் அர்த்தம் அப்படியாயின் ஒரு நல்ல தந்தையாக இருக்க இவஞல் எப்படி முடிந்தது? திபேர் நதிக்கரை வழியாகப் பஸ் ஓடிக் கொண்டிருந்தது. ஒஸ்தி ரயில் நிலேயத்திற்கு முன் நான் இறங்கி, புனித போலிற்குப் போக இன்னெரு பஸ் எடுத்தேன்.

திபேரிலிருந்து, பெடரிக்கோவின் வீடு தூரத்தில் இல்லே. தேவாலயத்திலிருந்து சற்று தூரத்தில் உள்ளது. ஒரே மாதிரியாக அமைந்த புதிய கட்டிடக் கூட்டங்களிலொன்றில்தான் அவனது வீடு இருந்தது. ஜன்னல்கள் திறந்து விடப்பட்டு அழகாகத் தோற்றமளித்தன. புனித ஜோஸப் தினத்தைப் பொறுத்தமட்டில், இது ஒரு அழகிய நாள். வானம் நீலமாகவும், சூரியப்பிரகாசம் பலகியுமாயிருந்தது. கட்டிடங்களின் மத்தியிலிருந்த பச்சைப் பசேலென்ற புற்படுக்கையில் குழந்தைகள் பந்து விளேயாடிக் கொண்டிருந்தன. காய்வதற்காகப் பலகணியில் கட்டப்பட்டிருந்த ஆடைகள், வசந்த காலத்தின் இளங்காற்றுப்பட்டு கொடிகள் போல அசைந்தன.

மீதி அடுத்த வாரம்..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது

பரீட்சித்துப் பாருங்கள்
Try First


பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

---

## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!

## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலே பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ஹெபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.

### NERVOGEN NERVE FOOD




உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரன், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.


அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.
Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada

### CHATAK: CURRY EXCELLENT




Chatak Madras Curry Powder இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது. Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix போன்றவையும் கிடைக்கும்.

### DR.ROBERT'S GLUCOSE




குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ஹெபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது. ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையின் அரசியல் வானில் புதிய நட்சத்திரம்

தற்போது சுதந்திரக் கட்சியில் சந்திரிகாவின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது. பட்டத்து இளவரசியாக சிறிமாவுக்கு பின்னர் அவரே வருவதற்காக உபாயங்கள் வகுக்கப்பட்டு உபதலைவி பதவி உருவாக்கப்பட்டது. தனது தந்தையையும் கணவனையும் அரசியல் படுகொலைகளுக்கு பலி கொடுத்த இவர் இலங்கை அரசியலில் புதிய தாரகையாக மிளிர்கிறார். அடுத்த தேர்தலில் இவரே ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடக் கூடும் என்று பரவலாக நம்பப்பட்ட போதும் தான் பின்னணியில் இருந்து செயற்படுவதையே விரும்புவதாக இவர் கூறுகிறார். 'யாராவது வானத்திலிருந்து விழுந்து தலைமைப்பதவியை ஏற்று நடத்துவார்களாயின் நான் சாதாரணமாகவே என் பணியைச் செய்யலாம். ஆனால் தற்போதைய நிலையில் இது சாத்தியமில்லை' என்கிறார் இவர். இவருடனான பதவிப் போட்டியிலேயே அனுரா கட்சி மாறி ஐ.தே.கட்சிக்கு கட்சி மாறினார்.

இவரது கட்சியின் சார்பில் ஒஸி போட்டியிட்டதாலேயே தனது தாய் கடந்த தேர்தலில் தோல்வியுற வேண்டியிருந்தது என்று அனுரா முன்பு கூறியிருந்தார். இதனால் இவர் கட்சி மாறி சுதந்திரக் கட்சிக்குள் நுழைந்ததால் தனது பட்டத்து இளவரசர் பதவியைப் பறிக்கக் கூடும் என்பதில் இருந்த அச்சம் காரணமாக இரண்டு பேருக்கும் இடையில் பலத்த மோதல் நிலவியது. கடந்த மாகாண சபைத் தேர்தல்களிலும் அனுரா சந்திரிகா பற்றி மோசமாகத் திட்டி மேடைகளில் பேசிய போதும் சந்திரிகா அது பற்றி எதுவுமே தெரிவிக்கவில்லை.

மேல் மாகாண சபையில் முதல்வராக தினசரி பதினாறு மணி நேரம் இவர் கடமையாற்றுகிறார். தனது இரு பிள்ளைகளுடன் நேரத்தைக் கழித்து இசை கேட்டல், வாசித்தல், எழுதுதலிலேயே தனது நேரத்தைக் கழிக்க விரும்புவதாக இவர் தெரிவிக்கிறார்.

48 வயதான இவரது இரத்தத்திலேயே அரசியல் கலந்துள்ளது. இவரது தந்தையும் தாயாரும் பிரதமர்கள். தந்தையின் மடியில் உட்கார்ந்தபடியே அவரது அரசியல் கூட்டங்களில் கலந்து கொண்டவர் இவர். 'தனது வழியை நான் தான் பின்பற்றப் போகிறேன் என்று அப்பா அடிக்கடி சொல்வார். அவர் என்னைக் கூட்டங்களுக்கு கூட்டிச் சென்றதுடன் மேடையில் பேசவும் பயிற்சி தந்தார்' என்கிறார். இவருக்கு பதினான்கு வயதாயிருந்த போது தந்தை கொல்லப்பட்டார். முதலில் தனது தாயின் கட்சி சார்பாக அரசியலில் கலந்து கொண்ட இவர் பின்னர் கணவன் விஜய குமாரணதுங்க பிரிந்து தனியே கட்சி அமைத்த போது அவருக்காக அரசியல் பிரசாரம் செய்தார்.

பாரிஸில் அரசியல் விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றவர். அபிவிருத்தி பொருளாதாரத்தில் கலாநிதிப் பட்டப் படிப்பை இடையில் நிறுத்தியவர். 1988ல் கணவன் கொல்லப்பட்டார். தனது இரண்டு பிள்ளைகளுடனும் அதன் பின்னர் வெளிநாடு சென்ற இவர் மீண்டும் வந்து சுதந்திரக் கட்சியில் சேர்ந்தார்.

பின்னர் மேன் மாகாண தேர்தலில் போட்டியிட்டு அதிகப்படியான வாக்குகளைப் பெற்றார். இதன் பின்னர் தென் மாகாணத் தேர்தலில் பிரசாரத்தில் ஈடுபட்டு வெற்றியை உறுதி செய்தார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பங்குபற்றுவீர்களா என்று கேட்ட போது 'அது கட்சியைப் பொறுத்தது. நான் அதற்காக அலையவில்லை. கட்சியும் அதன் தலைவியும் முடிவு செய்தால் அது பற்றி நான் சிந்திப்பேன்' என்றிருக்கிறார். சிறிமாவே அடுத்த தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதாக இருந்த போதும் சந்திரிகாவே வெல்லக் கூடிய சாத்தியங்கள் இருப்பதாக கருதப்படுகிறது.

'முக்கியமான பிரச்சனை வாழ்க்கைச் செலவே. எண்பது வீதத்திற்கு மேலானவர்கள் தங்கள் வருமானம் கடந்த பதினேழு வருடங்களாக குறைந்து செல்வதைக் கண்டிருக்கிறார்கள். அடுத்தது ஜனநாயகம் இல்லாதிருக்கும் பிரச்சனை, மக்கள் அரசாங்கத்தின் ஊழலால் அதிருப்தியுற்றிருக்கிறார்கள்' என்கிறார் சந்திரிகா.

தமிழர் பிரச்சனை பற்றிக் கூறும் போது 'புதிய திட்டங்களை தமிழ் அமைப்புகளுடன் பேச்சவார்த்தை நடத்துவதற்காக வரைந்து வருகிறோம். எங்களிடம் அதிகமான நம்பகத்தன்மை இருப்பதாகவும் அரசாங்கத்தை விட அவர்களுடன் பேசுவதற்கு அதிகமான சந்தர்ப்பம் இருப்பதாகவும் நம்புகிறோம்' என்கிறார்.

எழுபதுகளில் உணவுக்கான தட்டுப்பாடும் கியூ வரிசைகளும் கொண்ட எண்ணப்பாடு சுதந்திரக் கட்சியின் வெற்றிக்கு தடையாக இருக்கலாம். ஆனால் திறந்த பொருளாதாரக் கொள்கையையே தாமும் கடைப்பிடிக்கப் போவதாக இவர் கூறுகிறார்.

# பத்திரிகையாளரை நடுநிலையாய் இயங்க ஜனாதிபதி கோரிக்கை

அடுத்து வரும் தேர்தல்களில் தொடர்பு சாதனங்கள் நடுநிலையாகவும் சுதந்திரமாகவும் இயங்க வேண்டும் என்று ஜனாதிபதி கேட்டுள்ளார். தொடர்பு சாதன பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாடு ஒன்றில் பேசிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு சரியான தகவல்களைக் கொடுத்து, தேசிய நலனின் அடிப்படையில் பொறுப்போடு நடந்து, தேர்தல் விடயங்களை ஆராய வேண்டும் என்று அவர் கூறினார். சில பத்திரிகைகளுக்கு தனியான நோக்கங்கள் இருக்கலாம், ஆனால் தேர்தல் நேரத்தில் தேசிய நலனை முன்னிட்டு அவை மறக்கப்பட வேண்டும் என்றும் தனது அரசு பத்திரிகைச் சுதந்திரத்தைக் காக்கும் என்று கூறிய அவர் பத்திரிகைச் சுதந்திரம் என்பது காட்டுக் கழுதையின் சுதந்திரம் அல்ல என்றும் தெரிவித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜோசப் வாஸ் அடிகளுக்கு பட்டம் அளிக்க பாப்பரசர் வருகை

போப் ஆண்டவர் அடுத்த வருடம் இலங்கைக்கு வரவுள்ளார். இவர் இலங்கையில் சேவையாற்றிய ஜோசப் வாஸ் அவர்களுக்கு முத்திப்பேறு பட்டம் அளிக்கவுள்ளார்.

ஜோசப் வாஸ் அடிகளார் 1687ல கத்தோலிக்கர்களுக்கு எதிரான டச்சுக்காரர்களின் அடக்குமுறைகள் அதிகமான காலத்தில் அடிமைகள் வந்த கப்பலில் இந்தியாவிலிருந்து தனது புனித உபகரணங்களை ஒரு வேலையாளின் உடைகளுக்குள் மறைத்துக் கொண்டு இலங்கை வந்தார். மதப் பிரசாரம் செய்யவும் ஏழைகள். நோயாளிகளை பராமரிக்கவும் 24 வருடங்கள் இவர் சேவையாற்றினுர். கத்தோலிக்க மதத்தை அளிக்க டச்சு சீர்திருத்த திருச்சபை எடுத்த முயற்சிகளை முறியடிக்க இவர் ஆற்றிய பணி மகத்தானது. இவரது செயற்பாடுகளை வத்திக்கான் உணர்ந்து இவருக்கு முத்திப்பேறு பட்டம் அளிக்கிறது. இது புனிதர் பட்டத்திற்கு முன்னையதாகும்.

ஜோசப் வாஸ் அடிகளார் பற்றி மக்கள் அறிந்திருப்பதை தற்போது வத்திக்கான் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் அவர் இல்லாவிட்டால் கத்தோலிக்க மதம் 150 வருட டச்சு ஆட்சியில் தப்பியிருக்க முடியாது என்றும் அவர் பற்றி பல நூல்களை எழுதிய டொன் பீற்றர் அடிகளார் கூறுகிறுர்.

போத்துக்கேயரை டச்சுக்காரர் யாழ்ப்பாணத்தில் தோற்கடித்த பின்னர் 29 வருடங்களின் பின்னர் இவர் இந்தியாவிலிருந்து வந்தார். டச்சுக்காரர் கத்தோலிக்க மதத்தை தடை செய்து அங்கிருந்த 120 மதப்பிரசாரகரை வெளியேற்றினர். தற்போது டச்சுக்காரரின் கல்வின் மதம் முற்றுக இலங்கையில் இல்லாது போய் விட்டது. ஆனுல் கத்தோலிக்க மதம் தொடர்ந்தும் வளர்ந்து வருகிறது.

கத்தோலிக்கராக மாறிய பிராமண இனத்தில் வாஸ் பிறந்தார். 25 வயதில் கோவாவில் கத்தோலிக்க குருவாகி 11 வருடங்களின் பின்னர் இலங்கை வந்தார். பத்து வருட காலமாக இவர் ஒருவரே இலங்கையில் இருந்த ஒரே குருவானவர். வெறுங்காலுடன் கிழிந்த மேலாடையுடன் எலும்பும் தோலும் போன்ற உருவமாக இவர் அலைந்து திரிந்து மதம் பரப்பினுர்.

1692ல் இவர் கண்டிக்கு சென்றுர். இந்தப் பகுதி அந்த நேரம் டச்சுக்காரரின் ஆட்சிக்குள் கண்டி வரவில்லை. சிங்கள மன்னரான விமலதர்மசூரிய இவரை போத்துக்கேய உளவாளி என்ற பயம் காரணமாக இவரை சிறையில் அடைத்தார்.

கண்டியில் நீண்ட வரட்சி காரணமாக மழைபெய்யும்படி இவரை வேண்டுதல் செய்யுமாறு கேட்டார். பகிரங்க இடத்தில் பீடம் அமைத்து

16ம் பக்கம் பார்க்க..

உ

சோதிடம்

★ ஜாதகக் குறிப்பு எழுதுதல் Raphael's Astronomical Ephemeries இன் அடிப்படையில் பாவ, கிரகஸ்புடகங்கள் தயாரிக்கப்படும். வேறு நாடுகளில் பிறந்தவர்களுககும் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் பிறந்தவர்களுக்கும் ஜாதகக் குறிப்பு எழுதப்படும்.

★ ஜாதகங்கள் பரிசீலிக்கப்பட்டு பலன் கூறப்படும்.

★ அதிட்ட விஞ்ஞான அடிப்படையில் பெயரிடுதல்

★ சுபமுகூர்த்தம் நிச்சயித்தல்

★ பாவஸ்புடக ரீதியாக கிரகபாவம் கணிக்கப்பட்டு அங்காரகதோச பரிகாரம் பற்றிய கருத்துக்கமைவாக விவாகப் பொருத்தம் பார்த்தல்

உங்கள் பிரச்சனை எதுவானுலும் சோதிட ஆலோசனை பெற நாடுங்கள்.

சி.சிதம்பரப்பிள்ளை
இளைப்பாறிய ஆசிரியர் (சாவகச்சேரி)
அனுபவமிக்க சோதிடர்
தொடர்புகளுக்கு:
90 Digby Cresent (Brimley/Steeles)
Markham, Ont,L3R 7G7
(905) 513-9840

கிறிஸ்தவ திருமணங்களில் மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை, அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் வாடகைக்கு பெற்றுக் கொள்ள

மாஜி
796 2672

பூங்கொத்துக்கள் நீங்கள் விரும்பிய வடிவங்களில் பெற்றுக் கொள்ளலாம்

Net, Colorful Flower Bouquet, Flower Basket



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியத் தேர்தல் வன்முறைகள் தமிழகத்தில் அதிமுக வெற்றி

உத்தரப் பிரதேசத்தில் நடைபெற்ற இடைத்தேர்தல் வன்முறைகளில் முலாயம் சிங் யாதவின் சமாஜவாதிக் கட்சி ஆதரவாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இரு குழுக்களுக்கு இடையில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் மேலும் இருவர் காயமடைந்தனர்.

துப்பாக்கி சூட்டுக்கு காரணமானவர்கள் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சாட்சியங்கள் கூறுகின்றன. ஆறு தொகுதிகளுக்கு நடந்த தேர்தலில் ஐம்பது வீதமான வாக்காளர்கள் பங்குபற்றினர்.

உத்தரப் பிரதேசத்தில் சாதி அடிப்படையிலேயே முக்கிய அரசியல் நடத்தப்பட்டு வருகிறது. பீகாரிலும் இதே நிலைமை தான். அங்கும் ஜனதா தளமே ஆட்சியில் உள்ளது. ஆனால் வைசாலி தொகுதியில் உயர்ஜாதி இந்துக்களின் மக்கள் கட்சியே வெற்றி பெற்றுள்ளது.

பதினேழு தொகுதிகளில் நடைபெற்ற தேர்தல்களில் பத்து தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது. ஐந்து பாராளுமன்ற தொகுதிகளிலும் ஐந்து சட்டசபைத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ளது. மொத்தம் ஏழு பாராளுமன்ற தொகுதிகளிலும் பத்து சட்டசபை தொகுதிகளுக்கும் தேர்தல் நடந்தது.

தமிழகத்தில் நடைபெற்ற இரண்டு சட்டசபைத் தேர்தல்களிலும் அ.தி.மு.கவே வெற்றி பெற்றிருக்கிறது. பெருந்துறையில் இரண்டாம் இடத்தில் வை.கோவின் கட்சி வந்திருக்கிறது. தி.மு.க ஆதரவுடன் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி மூன்றாமிடத்தில் வந்தது. மைலாப்பூரில் நடைபெற்ற தேர்தலில் அ.தி.மு.க முன்னணி வகித்த போதும், தேர்தலில் முறைகேடுகள் நடந்ததால் முடிவுகளை அறிவிப்பது பிற்போடப்பட்டுள்ளது.

# மாத்தயாவின் ஆதரவாளருக்கு மரண தண்டனை

மாத்தயாவின் ஆதரவாளர்களான புலிகள் மூவருக்கு புலிகள் இயக்கம் மரண தண்டனை விதித்திருக்கிறது. மாத்தயாவிற்கு விசுவாசமாக இருந்ததாக குற்றம் சாட்டி இவர்களுக்கு வவுனியாவில் வைத்து மரண தண்டனை விதிக்கப்பட்டது. இரண்டு இயக்கத்தவர்களும் ஒரு பொதுமகனுமே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் ஆவர். இவர்களது உடல்கள் கடந்த வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டன.

லெப்டினனட் ஜெரபேட், இரண்டாவது லெப்டினனட் சங்கர் ஆகியோரும் பொதுமகனை ஜெயகுமார் என்பவருமே கொல்லப்பட்டவர்கள். இதில் ஜெயக்குமார் என்பவர் சென்ற வாரமே கைது செய்யப்பட்டவர்.

# கொல்லப்பட்ட படையினர்

இந்த வருடத்தில் மொத்தம் 86 படையினரும் 252 புலிகளும் 49 பொதுமக்களும் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். மே 28ம் திகதி வரையான புள்ளிவிபரமே இது.

இரு தரப்பிலும் நூற்றுக் கணக்கானோர் காயமடைந்ததுடன் இரண்டு இராணுவத்தினர், இரண்டு பொலிசார், ஒரு ஊர்காவற்படையினர் ஆகியோர் காணமல் போயுள்ளனர். இந்த மாதமே அதிகளவில் இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். 28 இராணுவத்தினர் இம்மாதம் கொல்லப்பட்டுள்ளனர்.

# பி.பி.சி தடை நீங்கும்

பி.பி.சி நிகழ்ச்சிகளில் இலங்கை பற்றிய விடயங்கள் வருவதைத் தடை செய்கின்ற பழக்கத்தை இலங்கை அரசு நிறுத்தவுள்ளதாக தகவல் அமைச்சர் ரெரூன் பெணண்டோ தெரிவித்துள்ளார். இது தணிக்கை அல்ல என்றும் தனியார் ஒளிபரப்பு நிறுவனங்களுடனான ஒப்பந்தங்கள் காரணமாக ஏற்பட்டது என்றும் கூறிய இவர் விரைவில் இந்த தடை நீக்கப்படலாம் என்று தெரிவித்திருக்கிறார்.

## பென் சூரியனின் குட்டிக்கதை

# விலாசம்

பென் சூரியனுக்கு ஊரில் இருந்து வந்த கடிதத்தைக் கண்டதும் தலை வெடித்தது. பென் சூரியனின் வீட்டாருக்குத் தெரிந்த ரங்கன் இப்போதுதான் ஊருக்குப் போனான். அங்கே புலிகளின் போராட்டத்திற்கு தனது பங்களிப்பைச் செய்யவும், அதாவது கப்பப் பணத்தைக் கொடுக்கவும், இங்கே வெல்பெயார் எடுக்க ஒரு துணை வேண்டும் என்பதற்காகவும் ரங்கன் ஊருக்குப் போனான். போன ரங்கன் சும்மா இருந்தானா? பென் சூரியன் பற்றி வீட்டாரிடம் அண்டி விட்டான். 'உவன் பென் சூரியனுக்கு வேலை இல்லை, சும்மா எழுதிக் கொண்டிருக்கிறான். வேலை செய்து உழைப்பம் எண்டில்லை' என்று தான் ஏதோ பெரிய மனிதன் மாதிரி வீட்டாரிடம் விளாசியிருக்கிறான்.

இத்தனை வருடம் தெரிந்த பென் சூரியனை விட, இத்தனை நிமிடம் தெரிந்த ரங்கனை நம்பிய அவர்கள் எல்லாருமாகச் சேர்ந்து திட்டித் தீர்த்த கடிதம் தான் இந்த தலை வெடிப்புக்கு காரணம்.

இந்த ஊருக்குப் போறவர்களால் பெரிய துன்பம். போனமா, புலிக்கு காசு கொடுத்தமா, கலியாணம் செய்தமா, வந்தமா என்று இல்லாமல், கனடாவில் தாங்கள் ஏதோ அரசாங்க உத்தியோகம் பார்க்கிற மாதிரியும் மற்றவர்கள் எல்லாம் அரசாங்கத்திடம் பிச்சை எடுக்கிறார்கள் என்ற மாதிரியும் கதை அவிழ்த்து விட்டு விடுவார்கள். இதை அந்த சனங்கள் நம்பி, 'அங்க பார், அவன் லட்சக்கணக்கில கொண்டு வந்து செலவழிக்கிறான். நீ உங்கஎன்ன செய்கிறாய்?' என்றுதிட்டி கடிதம் வரும்.

இவர்கள் தாங்கள் வெல்பெயரில் இருப்பதையோ, சீட்டுக்காசை இடையில் கழிச்சு எடுத்ததையோ, அல்லது வட்டிக் கொடுத்துத் தான் தாங்கள் காசு சம்பாதிப்பதாயோ சொல்ல மாட்டார்கள். பாருங்கள் ரங்கனை.

24 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# டூ....டூ....டுயட்...டுயட்....டூ; டூ விடும் பாலச்சந்தர்!

**பாலசந்தர் ஒருமுறை சொன்னார் தன்னைப் புரிந்து கொண்ட ரசிகர்கட்கு தன் முயற்சிகள் புரியும் என்று. ஆனால் பாலசந்தர் ரசிகர்களை புரிந்து வைத்துக் கொள்ளவில்லை என்பதற்கு இந்தக் காதல் பாட்டு ஒரு சான்று.**

**ஒரு காலமும் இல்லாமல் பல பெண்கள் ஆண்களை குழு நடனமும், சண்டைகளும் அறுவை (நகைச்சுவை) யும் கலந்து ஒரு வர்த்தக மசாலாவை பாலசந்தர் முதன் முதல் தந்துள்ளார். அது அவரது இதுநாள் வரை இருந்த சூட்சுமத்தை சிதறடித்து விட்டது. இதனிலும் தரமாய் இனிப்படம் எடுக்க பாலசந்தரால் முடியாவிடில் இத்துடன் ஒதுங்கிக் கொள்வது நல்லது.**

நல்ல படமாய்ப் பார்க்க வேண்டுமென என் மனைவி அடிக்கடி கேட்டுக் கொள்வார்.– நல்ல படம் எனும்போது சண்டைகள், கொலைகள், வீர சாகசங்கள் என இல்லாமல் மனதைத் தொடக்கூடிய உருக்கமான கதை இருக்க வேண்டும் என்பதே அதன் பொருள். புரிந்து கொண்டேன்.

பாலசந்தர் படம் ஒன்று வரட்டும் போவோம் என நானும் சொல்லி வைத்திருந்தேன். ஏனெனில் நல்ல படம் என்பதற்கு அர்த்தம் தரக்கூடியவர் பாலசந்தர் என அவர் மேல் அபிமானம் இருந்தது. அதனால்.

பாலசந்தர் படம் வந்திருக்கிறது எனக்கேள்வியுற்றோம். பெயர் 'டுயட்' என்றார்கள். இந்தப் பெயரில் பாலசந்தர் படமா? பாலசந்தரின் தயாரிப்பாய் மட்டும் இருக்கும்என அபிப்பிராயப்பட்டேன். இல்லை அது பாலசந்தரின் படமேதான் என ஊர்ஜிதமான போது பிரபு நடிப்பதாய் சொன்னார்கள். 'மனதில் உறுதி வேண்டும்' 'பிரபுவோ' என அங்கலாய்த்தபோது இல்லை, இனைய திலகம்(?) என்றார்கள்.– பிரபுவை வைத்து பாலசந்தர் என்னத்தைத்தான் சாதிக்கப்போறாரோ? ஐயம் இருந்தபோதும் ஏற்கனவே இருந்த அபிமானம் அதைத் துரத்தி அடித்து குடும்பத்துடன் திரையரங்குள் புகுத்திவிட்டது.– உள்ளே குப்புறத் தள்ளப்பட்டேன். வேறு யாராலும் அல்ல பாலசந்தரால் தான்– ஆளுக்கு பத்து டொலரும் கொடுத்து முகத்தில் கரி பூசினது தான் மிச்சம்.

திருவள்ளுவர் சிலையும் ஒரு நடுக்கத்துடன் தான் திரும்பி தரிசனம் தந்தது. "அகர முதல எழுத்தெல்லாம்" எனும் முதல் குறளை பல குரல்கள் சேர்ந்தே ஒப்புவித்தன. பின் நிசப்தம் கே.பாலசந்தர் பெயர் திரையில் வந்து அமர்ந்தது. பின் கடலின் இரைச்சல். அலை அதிவேகமாய் ஓடிவந்து பாறையில் மோதித் திரும்பியது– அழகாகப் படமாக்கியிருந்தார். ரகுநாதரெட்டி. சிந்துபைரவியில் காண்பிக்கப் பட்டதிலும் சிறப்பாய் இருந்தது. அலை, வெட்டப்பட்டிருந்த பாறை இடைவெளியுள் ஓடிவந்து நுரையாய் திரும்பியது ரசிக்க கூடியதாய் இருந்தது. அந்தப் படத்தின் சிறப்பு அந்தக் காட்சியுடன் மட்டுமே அஸ்தமித்து விடும் என்று நான் நினைத்துக் கூட இருக்கவில்லை அந்தப்படத்தின் ஆகக்கூடிய சிறப்பு இவ் ஒரே ஒரு காட்சி மாத்திரந்தான், என அமைந்து போன வேதனையை என்னென்பேன்.

ஒருவர் (குரல்) கதை சொல்வதுபோல கதை(?) ஆரம்பிக்கிறது. திரையரங்கு என்மனக் கண்முன் சாக்கடையாய் போய்விட்டது.

கதையென்று பெரிதாய் ஒன்றுமே இல்லை. கதைக்கரு வொன்றும் எதுவுமில்லை. பொதுப்படையாய்சொல்லப்போனால் காலகாலமாக அரைத்ததையே அரைத்துக் கொள்ளும் மாமூல் விசயமான காதல் தான் பாலசந்தர் ரசிகர்களுக்கு சுட்டிக்காட்ட வந்த விடயம். ஆக இத்தால் நாம் புரிந்து கொண்ட விடயம் என்ன? ஒன்றுமே இல்லை. புற அழகில் மயங்காமல் ஒருவர் (பெண்) விரும்பும் திறமைகள் யாருக்கு இருக்கிறதோ அவரே காதலிக்கப் படவேண்டியவர். இதைத்தான் பாலசந்தர் சொல்ல கடும் பிரயத்தனம் செய்திருக்கிறார் என நினைக்கின்றேன் (சரிதானே பாலசந்தர் அவர்களே!) ஆனால் அது சரியாய் யாருக்கும் புரியாமல் போய் விட்டது!

இதை நேரடியாகவே சரத்பாபு (மூலமாக) மீனாட்சி சேஷாஸ்திரிக்கு சொல்கிறார்.– ஆனால் அதை நாயகி அஞ்சலி மீனாட்சி சேஷாஸ்திரி ஏற்றுக் கொண்டதாயோ தவிர்த்ததாயோ காட்டத் தவறிவிட்டார் பாலசந்தர். முடிவில் தம்பி இறந்ததாலேயே குணா அண்ணனை மணக்க அஞ்சலி முடிவு செய்தார் எனவும் கருதத் தக்கதாய் முடிவு அமைந்து விட்டது.

அதாவது சொல்ல வந்த கருத்தையாவது குழப்பமில்லாமல் சொல்லத் தவறிவிட்டார் பாலசந்தர். அதனால் தான் சொல்கிறேன் கதைக் கருவென்றோ கதையென்றோ ஏதும் வலுவாய் இல்லாமல் ஒரு டுயட்.

சரி இனித் திரைக் கதைக்கு வருவோம்.– அழகன் படத்தில் ஒருவரை மூன்று பெண்கள் காதலிக்கிறார்கள். ஒரு பெண்ணை மூன்று ஆண்கள் காதலித்தால் எப்படி இருக்கும்? இந்தக் கேள்வி பாலசந்தருக்கு எழுந்திருக்கிறது. உடனே ஒரு திரைக் கதை கற்பனை பண்ணப்பட்டிருக்கும். அதுதான் டுயட்டின் பிறப்பாய் இருக்கலாம்.

மூன்று ஆண்களில் இருவர் சகோதரர்கள் அண்ணன் குணா பிரபு, தம்பி சிவா ரமேஷ் அரவிந்த– பெண் மீனாட்சி ஷேஷாஸ்திரி. மூன்றாமவர் திரைப்பட நடிகர்–

பாத்திரப் பொருத்தம் அண்ணன் தம்பிக்கு பொருத்தமாய் இருந்தது– சோடிப் பொருத்தம் பிரபுவிற்கும் மீனாட்சிக்கும் கச்சிதம். ஆனால் காதலர்களாக இணையும் ரமேஷிற்கும் மீனாட்சிக்கும் சோடிப்பொருத்தம் அமையவில்லை. ரமேஷ் வயது கூடிய பெண்ணை காதலிப்பதுபோல்தெரிகிறது. ரமேஷ் அரவிந்திற்கு மூக்குக் கண்ணாடி போட்டு வயதுத் தோற்றத்தை அதிகரிக்க முயன்றும்தோற்றுவிட்டார் பாலசந்தர். கூடுதலாக இருவரும் சந்தித்துக் கொள்ளும் இடங்களில் மீனாட்சியின் வயதை குறைத்துக் காட்ட உடை, உடல் அலங்காரங்களில் கவனமெடுக்காமல் விட்டுவிட்டார்

**அருணன்**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# Scarborough Dental Office

- Cosmetic Dentistry
- Crown & Bridges
- Gum Treatment
- Root canals
- Bleaching
- Dentures
- Surgery

★ அவசர சிகிச்சைகளுக்கு முன்னறிவிப்பு இன்றி சிகிச்சை வழங்கப்படும்
★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்
★ காப்புறுதித் திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ சமூக உதவிப் பணம் பெறுபவர்களுக்கும் சிகிச்சை வழங்கப்படும்




## Dr.Athi K.Somasundaram
## டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்
பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,
கனடா தேசிய பல்வைத்திய சபை

**Tel:(416) 750 9969**
**Fax:(416) 750-9967**

2155 Lawrence Ave East, Suite 10
(At Birchmount), Scarborough
•Wheel Chair Access
•Free Parking

திங்கள் முதல் சனி வரை
காலை 9 மணி - மாலை 9 மணி வரை
ஞாயிறு தினங்களில்
நண்பகல் 12 - மாலை 5 மணி வரை
(ஞாயிறு தினங்களில் சேவையைப் பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல் செய்து கொள்ளுங்கள்)
★ 24 மணி நேர அவசர சிகிச்சை சேவை

Monday-Saturday
9 am-9 pm
Sundays
12 noon-5 pm
Sunday by appointment only
24 Hrs Emergency Service




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலசந்தர். இந்த பாலசந்தருக்கு என்ன நடந்தது?

நகைச்சுவைக்கு சார்லியுடன் செந்தில் இணைகிறார். ஆனால் எல்லாம் அறுவையானவை கவுண்டமணியும் செந்திலும் கலந்து கொள்ளும் இரண்டு வாழைப் பழங்கள் வாங்கி ஒன்றை செந்தில் சாப்பிட்டுவிட்டு ஒன்றை கவுண்டமணியிடம் கொடுக்க மற்றது எங்கே எனக் கவுண்டமணி கேட்க அதுதானண்ணே இது எனச்சொல்லிக் கொள்ளும் முன்பே வந்திருந்த நகைச்சுவை இங்கு நகல் செய்யப்பட்டு காசோலைகளுக்கான சம்பவமாய் மாற்றி சலிப்பூட்டியிருந்தார் பாலசந்தர். இந்த பாலசந்தருக்கு என்ன தான் நடந்தது?

சார்லியும் செந்திலும் ஒரு பார்வையற்ற பெண்ணைக் காதலிக்கிறார்கள். கூ, ஆ, ளு குரலுடைய ஒருவரை கூலிக்கமர்த்தி தாம் பாடுவதாக இருவரும் அப்பெண்ணை ஏமாற்றுவது சிறுபிள்ளைத்தனமான தமாஷ்

இவை நிற்க நகைச்சுவைகளுக்கும் பிரதான காதல் கதைக்கும் (?) சம்மந்தமே இல்லை– இப்படி ஒரு குறைபாடான படம் பாலசந்தரிடமிருந்து முன்பு வந்ததே இல்லை.

அடுத்து சண்டைக்காட்சிகள் வேறு. நடிகர், தான் அஞ்சலியை திருமணம் செய்யப் போவதாக பத்திரிகையில் பிரசுரிக்க, அஞ்சலி மனங்குமுற இதைத் தாங்கிக்கொள்ளாத குணா நடிகரை அடித்து நொருக்கிறாராம். இறுதிக் கட்டத்தில் குணாவும் சிவாவும் ஒற்றுமையாகி நடிகரை (வில்லன்) வெளுத்து வாங்கும் மாமூல் தமிழ்ப் பாணி. அத்துடன் பீப்பாய்களுள் வெடிகள் பொருத்தி கடலில் மிதக்க வெடிக்கப் பண்ணுவதும் கண்ணி வெடி உள்ள இன்னொரு பீப்பாவுள் நாயகி (அஞ்சலி) அடைக்கப்பட்டிருப்பதும் குணா விசைப்படகில் போய் காப்பாற்ற முயல்வதும் பீப்பாய்கள் மலையில் இருந்து உருட்டப்படுவதும் குணா பிரபு இதையெல்லாம் சமாளிப்பதும் எம்.ஜி. ஆர் காலத்து உச்சக் கட்டம் சலிப்பூட்டுகிறது. இதற்கு ரகுமான் கொடுத்திருந்த இசை ஏதோ பிரெஞ்சு, ஏன் ஆங்கிலப்படத்தையும் ஞாபகத்தில் கொண்டு வருகிறது.

இந்த பாலசந்தருக்கு என்ன வந்தது? இன்னுமொரு சண்டைக்காட்சி நாஞ்சில் சகோதரர்கள் (சிவா, குணா) இருவரும் மோதிக் கொள்வது கொஞ்சம் யதார்த்தம் தான்– ஆனால் அந்த வயதில் இப்படியா அடிபடுவார்கள்? இப்படி ஒரு சண்டைக்காட்சியையும் முன்பே சொல்லப்பட்ட இரு (யதார்த்தத்தை மீறிய) அதீத சண்டைக்காட்சிகளையும் ஏன் ஒரே படத்தில் வெவ்வேறு காட்சிகளில் அமைத்தார்? இது பாலசந்தருக்கு மட்டுமே வெளிச்சம் எமக்கு இருட்டு.

இன்னொரு காட்சியில் நாயகி அஞ்சலியின் ஐம்பது ரூபாய்த் தாள் தவறிக் காற்றில் பறக்க அதைக் கண்ணுற்ற பிரபு ஓடாவண்ணம் ஓடிப்போய் மீட்டு வர முயல்வதும் (அண்மையில் வந்த ஒரு மலையாளப் படத்தில் இருந்து நகல்) காசு தான் அவரை அலைக்கழிப்பதை ஹாசியமாக காட்ட முயன்றுள்ளார். ஆனால் நாயகனைப் பொறுத்த வரை நாயகிக்காகவே செய்யும் பிரயத்தனம். ஹாஷ்யமாகக் காட்ட முயன்றதால் நாயகனின் பிரயத்தனம் நாயகியாலோ ஏன் படம் பார்த்த ரசிகராலோ புரிந்து கொள்ளப்பட முட்டுக்கட்டையானது. இதில் இன்னொரு கணிக்கப்படா ஓட்டை என்னவெனில் அடிக்கும் காற்றில் ஐம்பது ரூபாய் பறக்கிறது பின்புறத்தில் மரஞ்செடிகள் அசையாமல் இருக்கின்றது. அங்கு காற்று இல்லையோ என்னவோ!

இன்னொரு காட்சியில் நடிகரை சகலரும் வால் பிடிப்பதாகக் காட்ட இயக்குனர் கூட எழுந்து நிற்பது போலவும் நடிகர் விசுக்கிக் கொண்டுவரும் "குறுந்தண்டம் (தடி) விழ அதை பலரும் அடிபட்டு எடுத்துக் கொடுப்பதும் 'சிகரட்' பத்த வைக்க பலரும் நெருப்பை நீட்டுவதும் மிக அதீதமாய் தெரிகிறது.

வேறு பல காட்சிகளில் அந்த குறுந்தண்டத்தை காணவில்லை.

இதேபோல சகோதரர்கள் அண்ணன் தம்பி என இல்லாமல் சினேகிதர்களாக பழகுகிறார்கள் எனச் சொல்லப்பட்டு ஓரிரு காட்சிகள் காட்டப்படுவதுடன் சரி. பின்பு வரும் காட்சிகள் இதை ஊர்ஜிதம் செய்யவில்லை.

தொலைக் காட்சியில் ஒரு அறிஞரின் சொற்பொழிவை கேட்டுவிட்டு பிரபு தனது காதலை நேரடியாக வெளிப்படுத்துவதாக சொல்வதும் நாயகி மறுக்க பலாத்காரமாக முத்தங்கொடுத்துவிட்டு "குண்டுப் பயல் கொடுத்த முத்தம் எப்படி எப்படி இருக்கிறது?" எனக் கேட்பதும் நிசமா? கற்பனையா? என அறிந்து கொள்ள முடியவில்லை (படத்தொகுப்பாளர்கள் எழும்புங்கள். விடிந்து விட்டது)

'ஸாக்சபோன்' வாசிப்பதும் கவிதை எழுதுவதும் அண்ணன் குணா என அறியாமல் சந்தர்ப்பவசத்தால் அத்திறமை தம்பி சிவாவினதே என எண்ணி தம்பியை அஞ்சலி காதலிப்பதும், இதை உணர்ந்தே சிவா அண்ணனது திறமைகளை தனதே எனக் காட்ட முயல்வதும் சரிதான். ஆனால் தம்பியின் கபடம் வெளிச்சத்துக்கு வந்ததும் அஞ்சலி சிவாவை கடிந்து கொள்வது வரை சரிதான். அதன்பின் அஞ்சலி என்ன முடிவு எடுத்தாள்? சரத்பாபு (அஞ்சலியின் அண்ணன்) சொற்படி அத்திறமையின் சொந்தக்காரனை குணாவை காதலிக்க எண்ணுகிறாளா? தம்பி சிவாவை கைவிட எண்ணுகிறாளா? காட்டப்படவில்லை. உணர்த்தப்படவில்லை.

அண்ணனின் கவிதையை தனதென்று சிவா அஞ்சலியிடம் கொடுக்க, அதை அஞ்சலி' குணாவுக்கு வாசித்துக் காட்ட இடைநடுவில் மின்வெட்டும் வர இருளில் மீதிக் கவிதையை குணா சொல்லி முடிப்பது நல்ல காட்சிதான். அக்கவிதை எப்படி அஞ்சலியிடம் போனது என்று குணா அறிந்து கொள்ள முயலாதது ஏன்?

தம்பிக்காக எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்கும் குணா தன் காதல் ஒரு பக்கக் காதல் எனத் தெரிந்த பின்பும் விடாப்பிடியாய் இருப்பது குணா கொண்ட காதலின் வலிமை எனக் காட்ட பாலசந்தர் எண்ணியிருக்கலாம். ஆனால் அது ஒரு அரை குறைத் தர்க்கம்

பாடல்களைப் பொறுத்தவரை" கத்தரிக்காய்" பாடல் அநாவசியச் செருகல் சோபிக்கவில்லை. 'மெட்டுப்போடு" பாடல் நல்ல பாடல். ஆனால் வைரமுத்துவின் வரிகள் கதையுடன் சம்மந்தமே படாமல் எங்கோ செல்கிறது. சில வார்த்தைகள் சந்தத்துக்குள் திமிறுவதாய் உள்ளது (ரகுமானும் கவனிக்க!) கே.ஜே. ஜேசுதாசின் 'வெண்ணிலாவின் தேரிலேறி" பாடலுடன் காட்சிகள் சீராய் அமையவில்லை. நடிகரின் பிறந்த நாளில் தம்பி சிவா சோகப்பாடல் பாடுவதும் அந்தச்

21ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கோடம்பாக்கத்திலும் டைனோசார்

-பட்டாபி- **Cine Tonic**

ஸ்ரீவன் ஸ்பீல்பேர்க் இயக்கிய ஜுராஸிக் பார்க் தற்போது இந்தியாவில் திரையிடப்பட்டிருக்கிறது. இதன் வெற்றி மற்ற இந்தியத் தயாரிப்பாளர்களைப் பயமுறுத்துகிறது. இந்தப் படம் தற்போது இந்தி மொழியில் டப் செய்யப்பட்டு திரையிடப்படுகிறது. இதுவரை நான்கு படங்களே இந்தியில் டப் செய்யப்பட்டு வெளிவந்தன. இவ்வாறு இந்தியில் டப் செய்யப்பட்டு ஹொலிவூட் படங்கள் திரையிடப்பட்டால் தங்கள் பிழைப்பில் மண் விழுந்து விடும் என்று இந்தியத் தயாரிப்பாளர்கள் பயப்படுகிறார்கள்.

இந்தியாவின் வர்த்தக சீர்திருத்தம் தற்போது படவுலகிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. 150 தியேட்டர்களில் மூன்று வாரங்களுக்கு மேல் ஓடும் இந்தப் படத்தின் வெற்றியால் வெளிநாட்டுப் படங்களை டப் செய்வதில் விதிமுறைகள் கொண்டு வர வேண்டும் என்று தயாரிப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. சிலர் முழுமையாக தடை செய்ய வேண்டும் என்று கோருகின்றனர்.

இந்தியத் திரையுலகம் வருடாந்தம் எண்ணூறு படங்களை வெளியிடுகிறது. முன்பு கிங் கொங், ஜங்கிள் புக், காந்தி ஆகிய படங்களே டப்பிங் செய்யப்பட்டிருந்தன.

ஜீன் கிளாவுட் வான் டாம் நடித்த இரண்டு படங்கள் தற்போது டப்பிங் செய்யப்படுகின்றன. இந்தியாவின் சனத்தொகையில் நான்கு வீதமே ஆங்கிலம் பேசக் கூடியது. 115 சினிமாக்களில் டப்பிங் செய்யப்பட்டும் 35 சினிமாக்களில் ஆங்கிலத்திலும் ஜுராஸிக் பார்க் வெளியிடப்பட்டது. இந்தப் படம் முதல் இரண்டு கிழமைகளிலும் ஐம்பது லட்சம் பேரால் பார்க்கப்பட்டது.

ஜுராஸிக் பார்க்கின் முதல் காட்சியே இந்திய பிரமாண்டமான தயாரிப்புகளை விழுங்கி விடும் என்கிறார் அமெரிக்க வினியோக நிறுவனம் ஒன்றின் இந்திய முகாமையாளர்.

★ ★ ★

ஜுராஸிக் பார்க் சென்ற ஆண்டில் அதிக வசூலைச் சம்பாதித்த படம். இந்தப் படம் தியேட்டரில் மட்டுமல்ல, ஞாபகப் பொருள் விற்பனையிலும் நூறு கோடி டொலர்களைச் சம்பாதித்துள்ளது. முன்பு பாட்மான் படங்களே ஒன்றரை பில்லியன் டொலர்களைச் சம்பாதித்திருந்தன. இப்போதும் ஒக்டோபர் மாதம் இந்தப் படத்தின் வீடியோ வெளியிடப்படும் போது மீண்டும இந்த பொருட்களின் விற்பனை உயரலாம்.

★ ★ ★

ஸ்பீல்பேர்க்கின் ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட் படம் ஆஸ்கார் விருதுகளைக் குவித்திருந்தது. இந்தப் படத்திற்கு இஸ்லாமிய உலகில் கடும் எதிர்ப்பு. யூதர்கள் மீதான அனுதாபத்தை ஏற்படுத்துவது ஒரு புறமிருக்க.. அதிலுள்ள வன்முறைகள், நிர்வாணக் காட்சிகள் தங்கள் மதத்திற்கு முரணானவை என்று மலேசியா இந்தப் படத்தை தடை செய்திருந்தது. இப்போது எகிப்தும் இந்தப் படத்தை தடை செய்திருக்கிறது

★ ★ ★

ஜுராஸிக் பார்க் வெற்றி பெற்று விட்டது இந்தியாவில். கோடம்பாக்கத்துக் காரார்கள் விடுவார்களா? இப்போது இது ஒரு அதிசய உலகம் என்று ஒரு படம் இந்த பாணியில் வருகிறது. பதினெட்டு அடி உயிர ஆமை, டைனோசார் எல்லாம் உண்டாம். தயாரிப்பாளர் பெயர் 'கலைப்புலி' ஜி. சேகர். கிரகங்களின் தோற்றம் வளர்ச்சி பற்றிய விஞ்ஞானப் படம் என்கிறார்கள். எல்லோரும் ஏறிய குதிரையில் சக்கடத்தாரும்..

★ ★ ★

தமிழக அரசியலை சினிமா தான் நிர்ணயித்துள்ளது. நேரடியாகவும் மறைமுகமாகவும் சினிமா என்ற ஆயுதம் மூலமாக தமிழக அரசியல் வெல்லப்பட்டிருக்கிறது என்கிறார் பாலு மகேந்திரா.

★ ★ ★

சினிமா என்ற ஆயுதத்தால் வெல்ல முயற்சித்து மண் கவ்வியவர்கள் பலர். அண்ணா, கருணாநிதி போன்றோர் எழுத்தாற்றலால் கவர்ந்தாலும் நடிகர்களில் எம்.ஜி. ஆருக்கு இருந்த வசீகரம் அவரை முதல்வராக்கியது. அவரது வாரிசாக ஜானகி, ஜெ போன்றோர் வர முடிந்தது. ஆனால் சிவாஜி, பாக்கியராஜ், ராமராஜன், ராஜேந்தர் என்று பலரும் முயற்சித்து மண் கவ்வியிருக்கின்றன. ரஜனியும் பெரும் விளம்பரங்களோடு வள்ளியை வெளியிட்டு இப்போது பின்வாங்கியிருக்கிறார்.

★ ★ ★

இதற்குள் எம்.ஜி.ஆர் மாதிரி ஆட்சி அமைக்க முடியும் என்று கனவு காண்கின்ற நடிகர்கள் பற்றி கமலஹாசன் தான் வெளியிட்டுள்ள 'தேடித் தீர்ப்போம் வா' என்ற புத்தகத்தில் விளாசியிருக்கிறாராம். இது முன்பு பேட்டி ஒன்றிலும் கமல் சொன்ன விடயம் தான். தான் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்தே இந்தப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார். இனி என்ன? மற்றவர்களும் புத்தகம் விட ஆரம்பித்து விடுவார்கள்.

★ ★ ★

அரசியலை மற்றவர்கள் மறைமுகமாகக் கலந்து வெற்றி பெற்றார்கள். நேரடியாகக் கலந்த சோ மட்டும் தோல்வியடைந்திருக்கிறார். காலத்திற்கு காலம் நகைச்சுவையாய் அரசியலைக் கிண்டியவர் அவர். அவரால் இந்த தமிழகத்தை வெற்றி கொள்ள முடியவில்லை.

சினி துணுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேடகம் ஒரு நூலகம் மட்டுமல்ல

## அதற்கு ஒரு விண்ணப்பம்

வே. விவேகானந்தன்.

ரொரன்ரோ மாநகரில் தமிழர்கள் செறிவாகவாழும்குட்டி யாழ்ப்பாணம் என்று அழைக்கப்படும் வெலஸ்லி பார்லிமென்ட் பகுதியில் தமிழ் பத்திரிகைகளுக்கென அவற்றிற்கென தேடகம்என்ற ஒரு நூலகம் இருந்தது. ரொரன்ரோவில் வெளியாகும் தமிழ் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மட்டுமன்றி இலங்கை உட்பட தமிழர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலிருந்து வெளிவரும் பல்வேறு தமிழ் நூல்களையும் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் இது தன்னகத்தே கொண்டிருந்தது.

ரொரன்ரோவில் வெளிவரும் வெளியீடுகளுடன் சர்வதேச ரீதியில் வெளிவரும் தமிழ் வெளியீடுகளை இங்கு வாழும் தமிழர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கும் ஒரு நிலையமாகவும் அது விளங்கியது. நான் தற்போது தொடர்ந்து கட்டுரைகளை எழுதி வரும் தமிழர் தகவல் என்ற மாத சஞ்சிகையினை ஆரம்பத்தில் எனக்கு அறிமுகம் செய்து வைத்ததும் இந்த தேடகம் என்ற நூலகமே. இவ்வாறே இங்கு வாழும் பலருக்கு பல்வேறு வெளியீடுகளையும் அறிமுகம் செய்துவைக்கும் நிலையமாக விளங்கியது. தேடகம் என்ற நூலகம் இவ்வாறு தமிழ் வெளியீடுகளை பொது மக்களுக்கு அறிமுகம் செய்துவைக்கும் போது கொள்கை வேறுபாடு இன்றி அனைத்து கொள்கை வெளியீடுகளுக்கும் சம சந்தர்ப்பம் கொடுத்தது. எக்கொள்கை உடைய ஒருவரும் எக்கொள்கை உடைய ஒரு வெளியீட்டையும் பார்க்க வேண்டுமெனின் அங்கு போய் பார்க்க முடியும். எனவே அந்த நூலகத்தை பல்வேறு கொள்கையுடைய பலருமே பயன்படுத்தி வந்தனர். மொத்தத்தில் அது ஓர் ஜனரஞ்சகப்படுத்தப்பட்ட ஒரு பொது நூலகமாக விளங்கியது.

ரொரன்ரோ மாநகரில் உள்ளூராட்சி தாபனங்களின் நிர்வாகத்தின் கீழ், இயங்கும் 100க்கு மேற்பட்ட நூலகங்களுள் ஏறக்குறைய 20 நூலகங்கள் தமிழிலும் நூலக சேவையினை ஆற்றி வருகின்றன. இதையடுத்து தமிழர்களால நிர்வகிக்கப்பட்டு வரும் பொதுசன நூலகம் என்ற வகைக்குள் அடங்கக் கூடிய ஒரே ஒரு நூலகம் தேடகம் என்ற நூலகமே. கடந்த பத்து பதினைந்து வருடங்களாக இங்கு வாழும் தமிழர்களுக்கு சேவை செய்வதாக கூறிக்கொண்டு அரச நன்கொடைப் பணத்தினைப் பெற்று வரும் தமிழர் சங்கங்கள் கூட தமிழ் பொது மக்கள் பயன்படுத்தக் கூடிய விதத்தில் பொது இடமொன்றில் பொதுசன நூலகம் ஒன்றை அமைக்க முடியவில்லை.

நிலமை அவ்வாறிருக்க சில தமிழர்களால் நடத்தப்பட்டுவந்த தமிழ் பொது நூலகம் ஒன்று தமிழர்களாலேயே எரிக்கப்பட்ட முதலாவது சம்பவம் ஒன்று உலகத் தமிழர் வரலாற்றில் முதல் தடவையாக இடம் பெற்றிருக்கிறது. அதுவும் புலம் பெயர்ந்த தமிழர்கள் அதிகமாகவாழும் கனடாவில், செறிவாக வாழும் ரொரன்ரோ மாநகரின் குட்டி யாழ்ப்பாணத்தில் தமிழன் என்று சொல்லவே வெட்கமாக உள்ளது.

நூலகத்தை எந்தத் தமிழர்கள் எரித்திருக்கக்கூடும் என்பது யாவரும் அறிந்த பரம ரகசியம். மா புளிப்பது அப்பத்திற்கு நல்லது என்பார்கள். இத்தகைய கோழைத்தனமான செயல்கள் விடுதலையைப் பின்னோக்கி தள்ளுமே தவிர முன்னெடுக்க உதவா. நூலகத்திற்கு இட்ட தீ அங்கிருந்த பொக்கிஷங்களை மட்டும் பொசுக்கவில்லை. ஆயிரக்கணக்கான தமிழ் நெஞ்சங்களையும் பொசுக்கியது. கண்டனக் கூட்டத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். ஆனால் வேலை காரணமாகவோ பயத்தின் நிமித்தமோ அல்லது ஒதுங்கி வாழ விரும்பியோ கூட்டத்திற்கு வராது உள்ளத்தினுள்ளேயே கண்டனங்களைக் குமுறிய உள்ளங்கள் ஆயிரம் ஆயிரம்.

தமிழர்களால் எரிக்கப்பட்ட தமிழ் நூலகம் தமிழினத்தால் மீண்டும் கட்டி எழுப்பப்படவேண்டும். இருந்த நூலகத்தை விட பன்மடங்கு சிறப்பம்சம் கொண்ட நூலகமாக மிளிர வேண்டும். அதன் புனரமைப்பில் வேதனை கொண்ட தமிழ் உள்ளங்கள் பங்கு கொள்ள வேண்டும். இதற்கு தேடக நூலகத்தினர் ஓர் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். தமிழ் நூலக புனரமைப்பு நிதியம் ஒன்றினை வங்கிக்கிளை ஒன்றில் ஆரம்பித்து அதனைப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் துண்டுப் பிரசுரங்கள் மூலம் தமிழ் பொது மக்களுக்கு அறியத் தருவார்களாயின் வேதனை அடைந்த உள்ளங்கள் அதில் பங்களித்து ஆறுதல் பெறமுடியும். இந்த நூலக சேவை குட்டி யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றித் தமிழர்கள் அதிகமாக வாழும் ஸ்காபரோ பகுதிக்கும் காலப் போக்கில் விஸ்தரிக்கப்பட வேண்டும். இது எனது விண்ணப்பம்.

## பாப்பரசர்..

இவர் வேண்டுதல் செய்ததும் மழை பொழிந்தது. இதனால் மனம் மாறிய மன்னர் இவரை விடுதலை செய்து தனது பகுதியில் மதப்பிரசாரம் செய்ய அனுமதித்தார். அறுபது வயதில் இறக்கும்வரை இவர் டச்சுக்காரரின் கையில் அகப்படாதிருக்க இரவுகளில் மாறு வேடத்தில் இலங்கை பூராவும் பயணம் செய்தார். குடிசைக் கோயில்கள் அமைத்து பேய் ஓட்டும் செயல்களில் ஈடுபட்டார். சின்னமுத்து நோய்வந்த காலங்களில் வீட்டாரினால் கைவிடப்பட்ட நோயாளிகளை இவரும் இவரது மருமகனும் வீடு வீடாகச் சென்று பராமரித்தனர். பிணங்களை சுற்றிக் கட்டி புதைகுழிகளை கிண்டி புதைத்தனர்.

கோவாவில் இவர் பெயரால் நடைபெற்ற புதுமையே இவரது முத்திப்பேறு பட்டத்திற்கு காரணமாகிறது. இவர் இறந்து இருநூறு வருடங்களின் பின்னர் 1938ம் ஆண்டு கோவாவில் பெண் ஒருத்தி கருச்சிதைவு காரணமாக தனக்கு பிள்ளைகள் இல்லாமையால் ஜோசப் வாஸிடம் வேண்டுதல் செய்ததால் அதிசயமான முறையில் டாக்டர்கள் கைவிட்ட நிலையில் அந்த பிள்ளை பிறந்தது. அந்தப் பிள்ளை பின்னர் 1966ல் குருவானார்.

www.tamilarangam.net

# ஆயிரம் ரூபாவுக்குள் ஒரு ஸ்ரீராம் ஆவது எப்படி!



## விஞ்ஞானப்பிரகாசன்

ஆளுக்காள் இப்போது வீடியோ கமெராவை வாங்கி வைத்துக்கொண்டு 'பூப்புனித நீராட்டு விழாக்களா? திருமண வைபவங்களா? காது குத்து வைபவமா? பிறந்த நாள் கொண்டாட்டமா?' என்று விளம்பரம் போட்டுக் கொண்டு, பாலு மகேந்திரா கணக்கில் கமெராக்களுடன் போஸ் கொடுப்பதைக் கண்டிருப்பீர்கள். சில வீடியோக்களைப் பார்த்தால் மணிரத்தினம் படம் பார்த்த மாதிரி இருக்கும். தங்கள் முகத்தை அதில் பார்க்கின்ற தம்பதிகளின் முகம் எப்படியிருக்கும்?

இந்த வீடியோக்களில் வித்தியாசமான நாடாக்கள் பாவிக்கப்படுகின்றன. முன்பு சோனி நிறுவனம் Betamax ரக வீடியோ நாடாக்களைப் பயன்படுத்தியிருந்தது. இதன் தரம் சிறந்ததாக இருந்தாலும் சோனி நிறுவனம் தான் மட்டுமே இந்த வகை வீடியோக்களைத் தயாரித்தது. இதற்குள் ஜே.வி.சி நிறுவனம் Video Home System எனப்படும் VHS ரக வீடியோவை கண்டுபிடித்தது. இதன் தரம் பீற்றா ரக நாடாவை விடக் குறைந்ததாக இருந்தாலும் ஜே.வி.சி நிறுவனம் இந்த வீடியோவை உற்பத்தி செய்வதற்கான உரிமையை பல நிறுவனங்களுக்கு வழங்கியது. இதனால் இதன் விற்பனை அதிகமாகி தற்போது பீற்றா ரக வீடியோவை மிஞ்சியதால் தற்போது பீற்றா ரக வீடியோ உற்பத்தி செய்யப்படுவதில்லை.

தொலைக்காட்சிப் படங்கள் 350 line களால் உருவாக்கப்படுகின்றன. வி.எச்.எஸ் வீடியோவின் படங்கள் தரம் குறைவாக 200 line களால் உருவாக்கப்படுகின்றன. இதனால் தான் அவை சாதாரண தொலைக்காட்சி ஒளிபரப்பை விட தரம் குறைந்து காணப்படுகின்றன. இதனால் இவற்றின் தரத்தை அதிகரிப்பதற்காக சுப்பர் வி.எச்.எஸ் என்ற புதிய ரக வீடியோ அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவும் ஜே.வி.சி நிறுவனத் தயாரிப்பு. இவற்றின் படங்கள் 400 line களால் ஆனவை. இவை தோற்றத்திலும் அளவிலும் சாதாரண வி.எச்.எஸ் ரக நாடாக்கள் போலிருந்தாலும் விலை சற்றே அதிகம்.

சாதாரண வி.எச்.எஸ் வீடியோக்களில் இந்த சுப்பர் வி.எச்.எஸ் ரக நாடாக்களைத் திரையிட முடியாது. ஆனால் சாதாரண வி.எச்.எஸ் நாடாக்களை சுப்பர் வி.எச்.எஸ் வீடியோ இயந்திரத்தில் திரையிட முடியும்.

இதன் பின்னர் V.H.S-C ரக நாடாக்கள் அறிமுகமாகின. இதில் உள்ள c Compact என்பதன் முதல் எழுத்து. இவை சாதாரண வீடியோ நாடாக்களை விட மூன்றில் ஒரு பங்கு அளவில் சிறியன. ஆனாலும் சாதாரண கசட் அளவிலான பெட்டிக்குள் இந்த நாடாவை பொருத்தி விட்டால் சாதாரண வீடியோ இயந்திரத்தில் திரையிடலாம். இதைப் போன்றே Super V.H.S-C ரக நாடாக்களும் உண்டு. இவையும் அளவில் சிறியன. ஆனால் இவை குறுகிய நேரம் மட்டுமே பதிவு செய்யக்கூடியன. சுமார் முப்பது நிமிடம் வரை! நீண்ட நேரத்திற்கு இவற்றை திரையிட வசதிகள் இருப்பினும் அவற்றின் தரம் மிகவும் குறைந்து செல்லும்.

நீண்ட காலம் சோனி நிறுவனம் வி.எச்.எஸ் ரக வீடியோக்களை உற்பத்தி செய்யவில்லை. பின்னர் ஹிட்டாச்சி நிறுவனம் மூலம் உற்பத்தி செய்து தனது பெயரில் விற்பனை செய்தது. இழந்த தனது சந்தையை மீண்டும் பெற சோனி வீடியோ 8 என்ற புதிய வகை நாடாவை அறிமுகம் செய்தது. இதன் தரம் சாதாரண வி.எச்.எஸ் நாடாவை விட சிறந்தது. இதன் படங்கள் 250 line களால் ஆனவை. இவை அளவில் மிக மிகச் சிறியன. ஆனால் இவற்றில் இரண்டு மணி நேரம் பதிவு செய்ய முடியும். இவற்றில் ஒரு சிக்கல் என்னவெனில் இந்த நாடாக்களை திரையிட விசேடமான வீடியோ இயந்திரங்கள் குறைவு. எனவே கமெராவில் வைத்தே தொலைக்காட்சியை இணைத்து பார்க்க வேண்டும். இதன் பின்னர் இந்த ரக நாடாவில் தரம் அதிகமான Hi 8 ரக நாடாக்கள் அறிமுகமாகின. இவற்றின் படங்கள் 400 டைநே களால் ஆக்கப்பட்டன.

ஒகே.. இதுதான் விசயம். இனி என்ன.. கமெராவின் விலை மலிவு. ஒன்றை வாங்கிக்கொண்டு.. பூப்புனித நீராட்டு விழாக்களா? மங்கள வைபவங்களா என்று தொடங்க வேண்டியதுதான்.

# 'இல்லை' இல்லாத எதிர்மறை

கார்களின் பின்னால் உள்ள bumper sticker களில் உள்ள வாசகங்களைக் கண்டிருப்பீர்கள். நம்ம ஊரில் எல்லா லொறிகளின் பின்னாலும் Don't kiss me என்று இருக்கும். ஏதோ பின் புறமாகத் தான் முத்தம் கொடுப்பது என்ற மாதிரி..

நான் அடிக்கடி இங்கே காண்கின்ற ஸ்டிக்கர்.. Not so close, I hardly know you என்பது. I hardly know you என்றால் உங்களில் சிலர் நினைப்பது போல, எனக்கு உன்னை கடுமையாகத் தெரியும் என்பதல்ல. இதன் அர்த்தம் நெருக்கமாய் வராதே, எனக்கு உன்னை (அவ்வளவு) தெரியாது என்பது தான்.

Hard என்பதற்கும் hardly என்பதற்கும் கருத்து வித்தியாசங்களை குழப்ப வேண்டாம்.

He worked hard அவன் கடுமையாக வேலை செய்தான்.

He hardly worked அவன் வேலை செய்யவே இல்லை.

தமிழிலும் இந்த விளையாட்டுகள் இருக்கின்றன. வராநின்றான் என்றால் வராமல் நின்றான் என்பதல்ல கருத்து. வருகின்றான் என்பதே அர்த்தம்.

வழமையாக எதிர்மறை வாக்கியங்கள் not சேர்ந்து தான் வருவதுண்டு. ஆனால் சில சொற்கள் உள்ளன. அவை not இல்லாமலேயே எதிர்மறைக் கருத்தைக் கொண்டிருக்கும். Hardly, Barely, Scarcely ஆகிய மூன்று சொற்களும் வரும் போது அவை எதிர்க்கருத்தையே கொண்டிருக்கும். உதாரணமாக

I have hardly any money என்னிடம் மிகவும் கொஞ்சப் பணமே உள்ளது.

**மாஸ்டர் ரவி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என் ஆவியே வாய் திறந்து....

மறுபிறப்பு, ஆன்மா, மோட்சம், நரகம் பற்றியெல்லாம் போய்ப் பார்த்து வந்தவர்கள் போல பேசுகிறவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். எனக்கென்னவோ இந்த ஒரு பிறப்பைப் பற்றியே சரியாக விளங்கவில்லை அதனால் அடுத்த பிறப்பு ஏதேன் இருந்தால், இறந்த பிறகு அதைப்பற்றி கவலைப்படுவோம் என்று விட்டு விட்டேன். மோட்சத்தில் கெட்டவர்கள் இருக்க மாட்டார்கள், பொய்யர்கள் இருக்க மாட்டார்கள் எனவே வம்பு தும்பு தகராறுக்கும் வாய்ப்பில்லை. மிகவும் அலுப்புப் பிடித்த இடமாக இருக்கும். நல்லவனாக இருந்து அங்கே போனால் நீ எப்படி இங்கே வந்தாய் என்று யாரும் கேட்க மாட்டார்கள் கெட்டவனாக இருந்து போனால் சிலவேளை என் பாவங்களைக் கண்டுபிடித்து விரட்டி விடுவார்கள். நரகத்துக்குப் போனால் எப்படியும் நீ எப்படி இங்கே வந்தாய் என்று பம்மாத்துக்காகவேனும் துக்கம் விசாரிக்க நாலுபேர் இருப்பார்கள். கதை எழுத நிறைய விஷயமிருக்கும். கனடாவில் மாதிரி நிறையத் தமிழ்த் தினசரிப் பத்திரிகை நடத்தலாம். நரகம் என்று ஒன்று இருந்தால் அங்கேயே ·தான் போது என்று எப்போதோ முடிவு கட்டிவிட்டேன். தேவதூதர்கள் வந்து மோட்சத்துக்கு என்னைக் கட்டி இழுத்துக் கொண்டு போனாலும் அவர்களை ஏசி உதைத்து என்னை நரகத்துக்கே கொண்டு போகும்படி செய்து விடுவதாக என் திட்டம். இதனால் உலகத்துக்கும் ஒரு நன்மை உண்டு. என்னை வெறுக்கிற பாவிகள் எல்லாரும் நானிருக்கும் இடத்துக்கு வரக் கூடாது என்று நல்ல காரியங்களையே செய்து மோட்சத்துக்கும் போக முயல்வார்கள். இதனால் ஒரு தீமையும் உண்டு. என்னை விரும்புகிற பாவிகள் முன்னும் அதிகம் பாவம் செய்து என்னோடேயே வர முயல்வார்கள். என்னை விரும்புவோர் அனேகர் இல்லை. எனவே என்னுடைய முடிவால் நன்மையே அதிகம். இதற்காக என்னை யாரும் மோட்சத்துக்கு அனுப்பாத வரையில் எனக்குத் திருப்தி.

சிறு வயதில் பேய், பிசாசுகள் பற்றிய சுவையான கதைகள் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். யாரையாவது முனி அடித்து விட்டதாகவோ பேய் பிடித்து விட்டதாகவோ கேள்விப்பட்ட நேரங்களில் மனத்திற்குள் பயம் ஏற்பட்டது உண்மை. ஆனாலும் பேய்கள் பற்றிய பயம் வெகு விரைவிலேயே போய்விட்டது. பலதடவை, நடு இரவில் கத்தோலிக்கச் சவக்காலைப் பக்கமாக நடந்து போயிருக்கிறேன். ஆனாலும் மற்றவர்களைக் கூப்பிட்டுக் கதைக்கிற பேய்கள் என்னோடு கதைக்க வருவதில்லை. ஒரு வேளை என்னோடு கதை கொடுத்தால் விடிந்த பிறகும் அலட்டிக் கொண்டிருப்பேன், பிறகு வெளிச்சம் வந்து விடும், அதன் பிறகு வெளிச்சத்தில் கண் தெரியாமற்போய் எங்கேயாவது விபத்தில் மாட்டிவிட்டால் வம்பு என்று தான் என் கண்ணிற் படாமல் ஒதுங்கி விட்டனவோ தெரியாது. ஆனாலும் ஆவிகளுடன் பேசி விளையாடுவதற்குக் கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தை தான் நழுவ விடவில்லை.

முப்பது நாற்பது வருஷங்கள் முன்பு ஆவி ஜோசியத்துக்கு என் ஊரில் புதிதாகச் செல்வாக்கு ஏற்பட்டிருந்தது. மின்சாரம் வந்த பிறகு பேய்கள் நடமாட்டம் குறைந்து விட்டது. மிச்சமிருந்த பேய்கள் ஏப்ரஹாம் கோவூர் என்ற மலையாளப் பகுத்தறிவு வாதி வந்த பிறகு எங்கேயோ ஒளிந்து விட்டன. 1960 இல் கோவூர் பல மந்திரவாதிகளின் பொய்களை அம்பலப் படுத்திப் பில்லி சூனியக்காரர்கட்குப் பிழைப்பைக் கெடுத்தவர். ஜோசியர்களிடமும் அவர் சவால் விட்டு யாரும் ஏற்கவில்லை. சாயிபாபாவை மேற்சட்டையைக் கழற்றிவிட்டுக் திருநீறுவரவழையும் பார்க்கலாம் என்றார். சாயிபாபாவுக்கு கூச்ச சுபாவமாக இருக்கலாம். சட்டையைக் கழற்றாமலே தான் இன்னமும் கைக்கடக்கமான பொருள்களை வரவழைக்கிறார். கோவூர் உண்மையாக ஒரு பெரிய மந்திரவாதி என்று தான் சந்தேகப்படுகிறேன். மற்ற மந்திரவாதிகளுடன் ஏதோ தகராறு காரணமாகப் பேய் பிசாசுகளை எல்லாம் வசியம் பண்ணிக் கட்டி வைத்திருக்கின்றார். கோவூர் இறந்த பிறகும் அவைகளை அவிழ்த்து விட ஆள் இல்லாதாலோ அல்லது வழி மறந்து போனதாலோ என்னவோ பேய் கூட நடமாட்டம் இலங்கையில் இப்போது இல்லாமலே போய்விட்டது. பேய்களை விட மோசமான மனிதர்கள் மட்டும் நடமாடுகிறார்கள். கோவூரினால் ஆவிகளை ஒன்றும் செய்ய முடியவில்லை. எனவே தான் அலாவுதீனுடைய பூதம் விளக்குக்குள் புகுந்த மாதிரி, ஆவிகள் கண்ணாடிக் கிண்ணம் அதாவது கிளாஸ் ஒன்றுக்குள் நுழைந்து இன்னமும் யோசியம் சொல்லுகின்றன.

உங்களில் அனேகருக்கு ஆவி ஜோசியம் பற்றித் தெரிந்திருக்கும் என்றாலும் அது பற்றித் தெரியாதவர்க்கட்காகவும் நம் ஊரில் ஆவிகளைப் படிக்கும் முறையை விளக்குவதற்காகவும் கொஞ்சம் சொல்லி வைக்கிறேன். ஆவிகள் தேவ பாஷைதான் பேசும். முன்னர் சமஸ்கிருதம் தேவ பாஷையாக இருந்து இறந்து விட்டது பிறகு லத்தின் பாஷையாக இருந்தது. அதுவும் இறந்து விட்டது. காசேதான் கடவுளாக இந்த யுகத்தில் வியாபார

> ஆவிகளிடம் யாரும் நாளைக்கு மழை பெய்யுமா? என்ற மாதிரிக் கேள்விகளைக் கேட்பதில்லை. தம்பி சோதனையில் தேறுவாரா?" அல்லது "மச்சாளுக்கு எப்போது கலியாணம்" என்ற விதமான கேள்விகளே அதிகம். இவற்றுக்குப் பதில் சொல்வது சுலபம். பதில் சரியா பிழையா என்று அறிய நீண்ட காலமெடுக்கும். அதற்குள் புதிதாக வேறேதாவது ஜோசியமுறை வந்து சேர்ந்து விடும்

3618511



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மொழியான ஆங்கிலமே தேவ பாஷை அது தெரியாவிட்டால் மோட்சத்துக்குப் போகிற வழியை விசாரித்து அறிய முடியாது. எனவே ஆவிகளுக்குப் பொதுவாக ஆங்கிலம் தெரியும். தமிழ் ஆவிகளுக்கும் முன்பு கொழும்புப்பட்டணம் போன தமிழர்கட்கு நடந்தது போல, தமிழ் அனேகமாக முற்றிலும் மறந்து போய் விடும்.

எனவே ஆவிகளை அழைக்க அவசியமானவை: ஒரு தட்டையான மேசை, வட்டமாக அமையும்படி ஆங்கில எழுத்துக்கள் இருபத்தாறும் பூஜ்யம் முதல் ஒன்பது வரை எண்களும் எழுதப்பட்ட ஒரு தாள். (தெளிவாக எழுதாவிட்டால் ஆவிகள் வாசிக்கக் கஷ்டப்படக் கூடும்). ஆங்கிலம் தெரிந்த ஒருவர், இன்னும் ஓரிருவர். பொதுவாக இரவில் மட்டுமே ஆவிகள் வருகிற காரணத்தால் தீப்பெட்டி சகிதம் சிம்னி விளக்கு அல்லது மெழுகுவர்த்தி தேவைப்படும். மின்சார வெளிச்சம் ஆவிகளுக்குப் பிடிக்காது என்று நினைக்கிறேன்.

செய்முறை:

மேசை மீது ஆங்கில எழுத்துக்கள் கொண்ட தாளை விரித்து வைக்கவும். கண்ணாடி கிளாஸைக் கவிழ்த்து புகையும் ஊதுவத்தியை அதன் வாயிற் பிடித்து புகையை உள்ளிடவும். கவிழ்ந்தபடி கிளாஸைத் தாள் மீது வைக்கவும். இருவர் (விரும்பினால் மூன்று நான்கு பேராலும் பரவாயில்லை) கிளாஸின் அடியில் ஒரு விரலாற் தொட்டபடி இருக்க அவர்களில் ஒருவர் "எங்கள் அன்புக்கும் மதிப்புக்குமுரிய பரிசுத்தமான ஆவியே, நீர் எங்கள் வேண்டுதலுக்குச் செவிசாய்த்து இங்கு வந்தருள்வீராக' என்று ஆங்கிலத்திற் சொல்ல வேண்டும். கொஞ்ச நேரத்தில் கிளாஸ் தாறுமாறாகத் தாவி ஓடத் தொடங்கும். அப்போது 'பரிசுத்தமான ஆவியே நீர் யாரென்று அடையாளங் கூறி யருள்வீராக" என்று ஆங்கிலத்திற் கேட்டதும் ஆவி தன் பெயரை ஆங்கிலத்தில் எழுத்துக் கூட்டிக் காட்டும். ஆவிகளுக்கு நியூமரோலொஜி என்கிற எண் சாத்திரம் தெரியாது அல்லது அதில் நம்பிக்கை இல்லை. அவை இந்த ஊரில் நியூமரோலொஜி வந்து சேரமுன் பேர்கள் எவ்வாறு எழுத்துக் கூட்டப்பட்டனவோ அந்த மாதிரியே தமது பேரை எழுதிக்காட்டின. சிங்கள ஆவிகள் தமது சாதிகட்கு ஏற்ற விதமாக வேறு விதமான ஆங்கில எழுத்துக் கூட்டல் முறைகளைத் தொடர்ந்தும் பாவிக்கிறதாக அறிகிறேன். (உதாரணமாக குணவர்தன என்ற பேர் சிங்களத்தில் ஒரே விதமாக எழுதப்பட்டாலும், சாதிக்கேற்ப, ஆங்கிலத்தில் எழுதும் முறை வேறுபடும், சிங்களவர்கள் மத்தியில் இன்னும் நியூமரோலொஜி அதிகம் பரவவில்லை. இது பற்றிப் பிறகு பேசுவோம்.)

எங்கள் வீட்டிற் சில நாட்களாக ஆவி ஜோசியம் கொடிகட்டிப் பறந்தது. அயல் வீட்டிலுள்ள ஒரு உறவினர் தான் ஆவிகளைப் கூப்பிட்டுப் பேசுவார். அவர் கிளாஸைத் தன் கையால் தள்ளுவதாக எனக்குள் மிகுந்த சந்தேகம். வயதுக்கு மூத்தவர்களிடம் அது பற்றி வம்பு மீறிப் பேச முடியாத ஒரு யுகம் அது. எனவே எனக்கொரு யோசனை பிறந்தது. அவருடன் நானும் உட்கார்ந்து ஆவி யோசியம் பார்த்தால் அவர் தள்ளுகிறாரா இல்லையா என்று தெரிந்து விடும். இதற்கான சந்தர்ப்பம் வர மூன்று நான்கு நாட்கள் போயின. ஒரு நாள் ஆவிகளைக் கூப்பிடுகிற வழமையான பங்காளி வரத் தவறி விட்டார். மற்றவர்களுக்கு ஆவிகள் பற்றி நிச்சயமான அபிப்பிராயம் இல்லாவிட்டாலும் சிறிது பயம் இருந்தது. எனவே நான் முன் வந்தேன். பேய் பிசாசுகளில் நம்பிக்கை இல்லாத என்னிடம் ஆவிகள் வருமா என்று எல்லாருக்கும் ஐமிச்சம். இருந்தாலும் என்னை ஆவிகளுடன் பேச அனுமதித்தனர். மேசையடியில் அமர்ந்த இரண்டு நிமிஷத்திலேயே பிரதான பங்காளி கிளாஸைத் தள்ளி இழுத்துக் கொண்டு போவதை உணர்ந்தேன். முதலில் அவருக்கு எதிரான திசையில் கிளாஸைத் தள்ளினேன். பிறகு வேறொரு யோசனை வந்தது. எனவே நான் படித்த பிரயோக கணிதத்தை உபயோகித்து அவர் தள்ளிய திசைக்குப் பக்கவாட்டாகத் தள்ளி வேறு எழுத்துக்களை நோக்கி கிளாஸை நகர்த்தினேன். கிளாஸை நான் நகர்த்துகிறேனோ என்று கேட்கும் தோரணையில் என் முன்னால அமர்ந்திருந்தவர் புருவத்தை உயர்த்தினார். அப்பாவி போல முழித்தேன். அதற்கு பிறகு ஆவி எனக்கு முற்றாகவே கீழ்படிந்து விட்டது.

ஆவிகளிடம் யாரும் நாளைக்கு மழை பெய்யுமா? என்ற மாதிரிக் கேள்விகளைக் கேட்பதில்லை. தம்பி சோதனையில் தேறுவாரா?" அல்லது "மச்சாளுக்கு எப்போது கலியாணம்" என்ற விதமான கேள்விகளே அதிகம். இவற்றுக்குப் பதில் சொல்வது சுலபம். பதில் சரியா பிழையா என்று அறிய நீண்ட காலமெடுக்கும். அதற்குள் புதிதாக வேறேதாவது ஜோசியமுறை வந்து சேர்ந்து விடும் என்றாலும் என் உற்சாகம் கரை புரண்டு ஓடியதால், ஒரு நாள் எஸ்:டபிள்யூ.ஆர். டி பண்டார நாயக்காவுடைய ஆவியை வரவழைத்து விட்டேன்.

அவரிடம் போய் யாராவது "அக்காவுக்கு என்ன குழந்தை பிறக்கும்? " என்று கேட்க முடியுமா? எனவே மொழிப் பிரச்சனை, இனக்கலவரம் போல விஷயங்கள் பற்றிக் கேட்கப்பட்டது. அந்த மனிதர், ஆவி உலகத்துக்குப் போன பிறகு தன் அரசியலை மிகவும் மாற்றி விட்டார். தமிழர்கட்கு மிகவும் திருப்திகரமான முறையிலேயே பதில்கள் வந்தன. ஒரு உறவினர் மட்டும் ஒரு சங்கடமான கேள்வியைக் கேட்டு வைத்தார். "பாராளுமன்றம் எப்போது கலைக்கப்படும்?" என்ற கேள்வி பண்டாரநாயக்காவின் ஆவிக்கு விளங்கினாலும் எனக்கு விளங்கவில்லை. தேர்தல் எப்போது என்று கேட்டிருந்தால் ஒருபடியாகச் சமாளித்திருப்பேன். பாராளுமன்றம் எப்போது இல்லாது ஒழியும் என்ற விதமாகக் கேள்வியை விளங்கிக் கொண்டதால் 2036 என்ற விதமாக ஒரு பதிலை பண்டாரநாயக்காவின் ஆவி சொன்னது. ஒருவேளை இதற்குப் பதில் சொல்ல ஆவி விரும்பவில்லை என்று எல்லாரும் நினைத்தார்கள் அதற்குப் பிறகு ஆவிகளுடன் பேசுவதில் என் உற்சாகம் குறைந்து விட்டது. அதைவிட விஞ்ஞான ரீதியான ஜோசியங்களும் வரத் தொடங்கிவிட்டன. எனவே ஆவிகளை அவற்றின் பாட்டில் விட்டுவிட்டு எல்லாரும் தங்கள் பேர்களை மாற்றுவதில் மும்முரமாக ஈடுபட்டார்கள்.

என்னுடைய பேரான 3618511 க்கும் தாயகத்தின் பேரான 45111314 க்கும் கூட்டு எண்கள் முறையே 25,20 நன்றாக ஒத்துவரும் என்கிறது எண் ஜோசியம். எனவே இப்போதைக்குப் பேரை மாற்றும் உத்தேசமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சுழலும் உலகம்

# தென்கிழக்காசிய நாடுகளில் சீன இன மக்களுக்கெதிரான வன்முறைகள்

தி.உமாகாந்தன்

தென்கிழக்கு ஆசியாவின் பல்வேறு நாடுகளில் சிறுபான்மையினராக வாழ்ந்து வரும் சீன இனத்தவர்களுக்கெதிராக சமீபகாலங்களாக மிக மோசமான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டு வருகின்றன. இவற்றின் ஒரு அம்சமாக கடந்த மாதம் இந்தோனேசியாவின் மொன் நகரிலுள்ள சீன வர்த்தகர்கள் ஏழைத் தொழிலாளர்களால் தாக்கப்பட்டனர். அவர்களது உடைமைகள் சூறையாடப்பட்டன. குண்டர்கள் கூட்டம் ஆயுதங்களுடன் வீதிகள் தோறும் திரிந்து சீன இனத்தவர் மீது வன்முறை புரிந்து சீன வர்த்தகரும் ஒரு இரசாயனத் தொழிற்சாலையின் உரிமையாளருமாகிய குவோக் ஜோலிப் குண்டர் கூட்டத்திலிருந்து தமது காரில் தப்பிச் செல்ல முயன்றபோது வெட்டிக் கொல்லப்பட்டார். நூற்றுக் கணக்கான கடைகளும், வீடுகளும் தாக்குதலுக்குள்ளாகின. வாகனங்கள் தீயிலிடப்பட்டன இராணுவம் அழைக்கப்பட்டு பலர் கைது செய்யப்பட்டே அமைதி நிலை கொண்வரப்பட்டது. ஆனால் இது ஒரு தற்காலிக அமைதி என்றே கருதப்படுகிறது.

வெளியில் உள்ளவர்களின் பார்வைக்கு தென் கிழக்காசியா பிரச்சனைகள் இல்லாத, பொருளாதாரச் செழுமை கொண்ட இடமாகக் கருதபட்டபோதும் தற்போது சீனச் சிறுபான்மை மக்களுக்கெதிராக இழைக்கப்படும் வன்முறைகள் விரைவில் தென்கிழக்காசியாவை பிரச்சனைகளின் களமாக மாற்றலாம் எனக் கருதப்படுகிறது. இந்தோனேசியாவிலும், இதர தென்கிழக்காசியாவிலும் குடியேறியுள்ள சீன இனம் வளர்ச்சிப் பாதையிலேயே செல்கிறது. இதனை மிகக் குறைந்த சம்பளத்தில் வாழ்க்கை நடத்தும் உள்ளூர் மக்களால் சீரணிக்க முடியவில்லை. அதுமட்டுமல்ல சீன இனத்தவரின் அபரிமிதவளர்ச்சி உள்ளூரவர்களை அச்சம் கொள்ள வைத்ததன் விளைவுகளே இந்த வன்முறைகள்.

ஏற்கனவே சீனாவின் அதீத பொருளாதார வளர்ச்சி தென்கிழக்காசிய நாடுகளை மிரள வைத்துள்ளது. சீனாவின் நிழலில் தாங்கள் தங்கவேண்டிய காலம் வந்துவிடுமோ என இந்தநாடுகள் பீதியடைய ஆரம்பித்துள்ளன. இந்தோனேசியாவில் நடந்த சமீபத்திய பிரச்சனையில் இந்தோனேசிய அரசு நடந்த முறை குறித்து சீன அரசு மிகக்கடுமையான கண்டன அறிக்கை ஒன்றை விடுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய நிலையில் தென்கிழக்காசிய நாடுகளில் 22 மில்லியன் சீன இனத்தவர்கள் உள்ளனர். வியட்நாமில் 1 மில்லியன் சீனர்கள் உள்ளனர். இது வியட்நாமின் சனத்தொகையில் 1.5%. தாய்லாந்திலோ 7 தொடக்கம் 8 மில்லியன் சீன இனத்தவர்கள் உள்ளனர். இது தாய்லாந்தின் சனத்தொகையின் 12%. இந்தோனேசியாவில் 6 மில்லியன் சீன இனத்தவர்கள் உள்ளனர். இது சனத்தொகையின் 2.7% மாகும். சிங்கப்பூரிலோ 2.1 மில்லியன் சீன இனத்தவர்கள் வாழ்கின்றார்கள். இது சிங்கப்பூரின் சனத்தொகையின் 77%மாகும். மலேசியாவில் 5.4 மில்லியன் சீன இனத்தவர் வாழ்கிறார்கள். இது மலேசிய சனத்தொகையின் 30%மாகும். இதுபோலவே கம்போடியாவில் 10 ஆயிரம் பேரும், பர்மாவில் பல ஆயிரக்கணக்கானோரும் வாழ்கிறார்கள். 19ம் நூற்றாண்டிலேயே சீனாவை விட்டு வெளியேறிய இந்த இனத்தைவர் தொழில் துறைகளின் கொண்ட ஈடுபாடும், பணம்சேர்ப்பதில் காட்டும் ஆர்வமுமே இன்று இவர்களுக்கு பிரச்சனையாகியுள்ளது. ஆனால் தமது எதிர்காலம் குறித்த பாதுகாப்புக்காக இவர்கள் பணம் சேர்ப்பதில் தீவிரம் காட்டுவதில் தவறு என்ன காணமுடியும்.

தமது கடுமையான உழைப்பினாலும், தொழிலின்மீது கொண்ட விசுவாசத்தாலும் இந்தச் சீன இனம் இன்று தென்கிழக்காசியாவில் கைத்தொழில் உற்பத்தித்துறை, வங்கித்துறை போன்ற பல துறைகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. தங்க நகைகள், பென்ஸ் கார்கள் போன்றவற்றின் மீது இவர்கள் கொண்ட ஆர்வம் இவர்களை சந்தையில் சிறந்த கொள்வனவாளர்களாகவும் மாற்றியுள்ளது.

ஆனால் இவர்கள் மீதான வன்முறைகள் பரவலாக தொடர்ந்து நடந்தபடியே இருக்கின்றன 1965ம் ஆண்டில் இந்தோனேசியாவில் நடந்த பயங்கரச்சம்பவத்தை எப்படி இலகுவில் மறக்கமுடியும். கம்யூனிச எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்கள் குறிப்பாக ஜாவா மற்றும் பாலி நகர்களில் வாழ்ந்த சீன இனத்தவர் மீது நடத்திய கொலை வெறியாட்டங்களில் 5 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். பல்வேறு இனங்களும் கலந்து வாழும் மலேசியாவில் சீன இனத்தவரது தொகை சனத்தொகையின் 30%. 1969 இல் கோலாம்பூரில் உள்ள சீனர்கள் பெருமளவு வாழும் புறநகரில் மேற்கொள்ளப்பட்ட வன்முறையில் 100க்கும் மேற்பட்ட சீன இனத்தவர்கள் கொல்லப்பட்டனர். 1987ம் ஆண்டில் மலே இளைஞர்கள் கத்திகள், கம்பிகள், சகிதம் சீன இனத்தவருக்கெதிராக மேற்கொள்ள இருந்த எதிர்ப்பு பேரணி பொலிசாரால் தடைசெய்யப்பட்டது. இல்லையேல் அந்தச் சம்பவத்தில் பெருமளவு சீன இனத்தவர்கள் கொல்லப்பட்டிருப்பார்கள். கம்போடியாவில் வியட்நாமில், ஏன் கலப்புத் திருமணங்கள் மூலமும் மிக நெருக்கமான, உறவுகள் மூலமும் சீன மக்கள் மிக நெருக்கமாக உள்ளூர் மக்களுடன் உறவு கொண்டிருக்கும் தாய்லாந்திலும்கூட இந்த மக்கள் தமது பாதுகாப்பின்மையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று உணர முனைகிருர்கள்.

ஆனுல் கடந்த காலங்களைவிட இப்போது பதட்டம் அதிகரித்திருக்கிறது. ஆசியாவில் அதிகரித்துவரும் சீனுவின் ஆளுமை தங்களனைவரையும் விழுங்கி விடுமோஎன்ற அச்சம் சீன இனத்தவரின்மீது வன்முறையாக விதைக்கப்படுகிறது. உதாரணமாக கடந்தமாதம் இந்தோனேசியாவில் சீன இனத்தவர்மீது வன்முறை மேற்கொள்ளப்பட்டபோது சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் இந்தப்பிரச்சனையை இந்தோனேசியா சரியாக கையாண்டு சமுக ஒழுங்கை நிலை நிறுத்தவேண்டும் என எச்சரித்தார் ஆனுல் ஆர்ப்பாட்டங் களின் போதும், கிளர்ச்சிகளின் போதும் அவற்றை அடக்க சீன அரசு எந்த முறைகளை கையாளுகிறது என்பது தெரிந்ததே. இவைகுறித்து வேறு நாடுகள் விமர்சனங்களை வைத்தால் இவை சீனுவின் உள்விவகாரங்கள், இதில் தலையிடும் உரிமை யாருக்கும் இல்லை என சீன அரசு இறுக்கமாகவும், இரும்புத்த னமாகவும் கூறிவிடும்.

தமது பாதுகாப்பின்மை யையும், தமக்கெதிராக தொடர்ந்து நிகழ்த்தப்படும் வன் செயல்களையும் புரிந்துகொண்ட சீன இனத்தவர்கள் தற்போது சீனுவில் ஏற்பட்டுவரும் பொருளாதார வளர்ச்சியை ஒரு சாதகமான அம்சமாகக்கொண்டு தமது முதலீடுகளை சீனுவை நோக்கி நகர்த்த ஆரம்பித்துள்ளனர். சீனுவை விட்டு வெளியேறிய ஒவ்வொருவரும் பணத்தோடு நாடு திரும்பவேண்டும் என்ற கனவோடுதான் வெளியேறி ஞர்கள். திடீரென்று அந்தக் கனவு நனவாகும் நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. இன்று சீனுவில் ஜப்பானே அமெரிக்காவோ, செய்யும் முதலீடுகளை விட மூன்று மடங்கான முதலீடுகளை வெளிநாடுகளில் வாழும் சீன மக்களே செய்கிருர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனுல் சாதாரண மலே பிரஜைகளின் பார்வையிலோ அல்லது இந்தோனேசியப் பிரஜைகளின் பார்வையிலோ சீன இனத்தவர் வாழும் நாடுகளுக்கு விசுவாசம் இல்லாதவர்கள், வாழும் நாடுகளின் வளங்களைச் சுரண்டி தமது சொந்த நாட்டிற்கு அனுப்புகிருர்கள் என்றுதான் படுகிறது.

தென் கிழக்காசிய நாடுகளில் குடிபெயர்ந்துவாழும் சீன இனத்தவருக்கும் அந்தந்த நாட்டு மக்களுக்குமிடையிலான பொருளா தார இடைவெளி அதிகரிப்பதும், ஆசியாவில் சீனுவின் ஆளுமை அதிகரிப்பதும் சீன இன மக்களுக்கெதிரான வன்செயல்கள் விஸ்தரிக்கப்படுவதற்கான சூழ்நிலை யையே ஏற்படுத்தியுள்ளன.

## டூயட்..

சம்பவமான கொண்டாட்டச் சூழலை அப் பாடல் புறக்கணிப்பதும் என்னவோ மாதிரி இருந்தது.

தபேலா வாசித்துக் காட்டும் கைகள் சாளியின் கறுத்தக் கைகள் அல்ல. எவருடையதோ வெள்ளைக் கைகள். முடிவு மிக மிக மிச் சாதாரண மாமூல் முடிவு. தம்பியின் காதலி அண்ணனதும் (ஒருதலைக்) காதலி. தம்பி இறக்க அண்ணனை ஏற்கிருள் ஆக பல குறைகளுடன் இப்படம் பாலசந்தர் படம் எனச் சொல்ல எந்த ருசுவும் இல்லை.

இப்படி ஒரு மசாலாவை பாலசந்தர் எடுக்க வேண்டிய அவசியம் என்ன? யாரைத் திருப்திப்படுத்த? சிவாஜி கணேசனையா?

இந்தப் படத்திற்கும் பிரபுவே தேவையில்லை. ஆனுல் பிரபுவை வைத்துக் கொண்டே கதை பின்னப்பட்டது புரிகிறது. வசனம் கூட தரமானதாயோ மனதைத்தொடக் கூடியதாயோ இருக்கவில்லை. ஆனுல் பிரபுவை வைத்துக்கொண்டு எழுதப்பட்ட வசனமான "எந்தக் கடையிலே அரிசி வாங்கினீங்கள்?" என்பதும் "வீட்டில் கண்ணுடி இல்லையா?" "முகம் பார்க்கிறது தானே" "இல்லை முழு உருவமும் பார்க்கிறது" என்னும் உரையாடல் ரசிக்கக்கூடியதாய் உள்ளது.

ஒரு பாடலில் வரும் 'நடிப்புக்கு எங்கப்பன்' எனும் வரி சிவாஜியைத் திருப்திப்படுத்த பாலசந்தராலும் வைரமுத்துவாலும் உருவாக்கப் பட்டது என்பது அம் மூவருக்கும் திருப்தியைத் தரலாம். ஆனுல் திரைக் கதை தெருக் கூத்தாய் அமைந்தது ரசிகர்க்குத்தான் புரியும்.

இன்னெரு இடத்தில் தில்லானு மோகனும்பாள் படம் பற்றியும் உரையாடல் அமைகிறது இப்படம் சிவாஜி கணேசனைத் திருப்திப்படுத்தவே எடுக்கப்பட்ட தென்பதற்கு இன்னுெரு சான்று.

இப்படத்தில் பல இடங்களில் பிரபுவிற்கு நடிப்பு ஒத்துவரவில்லை. குறிப்பாக கண்ணீர் விடும் இடங்களில் பிரபுவின் முகம் களிமண்ணுல் செய்து வைத்தது போல் உள்ளது. பாவம் சரியாய் வரவில்லை. இதை ஏன் பாலசந்தர் கண்டு கொள்ளவில்லை.

சிவாஜியே நமஷ்காரம் என பிரபுவின் கால்களில் பாலசந்தர் அட்டாங்கமாய் விழுந்து கிடக்கிருர்.

பாலசந்தர் ஒருமுறை சொன்னுர் தன்னைப் புரிந்து கொண்ட ரசிகர்கட்கு தன் முயற்சிகள் புரியும் என்று. ஆனுல் பாலசந்தர் ரசிகர்களை புரிந்து வைத்துக் கொள்ளவில்லை என்பதற்கு இந்தக் காதல் பாட்டு ஒரு சான்று.

ஒரு காலமும் இல்லாமல் பல பெண்கள் ஆண்களை குழு நடனமும், சண்டைகளும் அறுவை (நகைச்சுவை) யும் கலந்து ஒரு வர்த்தக மசாலாவை பாலசந்தர் முதன் முதல் தந்துள்ளார். அது அவரது இதுநாள் வரை இருந்த சூட்சுமத்தை சிதறடித்து விட்டது. இதனிலும் தரமாய் இனிப்படம் எடுக்க பாலசந்தரால் முடியாவிடில் இத்துடன் ஒதுங்கிக் கொள்வது நல்லது.

தான் எது செய்தாலும் நாம் சாகசமாய் அங்கீகரிப்போம் என்ற இறுமாப்பில் ஒரு சிம்மாசனம் குப்புறச் சாக்கடையுள் குதித்துள்ளது. ஆனுல் நாம் வழிபடுவோர் அல்ல. போற்ற வேண்டியதைப் போற்றுவோம். கண்டிக்க வேண்டியதைக் கண்டிப்போம். இப்போ கண்டிக்க வேண்டிய தருணம். இக் கண்டனம் இது விமர்சனமல்ல கண்டனமே. ஒப்புக் கொள்கின்றேன் முடிவாக டூயட்டில் காதல் பாட்டில் பாலசந்தர் தந்தது.. பூச்சியம் பூச்சியம் பூச்சியமே (கதை வசனம். இயக்கத்தைச் சொல்கிறேன்.)

ஏன் இக் கண்டனம் எனப் பலரும் கேட்கலாம். ஏனெனில் பாலசந்தர் மேல நம்பிக்கை இருந்தது உண்மைதான் ஆனுல் அது இவ் டூயட்டால் சின்னுபின்னமாகிவிட்டது. அதன் காரணம் பாலசந்தர் எம் நம்பிக்கைகளை மதிக்காததால்... எம் நம்பிக்கைகளைப் புரிந்து கொள்ளாததால்.

நம்பிக்கை என்ருல் நிதானம்
பக்தி என்ருல் வெறி.

எனக்கு என்றும் எவர் மேலும் வெறி இருந்ததில்லை.

அதுதான் இப்படிக் கண்டிக்கவும் முடிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாயில்லா ஜீவன்



**மொனிக்கா**

அந்த வேலிக்கருகே உள்ள உம்முநய்மாவின் வீட்டின் கோடியில் நிறைய காளை மாடுகள் கட்டப்பட்டுக் கிடக்கும். அந்த இடமே கறுத்த மண்பரப்பைக்கொண்டு இருக்கும். அங்கும் இங்குமாக சின்ன சின்ன மேடுகள், அதைச்சுற்றி ரோஜா செடிகள். அந்த செடிகளிலே சிவப்பு நிற ரோஜாக்கள் பனித்துளியை சுமந்து காற்றிலே அசைந்தாடிக் கொண்டிருக்கும்.... எனக்கு ஒரு ரோஜா கட்டை தர சொல்லி உம்முநய்மாவிடம் அன்று கேட்டதற்கு இப்ப வெட்டின் பட்டுபோயிடும் என நானா சொன்னர் என சொல்லி மறுத்து விட்டாள். அந்த கோடியில் மருதாணி மரம் கூட பச்சை பசேலென நிற்கின்றது. எனக்கு மருதாணி போட சரியான ஆசை அம்மா திட்டுவா! உம்முநய்மா நோன்புகாலங்களில் கைகளில் பொட்டு, பொட்டாக மருதாணி வைத்திருப்பாள். சிவந்த கைகளுக்கு அழகாயிருக்கும்.

" பசுந்தாயிருக்கா" என அடிக்கடி என்னிடம் கேட்பாள்.

"பசுந்தாவேயில்லை" என சொல்வேன். என்னை கிள்ளிவிட்டு போவாள். அவளுக்கு பதினன்கு வயதிருக்கும். ஆனல் நீட்டுபாவாடை போட்டு தாவணி உடுத்தியிருப்பாள். சிறிய வயதிலிருந்து என்னுடன் பள்ளிக் கூடம் வந்தவள் ஏழாம் வகுப்பிலே பெரிய மனுஷியாகிவிட்டா என அவளை பள்ளி செல்லக்கூடாது என நிறுத்திவிட்டார்கள், முன்பெல்லாம் பள்ளிக்கூடம் போய்வந்த பின்பு குர்ஆனேயும் தூக்கிக்கொண்டு தொழுகை வகுப்புக்கு போய்வருவாள். வரும் போது பள்ளிவாசலில் உள்ள மாமரத்தில் பொறுக்கி வந்த மாம்பிஞ்சுகளை யாருக்கும் தெரியாமல் எடுத்து வந்து தருவாள். அந்த மாம்பிஞ்சுகளின் பால்பட்டு அவளின் உதட்டோரங்களில் காயங்கள் பூத்து கிடக்கும். நானும் முஸ்லீமாயிருந்தால் இவளைப்போல குர்ஆனையும் தூக்கிக்கொண்டு தொழுகைக்கு போய் மாம்பிஞ்சுகள் பொறுக்கி ஓடையிலே விளையாடி. அழகான கற்கள் பொறுக்கி, மாலையாகியதும் வீடு வரலாம். எரிச்சலாக வந்தது. அப்போது எங்களுக்கெண்டா வீடு தாண்டின கோயில் ஒவ்வொறு ஞாயிறும் பாதிரி வந்து ஞானஉபதேச வகுப்பென கோயிலில் அரைமணித்தியாலம் ஏதாவது சொல்லிக் கொடுத்துவிட்டு போவார்.

உம்முநய்மாவின் வீட்டு கோடியில் கட்டப்பட்டிருக்கும் மாடுகளின் முதுகில் எழுத்துகளால் ஏதோ எழுதப்பட்டிருக்கும். அது எப்படி மாட்டின் முதுகில் எழுதுவார்கள் என அப்பாவிடம் கேட்பேன். கம்பியை நெருப்பிலே சூடாக்கி சுட சுட எழுதுவார்களாம். அது அனேகமாய் சிங்கள எழுத்துகளிலே எழுதப்பட்டிருக்கும். மாட்டு சொந்தக்காரன் மாடு காணமல் போகாமல் இருக்க எழுதியிருப் பானே? இலக்கங்கள் எல்லாம் போடப்பட்டிருக்கும். அந்த மாடுகள் எப்படி துடித்திருக்கும். இந்த மனிதர்கள் ஏன் இப்படி, செய்கின்றர்கள் எனக்கு மனதுக்கு கவலையாகயிருக்கும். அந்த மாதிரி இந்த மனிதர்களுக்கும் இப்படி சூடுபோட்டு பெயர் எழுதியிருந்தால் ஆள்மாருட்டம் எல்லாம் செய்ய முடியாது. என அப்போது நினைத்து கொள்வேன்.

இன்று உம்முநய்மாவின் கோடியில் நிற்கும் மாடுகள் அடுத்த நாள் இருக்காது. வேறு மாடுகள் நின்றுக்கொண்டிருக்கும்? எங்கே அந்த மாடுகள்? எனக்குள் பல நாளாக எழுந்த கேள்வி அம்மாவிடம் கேட்டா "உனக்கெதுக்கு இந்தகதையெல்லாம்" என்பார். அப்பாவிடம் கேட்டால் விற்றிருப்பார்கள் என்பார். உம்முநய்மாவின் அம்மா மர்லியா எங்களுடன் நல்ல நேசம் அன்பாக பழகுவார். நோன்பு பெருநாளைக்கு புத்தாடை அணிந்து பலகாரங் களுடன் வந்து நிற்பார். நானும் அவரை உம்மா உம்மா என்றே அழைப்பேன்.

எனது வீட்டை தாண்டி சிறிது தூரம் தொலைவில் அடர்ந்த மரங்களைக் கொண்ட ஒரு காட்டுப்பகுதி போலிருக்கின்றது அதிலொரு சிறிய மண்டபம் போல் அமைந்திருந்தது. அங்கு யாரும் போவதில்லை. உம்முநய்மா மட்டும் அடிக்கடி போய்வருவாள். அவள் போகும் போது உப்புதூள் நிறைய கொண்டுபோய் அவளின் நானாவிடம் கொடுத்து விட்டு வருவாள்.

அன்று அம்மா கொழும்புக்கு போய்விட்டாள், பபி ஆச்சியிடம் நான் வெளியில் விளையாடுவதாக சொல்லிவிட்டு உம்முநய்மா உப்பு கொண்டுபோகும் போது நானும் அவளுடன் வருவதாக சொல்லி கெஞ்சி அவளுடன் சென்றேன். அந்த மண்டபத்துக்கு சென்ற எனக்கு தலைசுற்றியது. நிறைய மாட்டுதோல்கள் உப்புதூள் போட்டு காய வைத்திருந்தார்கள். அந்த தோல் சுருங்காமல் தடிகளால் தோலையும் சேர்த்து நிலத்துடன் குத்தி காயப் போட்டிருந்தார்கள். இரத்தம் தோய்ந்த அந்த மண்பரப்பு கறுத்துப் போய்கிடந்தது. உம்முநய்மாவின் நானா ஏன் இவளைக் கூட்டிவந்தாய் என பேசினன். அவனது கைகள் தோலுறித்த மாட்டை துண்டு துண்டாக வெட்டிக்கொண்டிருந்தது.

உம்முநய்மாவும் நானும் வீடு திரும்பும் போது நான் எதுவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அவளுடன் பேசவில்லை, எனக்கு அந்த ரோஜாசெடிகளின் மத்தியில் நின்ற அத்தனை மாடுகளும் நினைவுக்கு வந்து போயின. கன்றுகள் கூட நின்று கொண்டிருந்தனவே. எனக்கு இப்போதைக்கு அழ வேண்டும் போலிருந்தது.

எப்படி எங்கள் வீட்டில் கோழி வெட்ட கூட சுப்புவைக் கூப்பிடுவாள் அம்மா. இவர்களால் எப்படி இத்தனை மாடுகளை வெட்ட முடிகின்றது? உம்முநய்மா விடம் கேட்டேன் "எப்படி உங்கட நானா மாடு அறுப்பார்" என. 'எங்கள பாக்கவுட மாட்டான் ஆனா முதல்ல தொழுதிட்டு அதுக்கு பொறவு நாலுகாலயும் கட்டிப்போட்டுட்டு, ஒரு பொறிமாதிரி அதற்குள் தலையை உசும்பாமல் வைத்து இரும்பால மண்டையில் அடிப்பார்களாம், பின்பு தலையை வெட்டுவார்கள் அப்போது அது பயங்கரமாய் கடைசியாய் அம்மா என கத்துமாம். அதுக்கு பொறவு அதுக்கு உசுறு இருக்காது ஆனா கழுத்தில வெட்டிய இடத்திலிருந்து ரெத்தம் கொட்டும். அதை ஒரு வாளியில் புடிச்சி கொண்டுவருவான் உம்மா பொரிப்பா. எனக்கும் புடிக்கும். ருசியாயிருக்கும் என்றாள்.

எனக்கு இப்போதைக்கு இவளையும் பிடிக்கவில்லை. ஒருநாளைக்கு அந்த மண்டபத்தருகே போய் ஒளிந்திருந்தால் என்ன? அவர்கள் எப்படி மாட்டை வெட்டுகின்றார்கள் என பார்க்கவேண்டும் என மனசு துடியாய் துடித்தது. அம்மாவிடம் சொன்னாள் விடுவாளா? பபியாச்சியிடம் சொன்னால அவளும் இதுக்கு சம்மதிக்கமாட்டாள். அப்பாவிடம் சொன்னால் பேசுவார். மனசு எதையோ பறிகொடுத்தது போலிருந்தது.

உம்முநய்மாவின் வீட்டு கோடியில் கருத்த நிற கன்று ஒன்று நின்று கொண்டிருந்தது. அதன் கழுத்திலே அழகான சின்னமணி தொங்கிக்கொண்டிருந்தது. அது குனிந்து வைக்கோலை தின்னும் போதெல்லாம் அந்த மணியோசை எங்கும் ஒலித்துக்கொண்டிருந்தது. அதன் முதுகில் கூட இலக்கங்கள் இடப்பட்டிருந்தன. இந்த கறுத்த கன்று ஒரு மாதமாகியும் இதே இடத்தில் நிற்கின்றது. உம்முநய்மா அதுக்கு அரிசி வடித்த கஞ்சியை வாளியில் வைக்கும்போது அது உம்முநய்மாவின் முகத்தை நக்கிவிடும். அவள் அதுக்கு செல்லமாய் அடிப்பாள், அதுக்கு கருப்பு என பெயர் வைத்திருந்தாள். கருப்பு என்றாள் அது அவளைப் பார்க்கும், ஆனால் சிரிக்காது, தலையை அவளின் மீது தேய்த்துக் கொள்ளும். ஆனால் அது கதைக்காது, நான் அதனருகே போய் முதுகை தட்டினேன். அது மௌனமாய் நின்று கொண்டிருந்தது. 'பழக்கமில்ல அதுதான் உங்கள மோந்து பார்க்கல 'என்று சொன்னாள்.

நாட்கள் ஓட ஓட பல மாடுகள் வந்து அங்கே மாயமாய் மறைந்துபோகும், கருப்புவின் மூக்கில் கூட இப்ப மூக்கணாங்கயிறு போட்டு வைத்திருந்தார்கள், குழப்படியாம், கருப்பு இப்போது கொழுத்திருந்தது. இப்போதெல்லாம் தூக்கத்தில் அடிக்கடி திடீர் திடீர் என விழித்துக் கொள்வேன். அன்று விடிய நான்கு மணியிருக்கும் அம்மா என்ற ஒரு சத்தம்.. உம்முநய்மாவின் நானா இந்நேரம் ஒரு மாட்டை அறுத்திருப்பான். அது தான் இறுதியாய் அம்மா என கூப்பிட்டிருக்கின்றது. இத்தனை நாட்கள் நான் உறங்கியிருக்கின்றேன் இந்த நேரம் தான் அம்மா என்று அந்த மாடுகள் அழைக்கும் நேரமோ...... அதற்கு பிறகு உறக்கம் வரவில்லை... சேவல் ஒன்று கூவி செட்டை அடித்து ஓய்ந்தது. காகங்கள் கரைய தொடங்கின.. சூரியனின் மெல்லிய கதிர்கள் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் விழித்துக்கொண்டேன். பபி ஆச்சி முற்றத்தை பெருக்கிக் கொண்டிருந்தாள்....

இந்த நேரம் உம்முநய்மாவின் நானா கருப்புவை ஆற்றங்கரைக்கு கொண்டுபோய் குளிப்பாட்டி வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போய் கொண்டிருந்தான். அசைந்து அசைந்து நடந்து சென்று கொண்டிருந்த மாடுகளின் நடுவே கருப்பு மெல்ல மெல்ல நடந்து சென்று கொண்டிருந்தது. அவனது கைகளில் உள்ள தடியால் கருப்புவின் முதுகில் சுளீர் என ஒரு அடி விழுகிறது. கருப்பு முன்னோக்கி வேகமாய் பாய்ந்து வேகமாய் நடக்கின்றது.

நேரம் ஓடிக்கொண்டிருக்க... பபி ஆச்சி நெல் குத்திக் கொண்டிருந்தாள்....... ஆச்சி நானும் குத்தி தரவா என கெஞ்சினேன். தன் ஒசறியால வியர்வையை துடைத்துக்கொண்டு அவளது வெற்றிலைபையிலிருந்து வெற்றிலை எடுத்துப் போட்டுக 'கொண்டு என்னிடம் உலக்கையை தந்தாள். எத்தனை பாரம் எப்படித்தான் இந்த ஆச்சி வேகமாய் கைகளை மாற்றி மாற்றி இடிக்கிறாளோ... நான் சிரமப்பட்டு தூக்கி ஒன்றுபோட்டேன் நெல்மணிகள் நிலத்திலே சிதறின... உலக்கையை பிடுங்கிக்கொண்டு விரட்டிவிட்டாள்.

அவளின் முகத்தை பார்த்தேன். மெதுவாக அவள் சிரித்துக 'கொண்டாள். மெல்லிய இருள் உம்முநய்மா குர்ஆனையும் எடுத்துக் கொண்டு என்னிடம் ஒரு மாங்காய் பிஞ்சைத் தந்தாள்....

அவளது முகத்தில் ஏதோ ஒரு சோகம் ஏன் உம்மா அடித்தாவா? என்றேன்..

'சொணங்கி போனா பேசுவா எனக்கு வூட்டுக்கு போவ புடிக்கல"

"ஏன்' என்றேன்

" வெள்ளனக்கி (காலையில்) கருப்புவ நானா அறுக்கப்போறான்"

என் மனதுக்குள் சுளீர் என ஏதோ ஒருதையல்.... அவள் போய்விட்டாள்.

ஆச்சியிடம் போனேன் "ஆச்சி " "ஆச்சி" இரண்டுமுறை அழைத்தேன். உம் என்றாள்

" ஆ-ச்-சி " கேள்விக்குறியுடன் என்னைப்பார்த்தாள்

"நாளைக்கு உம்முநய்மா வீட்டுல உள்ள கருப்புவ அறுக்கப் போறாங்களாம்"

"நோனாட்ட பிஸ்சுத ஒயாகே வெட பலன்ன" (நோனாவுக்கு பயித்தியமா உங்கட வேலைய பாருங்க ) என்றாள்.

இருள் வேகமாய் சூழ்ந்துக்கொண்டது. இன்று ஏன் வேகமாய் விடிந்து விடும் அந்த கருப்பு அறுக்கப்படும்.... எனக்கு கத்தி அழவேண்டும் போலிருந்தது. கருப்புக்கு இந்த விடயம் தெரிந்திருக்குமா? ஐயோ விடிந்தால் இந்த கருப்புவின் கால்களை கட்டுவார்கள்.. பின்பு தலையை அந்த பொறிக்குள் வைத்து அடித்து வெட்டி, இரத்தம் சொட்ட சொட்ட, எனக்கு உடம்பு இப்போது உஷ்ணமாய் கொதித்தது... இரவு பத்துமணியிருக்கும். வீட்டில் பத்துமணியானால் எல்லோரும் ஜெபம் சொல்ல உட்கார வேண்டும். தலையில் முக்காடு போட்டிருக்க வேண்டும். தேவமாதா மாதிரி .....

எல்லாம் வல்ல இறைவனிடமும்
சகோதரரே உங்களிடமும்
நான் பாவியென்று ஏற்றுக 'கொள்கின்றேன்
ஏனெனில் என் சிந்தனையாலும்
சொல்லாலும்
செயலாலும் கடமைகள் தவறியதாலும்
பாவங்கள் பலசெய்தேன். ஜெபம்

www.tamilarangam.net

தொடர்கின்றது.. மெதுவாக குசினிப்பக்கம் நகர்கின்றேன்.... இந்த ஜெபத்துக்கு பின்னுல் பல ஜெபங்கள் சொல்லப்படும்.. பின்பு பாடல் உரக்க பாடப்படும்....

அந்த சிறிய கத்தி என் கையில்... நான் போட்டிருந்த கருப்பு சட்டை... கருப்பு முக்காடு... என் நிறமும் கருப்பல்லவா? யாருக்கும் தெரியாது சின்ன உருவம். ... நிலவை கருப்பு மேகங்கள் மறைத்துக் கொண்டிருக்க... அந்த வேலியின் முட்கம்பிகளை சிறிது தூக்கி உள்ளே நுழைகின்றேன்.... சின்ன நட்சத்திரங்களில் உம்முநய்மாவின் கோடியில் அழகான ரோஜாக்கள் என்னை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன. நிறைய வெள்ளை மாடுகள், மண்நிறமாடுகள் எல்லாம் மங்கல் நிறமாய் நிற்க..இது கருப்பின் இடம்தான் இதோ.. கருப்பு ஒரு ஓரமாய் நின்று அசைபோட்டுக் கொண்டிருந்தது.

'விடிந்தால் தான் மௌத்தாகப் போகப்போகின்றேன் என அதற்கு தெரியுமோ தெரியாது" என்று உம்முநய்மாவின் குரல் என் காதுகளில் ஒலித்துக 'கொண்டேயிருந்தது. அதன் கழுத்திலே உள்ள கயிறை ஒரு தூணிலே கட்டியிருந்தார்கள். மெதுவாக அறுத்து விடுகின்றேன் அதன் மூக்கு கயிறையும் அறுத்து விடுகின்றேன்.... அது வாலைக் கிளப்பிக் கொண்டு வேகமாய் ஓடி மறைந்து விட்டது. இந்த மரணச்சிறையிலிருந்த விடுதலையென ஓடிவிட்டதா?

வேகமாய் வீட்டுக்குள் நுழைகிறேன். 'ஆ ஆ ஆனந்தம் ஆனந்தமே' என்ற இனிய பாடலை ஜெபித்து முடித்து பாடிக்கொண்டிருந்தார்கள். இரவு நித்திரையின்றி தவித்த எனக்கு காய்ச்சல் பிடித்துக்கொண்டது. விடிந்ததும் உம்முநய்மாவின் வீட்டில் ஒரே பரபரப்பாகயிருந்தது...

"நாசமாய் போவான்கள் மாட்டை களவெடுத்துட்டு போயிட்டான்கள்" என உம்முநய்மாவின் உம்மா கத்திக்கொண்டிருந்தாள்.. அக்கம் பக்கம் மக்கள் கூடி வேடிக்கை பார்க்க தொடங்கிவிட்டனர்... உம்முநய்மா மெதுவாய் வேலியருகே எட்டிப்பார்த்தேன் உம்முநய்மா என்னைக்கண்டு என்னருகே வந்தாள். "யாரோ ஒரு மாட்டை களவெடுத்துட்டு போயிட்டாங்களாம்"

நான் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன்... "இண்டைக்கி வெள்ளன நானு கருப்பு அறுக்க கொண்டு போறநேரம் தான் பார்த்திருக்கான். ஒரு மாட்ட காணயில்ல... அது புதுசா வாங்கின மாடு... திரும்பியும் வராது. வாரதுக்கு எடமும் தெரியாது. கருப்ப களவெடுத்துட்டுபோயிருந்தா திரும்பி வந்திருக்கும்.. ஆனு நானுதான் இன்டைக்கி வெள்ளன கருப்ப அறுத்திட்டானே." என அழாக் குறையாக சொல்லிவிட்டுப் போனுள். அப்படியானுல் நான் கயிறை அறுத்து ஓடவிட்டது வேறு மாடா? கருப்பு இந்நேரம் தோலுரிக்கப்பட்டு இறைச்சி கடைக்கு அனுப்பப்பட்டுக 'கொண்டிருக்கும்.... அதன் தோல் உப்புதூள்களால் காயப் போடப்பட்டிருக்கும்...

இன்று பபிஆச்சி நேரத்தோட வூட்டுக்கு போகனும் நோனு என போய்விட்டாள். போகும் வழியில் கடைக்கு போகனும் என அவளது ஓலை பையையும் எடுத்துக்கொண்டு போனுள்... அம்மா என்னை கடைக்குபோய் இன்று வெள்ளிக் கிழமை மரக்கறி வாங்கி வர சொல்லி ஒரு துண்டில் லிஸ்ட் போட்டுக் கொடுத்தாள்.... அந்த மரக்கறி கடைக்கு அருகே தான் மாட்டிறைச்சி கடையும்... காகங்கள் கடையை வட்டமிட்டுக 'கொண்டிருந்தன. ஒருவர் நின்று இறச்சியை கொத்திக் கொண்டிருந்தார். அவர் கொத்தும் ஒவ்வொரு கொத்துதலிலும் அம்மா... .அம்மா என கருப்பு கத்துவது போலிருந்தது....

சில நாட்களின் பின் உம்முநய்மாவின் வீட்டில் ஒப்பாரி சத்தம்கேட்டு ஓடிப்போய் பார்த்தேன். உம்முநய்மாவின் வாப்பா மௌத்தாக போய்விட்டார் அவர்கள் கதறிக் கொண்டிருந்தார்கள்.... மரணம் எத்துனை கொடூரமானது என்பதை இப்போது உணர்ந்திருப்பார்களா? உம்முநய்மாவின் உம்மா இப்போது வெள்ளைப் புடைவை உடுத்தி மறைவான இடத்தில ஆண்களைப் பார்க்காம ஈரா இருக்கிரு.... அந்த கோடியில் உள்ள மாடுகள் இந்த வீட்டில் மரணம் நிகழ்ந்தது கூட தெரியாமல் அசைபோட்டுக 'கொண்டிருந்தன.... உம்முநய்மா அவளின் வாப்பா அருகில் நின்று கதறிக் கொண்டிருந்தாள்.... அழுதா வாப்பாவுக்கு சொர்க்கம் கிடைக்காது என யாரோ சொல்லி அவளை தேற்ற முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். .. சனத்திரள்களுக்கு மத்தியில் அவளின் வாப்பாவை தூக்கிசென்று புதைத்துவிட்டார்கள்.... உம்முநய்மா அழுது கொண்டேயிருந்தாள்... அவளின் உம்மா வெளியே வராமல் இருந்தாள். விடியலையும், இரவையும் அவள் பார்க்கவில்லை.... ஆனுல் அந்த மாடுகள் கத்தும் சத்தம் அவளது காதுகளுக்கு கேட்டுக்கொண்டிருக்கும். ... அதுகளுக்காக யாரும் அழவேயில்லை.... விடிந்தது. உம்முநய்மாவின் நானு மாடுகளை அந்த மண்டபத்திற்கு கொண்டு சென்றுக் கொண்டிருந்தான்... முன்பெல்லாம் எனக்கு கேட்காத அதன் காலடி சத்தங்கள் இப்போது அருகே கேட்கின்றது....

## விலாசம்..

இங்கே இருக்கும் மட்டும் வெல்பெயரில் இருந்தான். அங்கே போனதும் தான் 'இஞ்சின் ட்ரைவர்' என்றிருக்கிருன். அதென்ன இஞ்சின் என்று நானும் தான் தேடிக் கொண்டிருக்கிறேன்.

அந்த கடிதத்தில் வந்த ஒரு வசனம் தான் பென் கூரியனுக்கு ஆத்திரத்தை கிளப்பி விட்டது. 'அவன் தன்ரை காரை வித்துப் போட்டு கலியாணம் செய்ய வந்திருக்கிருன். நீ எங்கை எப்ப பாக்க வரப் போருய்' என்று அபிசேகம் இருந்தது.

வந்த கோபத்தில் ரங்கனின் றூம் மேட் சிங்கனுக்கு போன் அடித்தேன்.

'டேய் சிங்கா, உவன் ரங்கன் வந்திட்டானே?'

'இல்லையண்ணை, அவனுக்கு போன கிழமை தான் கலியாணம். வாற கிழமை வாருனும்'

'அது சரி, உவன் என்ன காரை வித்துப் போட்டுப் போய் கலியாணம் செய்தவனும். என்ன, பென்ஸ் காரோ வைச்சிருந்தவன்'

'இல்லையண்ணை, உது பழைய கார். போறதுக்கு ஆளிட்ட காசில்லை. அதாலை காரை ஐநூறு டொலருக்கு வித்துப் போட்டுத் தான் ஊருக்குப் போனவன்'

அடப்பாவி.. ஊருக்குப் போறதுக்கே காசில்லாமல் இப்படிச்செய்துபோட்டு அங்கே போய் விலாசம்.. காரை வித்துப் போட்டு வந்தனுன் என்று.

எல்லாம் காலமடா மேனே. உங்களாலை நாங்களல்லே கஷ்டப்பட வேண்டியிருக்கு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வேலிகள்

## கடல்புத்திரன்

இப்படி நிறைய வேலிகள் ஒவ்வொரு கிராமங்களிலேயுமே போடப் பட்டிருக்கின்றன. யாரும் பிடுங்கி எறியவுமில்லை, நிலமைகளை ஆய்வுக்குள்ளாக்கவுமில்லை.

யாழ்ப்பாண நகரத்தில் கூட, சாதிக்குறிச்சிகளை சிறிதளவு இனம் காணமுடியும். அங்கு கம்யூனிஸ்ட் கட்சியினரின் இடையுருத தேனீர் கடை, கோயில், சுடலை திறத்தல் என எடுத்த போராட்டங்களில் சிறிதளவு திருந்திய நிலை காணப்படுகிறது. அத்தாக்கங்கள் கிராமங்கள் வழியேயும் ஒரு வீதமாவது பரவியேயிருந்தன.

வேரோடியிருந்த சாதியத்தால் அவை சீர்த்திருத்தங் களாகவேயிருந்தன. தற்போதைய அரசியல்கட்சிகளைப் போல மனம் ஒப்பாத அரசியலே நிலவின அங்கே கோயில் பிரச்சனை ஒன்றும் பிறகு ஏற்பட்டு மறைந்திருந்தது. திருவிழாக் காலங்களில் ஒரு திருவிழாவை குடிமைச் சமூகத்திற்கு கொடுத்திருந தார்கள். இருந்தாலும் உள் பிரகாரத்திலிருந்து (பிள்ளைத் தண்டில்) சாமியை கட்டி வருவதை மேல் சமூகப் பெடியளே செய்தார்கள். வெளிய வந்து அது கொம்புகளில் கட்டிய பிறகே மற்றச் சமூகம் தூக்கி வெளி வீதியில் வலம் வந்தது.

'பாரம்பரிய பழக்கமான குடிமை வேலைகளை மட்டும் செய்யாதீர்கள். மற்ற வேலைகளை செய்யலாம் என்று பள்ளிக்கூடத்தடியும் அடக்கி வாசித்தது.

நட்ட ஈட்டுப்பிரச்சனையால காணிக்காரரும் பிறகு வரவில்லை. அங்கே.... கலப்பு மணங்களை யாரும் அனுமதிப்பதில்லை. செய்தவர்கள் ஒதுங்கியவர்களாக அல்லது வேறு பிரதேசங்களுக்கு (முல்லைத்தீவுக்கு திருமலை மட்டக்களப்பு, வவுனியா ...) சென்றவர்களாயிருக்கிறார்கள்.

வேலிகள் உறுதியாக நிற்கின்றன.

காலம் ஒடி, இயக்கச்சூழல் கவிந்த போது பெடியள் சாதியமைப்புகளை விட மேலானவை என இயக்கங்கள் மேல் நம்பிக்கை வைத்தார்கள் அதிலே அனைவரும் சகோதரர்களாக இணைதல் நடந்தது.

'சாதியம் இனி எழும்ப முடியாது என்பது அவர்களின் கருத்தாக விருந்தது.

முவரும் வேலிகள் உடைத்தெறியணும் என்ற ஆவேசத்தில் தம் நண்பர்கள் முலம் சிற்சில இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு ஒடினார்கள் . பாபு வீட்டோடு நிற்க, வேலன் ஒன்றிலே, சுரேஷ் இன்னொன்றிலே முத்தன் கூட ஒன்றினுடைய ஆளானான்.

இயக்கங்கள் ஒன்று பட்டிருந்தால் நண்பர்களில் சகோதரத்துவம் மேலும் வளர்ந்திருக்கும் பிளவு பட்டதாலும் அரசியல் புகுந்ததாலும் இப்ப அவர்கள் இயக்கப் பிரதிநிதிகளாக விருக்கிறார்கள்.

முந்தி சாதி இப்ப இயக்கம். பெரியவர்கள் இயக்கத்தைப் பார்க்கவில்லை. சாதியை மட்டும் பார்த்தார்கள். அதே போல பெடியள் புதிதாக பார்க்கிற சாதியாக இயக்கங்கள்...

'எரி சட்டியிலிருந்து தப்பி கொதிக்கிற எண்ணெயில் விழுந்தது போல....!

கோயிலுக்குள் போக விடப்பட்டிருந்தாலும் இந்த வழக்கம் மட்டும் நீடித்தே வந்தது.

காணிப்பிரச்சனையால முறுகல் அடைந்த பெடியள் பிள்ளைத் தண்டையும் நாம் தான் சுமப்போம் என பிரச்சனைப்பட்டார்கள்.

''அதை இந்து இளைஞர் கூட்டத்திலே பேசி முடிவெடுத்த பிறகே சொல்ல முடியும். '' என மற்றவர்களால் இழுத்தடிக்கப்பட்டன.

கடைசியில், தயங்கியே அவ்வுரிமையைக் கொடுத்தார்கள்.

அதே சமயம் இன்னெரு கோவிலே சித்திரா பௌர்ணமிக் கஞ்சி ஊத்தலை' உள்ளே செய்து வந்தவர்கள் திடீரென வெளி வாசலில் வைத்து ஊத்த ஆரம்பித்தார்கள். எல்லாச் சமூகத்தினரையும் அங்கேயிருந்து வாங்க வைத்தார்கள். கோயிலுக்குள் வராது கட்டுப்படுத்த இப்படி ஒரு மாதிரியை பின் பற்றினார்கள்.

மேளக் கச்சேரி வில்லுப்பாட்டுக்கள் வெளி வீதியிலே வைக்கப்பட்டு வர சிறிய கோவிலாக விருந்ததால், அவர்களை யாரும் குறைசொல்ல முடியவில்லை.

கோவில் சம்பவங்களை எழுதி 'தர்ம ஒளி' என வாசிகசாலையில் வேலன் போட்ட கையெழுத்துப் பத்திரிகை கிழித்தெறியப்பட்டது.

'நீ வாசிகசாலையில் எதையும் போடலாம். அது உன்னுடைய உரிமை அதை நாம் எரிக்கலாம் அது எங்கட உரிமை' என்று இன்றைய அரசாங்கம் போல வக்கிரமாக பெடியள் அணி சொல்லியது.

எங்குமே வேலிகள்.

சொந்தச் சமூகத்தில், வெளிச் சமூகத்தில், நட்பு கரம் நீட்டிய முற்போக்கு இளைஞர்கள் மத்தியில எல்லாம் நிறைய வேலிகள்.

மக்கள் விடுதலைக்காக போராடுவதால் எல்லோரும் ஏதோ ஒரு நாள் ஒன்று சேர்வார்கள் என்ற நம்பிக்கையை நெஞ்சில் சுமந்து கொண்டிருக்கிறார்கள்.

முற்றிற்று.....

## கடன் தொல்லை..

அங்குள்ளவர்கள் முறையிடுகிறார்கள். வங்கிகளில் கடனைச் செலுத்த முடியாததால் அவர்கள் தனியாரிடம் அதிக வட்டிக்கு கடன் வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

தங்களது நெல்லுக்கு அதிக விலை தந்து, உரமானயம் மீண்டும் வழங்கப்பட்டு விதைநெல், கிருமிநாசினி, எரிபொருள் போன்றவற்றின் விலைகள் குறைக்கப்பட்டால் இந்தப் பிரச்சனை குறையலாம் என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

இதற்குள் மகாவலிப் பகுதியில் ஒன்பது பிள்ளைகளின் தந்தை வறுமை காரணமாக கடனுக்கு ஒரு ருத்தல் பாணை வாங்கி ஒன்பது துண்டுகளாக பிரித்து தனது பிள்ளைகளுக்கு கொடுத்த பின்னர் தற்கொலை செய்திருக்கிறார். மரணச் செலவுகளை சமாளிக்க முடியாமல் தாய் தங்கள் காணியை விற்று நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இவரது நிலையை அறிந்த பிக்கு ஒருவர் இவருக்கு தற்போது பண உதவி செய்ததுடன் பிள்ளைகளின் படிப்புக்கும் உதவி செய்துள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

ஜேவிபி மீது தடை விதித்ததும் அரசாங்கத்தின் இரட்டை உபாயமாகும். தடை விதிக்கும் காலத்திலும் ஜேவிபி அரசாங்கத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கவில்லை என்பதை அரசாங்கம் அறிந்திருந்தது. ஜேவிபி தமக்கு பெரும் அச்சுறுத்தல் என அரசாங்கம் கண்டிருந்தால் தடைவிதிப்பதுடன் நிறுத்திக் கொள்ளாமல் பெரும் அடக்குமுறை நடவடிக்கைகள் மூலமாக அதனைத் தகர்த்திருக்கவேண்டும் தம்மை நோக்கிவரும் பெரும் அச்சுறுத்தல்களை தகர்த்தெறியாத ஆட்சியாளர்கள் எவராவது உள்ளனரா? ஆட்சியாளருக்கு உண்மையான அச்சுறுத்தல்கள் ஏற்படும்போது அவ்வாறான அமைப்புக்களைத் தடை செய்வதுடன் நிறுத்திக் கொள்ளாமல் அவற்றை பூண்டோடு அழிப்பதற்காக துரத்தித் துரத்தித் தாக்குதலே அனேக நாடுகளின் அனுபவங்களாகும். அன்று ஜேவிபி தடைசெய்யப்படும்போது ஜேவிபி தொடர்பாக அவ்வாறு செயல்பட முடியாதவாறு பெலவீனமான நிலையில் அரசாங்கம் இருக்கவில்லை.

ஆனாலும் அரசாங்கம் ஜேவிபி மீது தடைவிதித்த போதிலும் துரத்தித் துரத்தித் தாக்கவில்லை. கைது செய்யப்படுதல் இடம் பெற்றதாயினும் அது வெறுமனே ஜேவிபி மீதுவிதிக்கப்பட்ட தடை செயல்படுத்தப்படுகிறது என்பதைக் காட்டுவதற்கு மட்டுமேயாகும். அனேக சந்தர்ப்பங்களில் ஆட்சியாளரின் அரசியல் தேவையை விட அவ் அவ் பிரதேசங்களின் பொலீசாரின் செயல்களுக்கேற்பவே கைதுகளும் இடம் பெற்றன. ஜேவிபி மீது தடை விதித்ததன் மூலம் நாட்டில் கலவரத்துக்கும் வன்முறைக்கும் ஆன தயார் நிலை உள்ளது என்னும் தனது குற்றச்சாட்டு உண்மை என காண்பிப்பதே அரசாங்கத்தின் தேவையாகும். ஏனைய தடைவிதிக்கப்பட்ட இருகட்சிகளதும் தடை நீக்கப்பட்டதன் மூலம் இது நன்கு விளங்கியது. ஏனெனில் தடை நீக்கப்பட்ட கட்சிகளுக்கு வன் முறை தொடர்பான வரலாறு இல்லாத காரணத்தினால் அவற்றின் மீது வன்செயல் தொடர்பான குற்றச்சாட்டைச் சுமத்துவது கஷ்டமாகும், ஆனால் ஜேவிபி தொடர்பாக அது இலகுவாகும். மறுபுறம் தனது அடக்கு முறை நடவடிக்கைகளை நியாயப்படுத்த வேண்டுமாயின் அரசாங்கத்துக்கு எதிராக அரச விரோத சக்திகளின் ஊடாக ஓரளவு தூரத்திற்கு வன்முறைச் செயல்களை நிர்மாணிக்க வேண்டும். இந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளவதற்காக ஜேவிபி மீது தடை விதித்தது மட்டுமன்றி ஜேவிபியை வன்முறையை நோக்கித் தூரத்துக்கு வளர்வதற்கு அவகாசத்தை நிர்மாணிக்கவும் வேண்டும் என்பதையும் விளங்கிக் கொண்டே அரசாங்கம் செயல்பட்டது. அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட இவ் அவகாசமும் ஜேவிபியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது.

ஜேவிபியை நோக்கி இழுபட்டு வந்த சக்திகளின் சுபாவம் மேலே கூறப்பட்ட பொருளாதார சமூக அரசியல் நிலமைகளின் கீழ் வளர்ச்சி பெற்ற ஜேவிபி பிரதானமாக வாலிபர் இயக்கமாகும். ஆயினும் 1965-71 காலத்துள் இருந்த இளைஞர் பிரதிநிதித்துவத்தை விட இந்தத் தடவை ஓரளவு குறைந்த பிரதிநிதித்துவத்தையே காண முடிந்தது. 87-89 கிளர்ச்சி தோல்வியின் பின்னர் புனருத்தாரண முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6342 பேர் தொடர்பாக சேகரிக்கப்பட்ட தகவல் தரவைகளின்படி 4789 பேர் அதாவது 75.5% வீதமானோர் 30 வயதுக்கும் குறைந்தவர்களாகும். (புனருத்தாரணம் தொடர்பான விவகார ஆணையாளரது தகவல்களின்படி) இவ் விகிதாசாரத்தைக் கொண்டு ஜேவிபி அங்கத்தவர்களின் உண்மைப் பிரதிநிதித்துவத்தை மதிப்பீடு செய்வது கடினம். புனருத்தாரண முகாம்களில் உள்ள சிலர் ஜேவிபி அங்கத்தவர்களும் அல்லர். அவ்வாறே ஜேவிபியுடன் தொடர்பாயிருந்த மிக அதிகமானோர் கொல்லப்பட்டனர் அவற்றையும் கவனத்தில் கொண்டால் ஜேவிபியினுள் இளைஞர் பிரதிநிதித்துவம் 75% வீதத்திற்கும் அதிகமானதாக இருக்கலாம். எவ்வாறாயினும் மேலே கூறப்பட்ட எண்ணிக்கை ஜே.வி.பி எவ்வாறான சக்தியொன்றின் இயக்கம் என்பதை விளங்கிக் கொள்ள போதுமானது என்று கூறமுடியும்.

1971 ன்போது ஜேவிபியினுள் இளைஞர் அல்லது 30 வயதுக்கு உட்பட்டவர்களின் பிரதிநிதித்துவம் 90.8% வீதமாகும். (71 ஏப்பிரல் கிளர்ச்சி பாகம் 1, ஜனதா சங்கம் வெளியீடு) 1971 காலத்துடன் ஒப்பிடும்போது 88-89 காலத்தில் ஜேவிபியினுள் வயது வந்தவர்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்துள்ளதை தெளிவாக காண முடிந்த போதிலும் அவ் அதிகரிப்பு ஜேவிபி வாலிபர் இயக்கம் என்பதை மறுக்கக் கூடிய அளவு பிரபல்யமான அதிகரிப்பு அல்ல.

தலைமை தொடர்பாக எடுத்துப்பார்க்கும் போது இச் சித்திரத்தில் மாற்றம் ஒன்றைக் காணமுடியும். 1988 ஜேவிபி அரசியல் குழு உறுப்பினர்கள் பதின்மூன்றுபேரில் ஒருவர் மட்டுமே முப்பது வயதுக்கு குறைந்தவராகும். 1971 ல் அரசியல் குழுவில் இருந்த 12 பேரில் இருவர் மட்டுமே 30 வயதுக்கு மேற்பட்டவர்கள், ஏனைய பத்துப்பேரும் இருபத்து எட்டு வயதுக்கும் குறைந்தவர்களாகும் (71 ஏப்பிரல் கிளர்ச்சி பாகம் 1, ஜனதா சங்கம் வெளியீடு) 1988 ல் ஜேவிபியின் அரசியல் குழு உட்பட மத்திய கமிட்டியைச் சார்ந்த சுமார் 45 பேரில் 50 வயதுக்கு குறைவானவர்கள் 9 பேர் மட்டுமே. ஆனால் 1971 ல் அரசியல் குழு அங்கத்தவர்களுக்கும் மாவட்டச் செயலாளர்களுமாக 35 பேர் இருந்தனர் இவர்களில் 32 பேர் 30 வயதுக்கும் குறைவானவர்களாகும். (மேற் குறிப்பிட்ட நூல்) இதற்கமைய தலைமையின் இணைப்பாக்கத்தை பார்க்கும்போது ஜேவிபியை வெறுமனே இளைஞர் இயக்கம் என அழைப்பது கடினமாகும். ஆனால் அதன் பரந்த அங்கத்துவத்தையும் தீவிர ஊழியர்களையும் எடுத்துப்பார்க்கும் போது ஜேவிபி இளைஞர் இயக்கம் என்றே கூறமுடியும்.

ஜே.விபியின் இணைப்பாக்கத்தை நோக்கும் போது அது பிரதானமாக கிராமிய இளைஞர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஸ்தாபனம் எனக் கூறமுடியும். இது தொடர்பாக திட்டவட்டமான புள்ளிவிபரங்கள் எம்மிடம் இல்லாதபோதிலும் புனருத்தாரண முகாம்களில சேகரிக்கப்பட்ட 6342 பேருக்குரிய தகவல்களை மாதிரியாக கொண்டு சில

**வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னாண்டோ**
**சரத் த சில்வா, ரஞ்சித் குமார**

**தமிழாக்கம்; செ. லோகநாதன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதுவான முடிவுகளுக்கு வர முடியும். இதன்படி கொழும்பு கம்பஹா மாவட்டங்களை நகர்புறமாகவும் ஏனைய மாவட்டங்களில் 15% வீதத்தை நகர்ப்புறமாகவும் , ஏனைய மாவட்டங்களில் 15% வீதத்தை நகர்ப்புறமாகவும் (இது அவ்வளவு தூரம் தவறற்ற கணக்கெடுப்பு அல்லாத போதிலும்பொதுவான சித்திரம்ஒன்றை வரைய போதுமானது எனக் கூறமுடியும்) கொண்டு கணித்தால அவற்றுள் 80% வீதம் கிராமியப் பிரதிநிதித்துவம் என்பது தெரிகிறது. ஆனால் கிளர்ச்சி பரவிய பிரதேசங்களைக் கவனத்தில் . கொள்ளும்போது உண்மையிலேயே கிராமியப் பிரதிநிதித்துவம் 80%வீதத்திற்கும் அதிகமாக இருக்கவேண்டும்.

சிலர் இதனை கிராமிய விவசாய இளைஞர்களின் கிளர்ச்சி எனவும் கிராமிய விவசாயத்தின் நெருக்கடி எனவும் அறிமுகப்படுத்துவது சிலவேளை பாரிய அளவில் கிராமிய பிரதிநிதித்துவம் இருந்த காரணத்திலாகவிருக்கலாம் சிலவேளை கிராமிய பிரதிநிதித்துவம் விசாலமாக உள்ளது என்பதால் மட்டும் அது கிராமிய விவசாய இளைஞர்களின் கிளர்ச்சி கிராமிய விவசாய நெருக்கடிகளின் பெறுபேறு ஆகியவாறு கருதமுடியுமா என்பது ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

ஒருபுறம் கிராமிய இளைஞர்கள் அனைவரையும்விவசாயிகள் என எம்மால் படுக்க முடியாது. அவர்களில் பெரும்பான்மையோர் விவசாயிகளாக இருக்கலாம். ஆனாலும் விவசாயிகள் அல்லாத இளைஞர்களும் கணிசமான பகுதியினர் உள்ளனர் என்பதை எம்மால் மறக்கமுடியாது. சில மாவட்டங்களில் விவசாயத்தைப். போன்றே தோட்டப்பயிர்ச்செய்கையும் கணிசமான அளவு பங்கு வகிக்கின்றது. உதாரணமாக கூறுவதாயின் களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, பதுளை, கண்டி மாத்தளை, மாத்தறை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் கணிசமான தொகையினர் (தமிழ் தோட்டத் தொழிலாளர்களைத் தவிர்த்து) தோட்டப் பயிர்ச் செய்கை மூலமாக தமது சீவியத்தை நடாத்துகின்றனர். அவ்வாறே குருநாகலை போன்ற மாவட்டங்களில் தென்னை பயன் பொருட்களுடன் ஒட்டிய கைத் தொழில்களிலும் குறிப்பிடத்தக்க தொகையினர் ஈடுபட்டுள்ளனர். இதைத் தவிர கிராமங்களில் செங்கல் வெட்டுதல், கல் உடைத்தல், சுரங்கத் தொழில் கட்டிட நிர்மாணம் போன்ற மேலும் பல தொழில்கள் மூலமாகவும் கணிசமான தொகையினர் வாழ்க்கையை நகர்த்துகின்றனர். இவர்கள் கிராமிய விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள் என எம்மால் கூற முடியாது. அது மட்டுமல்ல இவ் கிராமிய இளைஞர்களில் கணிசமான தொகையின் விவசாயத்திலோ அல்லது வேறு தொழில்களிலோ ஈடுபடாத வேலை அற்றோராகும். மேலும் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியினர் எழுது வினைஞர், ஆசிரியர் சாரதி ஆகிய பலவேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

ஜேவிபி தலைமையை வேலை செய்வோர், வேலை செய்யாதோர் என பிரித்து பார்க்கும் போது கிராமிய விவசாய இளைஞர்களின் இயக்கம் என எவ்விதத்திலும் கூறமுடியாது. தலைமை மட்டத்தில் இருந்த சுமார் 45 பேர் ஆசிரியர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தரும் அதே மட்டத்து தொழிலில் ஈடுபட்டவர்களும் மூவர், விரிவுரையாளராக, பொலீஸ் கான்ஸ்டபிளாக வண்டில்கள் குத்தகைக்கு வழங்குபவராக, மூவர் அனைவரும் முன்னர் எதுவித தொழிலும் செய்யாதவர்கள் 19 பேர் மாணவர்களாக முழுநேர அரசியலுக்கு வந்தனர். 13 பேர் ஜேவிபியின் பழைய தலைவர்களும் இயக்குனர்களுமாகும். தலைமை மட்டத்தில் ஒரு விவசாயி கூட இருக்கவில்லை.

இவ் அனைத்தையும் கவனத்தில் கொள்ளும்போது இக்கிளர்ச்சியை வெறும். கிராமிய விவசாய இளைஞர்களின் கிளர்ச்சி என அர்த்தப்படுத்துவது கஷ்டமாகும். அது மட்டுமன்றி கிளர்ச்சிக்குள் உள்ளடக்கப பட்டிருந்த கோரிக்கைகளைப் பார்க்கும் போது கிராமிய விவசாயிகளது கோரிக்கையும் தாண்டிச் செல்லும் கோரிக்கைகள் இப் போராட்டத்துள் அடங்கியிருந்ததை விளங்கிக் கொள்ளலாம். பிரதான கோஷமாக விருந்தது "தமிழ் ஈழ பயங்கரவாதத்தை தோற்கடிப்போம்" "இந்திய ஏகாதிபத்தியத்தை துரத்து!" "தேசபக்த குடியரசை நோக்கி முன்னேறுவோம்", "பாசிச எதேச்சாதிகாரியை துரத்துவோம்!" "முதலாவதாக தாய்நாடு, இரண்டாவதாகவே வேலைத்தலம்," "முதலாவதாக தாய்நாடு இரண்டாவதாக படிப்பு" "ஏகாதிபத்தியத்தின் அழிவு, மக்களின் வெற்றி" என்பனவையாகும், சகல தேசபக்தர்களுக்கும் ஜேவிபி வேண்டுகோள் விடுத்தது. கிராமிய விவசாய கோரிக்கைகளும் அவ்வாறே முதலாளித்துவ பகுதியினரின் கோரிக்கைகளும் அவ்வாறே முதலாளித்துவ பகுதியினரின் கோரிக்கைகளும் அடங்கியிருந்தன. வேலை வாய்ப்பு கல்வி வசதிகள் போன்ற கோரிக்கைகளும் உள்ளடக்கப் பட்டிருந்தன. இதன் அர்த்தம் என்னவெனில் சமூக பொருளாதார அரசியல் நெருக்கடிகளால் தோற்றுவிக் கப்பட்ட சகல பிரச்சனைகளுடனும் தொடர்பான கோரிக்கைகளை கிளர்ச்சியில் காணலாம் என்பதாகும்.

இக் கிளர்ச்சியை கிராமிய விவசாயத்தின் நெருக்கடி எனக்கூறுவது குறுகிய அர்த்தப்படுத்தலாகும். கிராமிய விவசாயம் என்பது சிறிய விவசாயம் ஆகும். சிறிய விவசாயம் தகர்வது அல்லது நெருக்கடிக்குள்ளாவது முதலாளித்துவ அமைப்பு முறையின் வளர்ச்சி அல்லது அதன் விசாலிப்பின் தவிர்க்க முடியாத பெறுபேறு காரணமாகவேயாகும். முதலாளித்துவம் வளர்ச்சி பெறும்போது அழிவை நோக்கித் தள்ளப்படும் விவசாயியை பாரிய கைத்தொழில் துறைகளும், பெரும் விவசாயமும் உறிஞ்சிக்கொள்ளுமாயின் பிரச்சனை பாரதூரமாக மாட்டாது. அழிவுறும் விவசாயிகள் பாரிய கைத்தொழிலினதும் பெரும் விவசாயத்தினதும் கூலி உழைப்பாளிகளாக மாற முடியும். உதாரணத்திற்கு ஐரோப்பாவில் முதலாளித்துவம் வளர்ந்த காலகட்டத்தில் சிறு விவசாயம் அழிவுறும்போது தெருவுக்கு வீசப்படும் விவசாயிகளை உறிஞ்சிக்கொள்ள முடிந்ததுபோல் எமது முதலாளித்துவ முறையால் உறிஞ்சிக் கொள்ள முடியாமல் போனது பிரச்சனையாகும். தொழில் துறைகள் பரவாததும் இருந்த பாரிய விவசாயமான தோட்டப் பயிர்ச் செய்கை நெருக்கடிக்குள்ளானதுமே எமது நிலமையாகும். பாரிய விவசாயம் என்பது வளர்ச்சி பெறவில்லை என்று கூறும் அளவிலேயே இருந்தது. ஆதலால் சிறு விவசாயம் அழிவுறும்போது தெருவில் வீழ்வதைத் தவிர செய்வதற்கு வேறு எந்த மாற்றும் விவசாயிக்கு இருக்கவில்லை. முதலாளித்துவம் அவசியமான அளவு வளர்ச்சி பெறுததால் இவ் விவசாயிகளின பிள்ளைகளுக்குக் கூட உற்பத்தித் துறைகளில் வேலை பெறும் வாய்ப்புக்கள் இருக்கவில்லை. ஆதலால் முழு அமைப்பு முறையிலுமே நெருக்கடி உள்ளது. முழு அமைப்பு முறையாலும் தோற்றுவிக்கப்பட்ட நெருக்கடி தவிர்க்க முடியாதவாறு கிராமிய விவசாயத்திலும் பிரதிபலித்தது. ஆதலால் இயன்றவரை கூட அதனால் உழைப்பாளிகளை உறிஞ்சிக் கொள்ள முடியவில்லை. கோடிக்கணக்கில் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட மகாவெலி திட்டத்தாலும் இந் நெருக்கடிக்கு சிகிச்சை அளிக்க முடியவில்லை. ஆதலால் இது வெறும் கிராமிய விவசாயத்தின் நெருக்கடி அல்ல முழு முதலாளித்துவ அமைப்பு முறையினதும் நெருக்கடியாகும்.

தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சொத்தி உபாலியின் கதை

*(1994 மே மாதம் 22 ம் திகதி யுக்திய பத்திரிகைக்கு சிறப்பு நிருபர் ஒருவரால் எழுதப்பட்டது- தமிழாக்கம் செ. லோகநாதன்)*

**பொலீசாரால் 'கயிறு திரிக்க முடிவது' மக்களுக்கு மட்டும்தான், இந்நாட்டு சுதந்திர பத்திரிகையாளரை எருமைகள் என எண்ணிஞல் மக்கள் முன்ஞல் பொலீசாரை அம்மணமாக்கும் ஆற்றல் அவர்களுக்குண்டு.**

சொத்தி உபாலி எனப்படும் அரம்பேவெலகே தொன் உபாலி என்பவரை, கண்டி, கட்டுகஸ்தோட்டை என்னுமிடத்தில் பம்பலப்பிட்டி பொலிசார் "பெரும் முயற்சி செய்து" மறைந்திருந்து பிடித்ததாக கூறப்படுகிறது.

இந்நாட்டின் அரசியல் படுகொலை வரலாற்றில் இந்நபருக்கு கிடைப்பது அதி உயர்ந்த ஸ்தாபனமாகும். அவ்வாறே இலங்கையின் மாபியா கோஷ்டிகள் மத்தியிலும் சொத்தி உபாலி உட்பட தட்டை சோமே கோஷ்டிக்கு கிடைப்பதும் மிக விசேட ஸ்தானமாகும்.

மாற்றுக்கருத்துள்ள அரசியல் வாதிகளைப் பயமுறுத்தல், கடத்திச் செல்லுதல், கொலை செய்தல், உடமைகளை கொள்ளை அடித்தல், பெண்களை கற்பழித்தல், தனிப்பட்ட பிணக்குகளைத் தீர்ப்பதற்காக மனிதர்களை படுகொலை செய்தல், கசிப்பு, ஹெரோயின் கடத்தல் வியாபாரம் ஆகிய உட்பட இங்கு சொல்லப்படாத செயல்கள் அனைத்தும் சொத்தி உபாலி, தட்டைச் சோமே கோஷ்டியினரால் நிகழ்த்தப்பட்டதால் இந்நாட்டு வரலாற்றில் கடுஞ்சினம் என்னும் பல அத்தியாயங்கள் இவர்களுக்காக ஒதுக்கப்படல் வேண்டும்.

இத்தகைய நபரை பம்பலப்பிட்டி பொலீசார் கைது செய்ததை அதிசயமான ஒன்று என மக்கள் கணிக்கின்றனர் என்பதையும் நாம் அறிவோம். பொலீசாரால் 'கயிறு திரிக்க முடிவது' மக்களுக்கு மட்டும்தான், இந்நாட்டு சுதந்திர பத்திரிகையாளரை எருமைகள் என எண்ணிஞல் மக்கள் முன்ஞல் பொலீசாரை அம்மணமாக்கும் ஆற்றல் அவர்களுக்குண்டு.

சொத்தி உபாலியும் தட்டை சோமே சீடனையும் கைது செய்யும் "மாபெரும் நடவடிக்கையில்" ஈடுபட்டது கொழும்பு பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஏ.எஸ். செனவிரத்ன கொழும்பு தெற்கு உதவி பொலீஸ் அத்தியட்சகர் எம்.ஏ. ஞானரத்ன, பம்பலப்பிட்டி பொலீஸ் நிலைய அதிகாரி கிச்சிறி கனேகம ஆகிய மூன்று நபர்களாகும். இவர்களுக்கு சொத்தி உபாலிக்கும் இடையேயான தொடர்புகளை ஆராய்ந்து பார்ப்பது நல்லது. அப்பொழுது தான் இந்த மாபெரும் நடவடிக்கையின் தன்மையை விளங்கிக் கொள்ள முடியும்.

1989ம் ஆண்டளவில் சொத்தி உபாலிக்கும் கொழும்பு பிரதேசத்தின் உயர் பொலீஸ் அதிகாரிக்கும் இடையில் பழக்கம் ஆரம்பமாகியது. அப்பொலீஸ் அதிகாரியை ஙஞங என நாம் எடுத்துக் கொள்வோம். அக்காலகட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் வீடமைப்பு நிருமாணத்துறை அமைச்சராகவும் இருந்த சிறிசேன அவர்களின் வலது கரம் போன்ற நபர்தான் சொத்தி உபாலி. ஜனதிபதி பிரேமதாசவுடனும் சொத்தி உபாலி நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார். சொத்தி உபாலிக்கு இருந்த அரசியல் செல்வாக்குடன் ஒப்பிடும்போது 'S' போன்ற நபர்கள் கொசு என்றே கூறமுடியும்.
தனக்கு எவ்வளவு செல்வாக்கு இருந்தாலும் கூட 'S' போன்ற நபர்களிடம் இருந்தும் உதவி பெறலாம் என சொத்தி உபாலி எண்ணியிருக்கலாம். ஆதலால் நட்பை கூட்டும் நோக்குடன் தினமும் தனது சீடர்கள் மூலமாக 'S' இனுடைய வீட்டுக்கு இறைச்சி, மீன், மளிகைப் பொருட்களை அனுப்புவதை சொத்தி உபாலி தவறவிடவில்லை.

பிரதிப் பொலீஸ் மா அதிபரான 'S' இன் கொஹுவல என்னும் இடத்தில் அமைந்துள்ள ஆடம்பரமான வீட்டுக்காக செலவழித்த பணத்தை பார்க்கும் போது அவ்வாருன மாளிகை ஒன்று அரசாங்க சம்பளம் பெறும் உத்தியோகத்தஞல் கட்ட முடியுமா என்பது பெரும் சந்தேகத்துக்கு உரியதாகும். இவ் வீட்டு மண்டபத்துள் விரிக்கப்பட்டுள்ள பட்டுக்கம்பளத்தை 'S' க்கு அன்பளிப்புச் செய்தது யார் என்பதும் உரையாடப்பட வேண்டிய விடயமாகும். தூள் மன்னன் என்று பெயர் எடுத்துள்ள கும்பனித் தெருவைச் சார்ந்த டேலு என்பவஞல் அனேக பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு இவ்வாருன அன்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொலிசாருக்கும் காடைக் கோஷ்டிக்கும் இடையே இவ்வாருன தேன் நிலவுக்கு 1989 ல் நிக்கவெரட்டிய வங்கியை கொள்ளையடித்ததன் பின்னரே வழி சமைக்கப்பட்டது. இவ்வங்கியை தாக்கிய கொள்ளைக் கோஷ்டியால் பணமும் கிலோ கணக்கில் தங்கமும் கொள்ளையடிக்கப்பட்டன. கொள்ளையடிக்கப்பட்ட பண்டங்களை எடுத்துச் செல்லும் போது பிரதிப் பொலீஸ் அதிபர் செனவிரத்ன. உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஞானரத்ன உட்பட பொலீஸ் அதிகாரிகளால மாளிகாவத்தை முஸ்லிம் மயானத்துக்கு அருகில் கொள்ளை கோஷ்டி மீது துப்பாக்கி பிரயோகம் செய்து நான்கு பேரைக் கொன்றதோடு தங்கமும் பணமும் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட தங்கத்துக்கு நேர்ந்தது என்ன? அன்றிலிருந்து கொள்ளைப் பணத்தின் உருசியை பொலீசார் விளங்கிக் கொண்டதோடு பிரதான மட்டத்து கொள்ளைக் கோஷ்டிகளையும் போஷித்தனர்.

சொத்தி உபாலி கொலைகாரன், கொள்ளைக்காரன், பெண்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ஏ.ஆர்.கே மார்க்கட்

## 31-35 St.Dennis Dr

**(Don Mills/Eglinton)**

## (416) 421 3429

இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
பால் பழங்கள், உடன் மரக்கறி
வகைகள், இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் ...

தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின்
ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும்
விற்பனைக்கும் பெறலாம்
CD, Audio மலிவு விலையில்

# A.R.K MARKET




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கற்பழிப்பவன் என்பதை செனவிரத்ன, ஞானரத்ன போன்றோர் அறிவர். ஆனாலும் உபாலியின் கோஷ்டியால் தாமும் கோஷிக்கப்படுவதால் அவர்கள் மௌனம் சாதித்தனர்.

கடந்த பயங்கர சமயத்தின் போது சப்புகஸ்கந்த பொலீஸ் மீது தாக்குதல் தொடுத்து பொலீஸ் நிலைய அதிகாரி கொலலப்பட்டதோடு ஆயுதங்களும் கொள்ளையடிக்கப் பட்டன. இச் சம்பவம் ஜேவிபியினால் செய்யப்பட்டது என அன்று அரசாங்கம் அறிவித்தது. அரசாங்கத்தின் அப்பிரச்சாரமே இன்றும் மக்கள் கருத்தாக பரவி உள்ளது. ஆனால் இதன் உண்மையை அறிந்திருந்தது அன்று களனி பொலீஸ் அந்தியட்சகராகவிருந்த டக்ளஸ் பீரிஸ் மட்டுமேயாகும்.

டக்ளஸ் பீரிஸ் அவாகளின் நுண் ஆய்வின்படி இத்தாக்குதல் ஜேவிபியினால் மேற்கொள்ளப படவில்லை என்பது வெளிவந்தது. சொத்தி உபாலி தனது உதவியாளான சப்புகஸ்கந்தவில் வசிக்கும் களுவா என்பவனுடன் சேர்ந்து தமது சீடர்களுடன் சென்றே பொலீஸ் நிலையத்தைத் தாக்கினான் என்பதும் பிரபல்யமான அமைச்சர் ஒருவர் இதனை அறிந்திருந்தார் என்பதும் இவ்விசாரணை மூலம் அம்பலமாகியது. இத் தாக்குதலின் போது பொலீசாரின் துப்பாக்கி பிரயோகத்தில் களுவா பரலோகம் அடைந்ததோடு சொத்தி உபாலி ஓடிவிட்டான்.

சொததி உபாலியை சிக்க வைப்பதற்காக டக்ளஸ் பீரிஸ் எடுக்காத முயற்சிகள் இல்லை மிகப் பிரபல்யமான அரசியல்வாதி ஒருவரதும் பொலீஸ் அதிகாரிகளதும் உதவியும் பாதுகாப்பும் எவ்வித குறையுமின்றி சொத்தி உபாலிக்கு கிடைத்ததால் டக்ளஸ் பீரிஸ் மேற்கொண்ட சகல முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. இத்துடன் நிறுத்திக் கொள்ளாத சிரேட்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் டக்ளஸ் பீரிஸ் அவர்களின் விசாரணை அறிக்கையை பெற்றுக் கொண்டு சப்புகஸ்கந்த பொலீஸ் மீது தொடுத்த தாக்குதல் தொடர்பான விசாரணையை தான் பொறுப்பேற்றார். அல்லது போனால் அவ் அறிக்கை குப்பைக் கூடையுள் போடப்பட்டது.

இதனிடையே கொட்டி காவத்தை சத்தாதிஸ்ஸ பௌத்த அடிகளார் சுட்டுக் கொல்லப்பட்டார். அரசாங்கம் தனது வழமையான தானத்தைப் போன்றே இப்படுகொலையையும் ஜேவிபியின் தலை மீது சுமத்தியது. ஆனால் கொலைகாரன் சொத்தி உபாலியால் வழங்கப்பட்ட பெஜரோ வாகனத்தில் வந்ததாக சிறிது சிறிதாக அம்பலமாகத் தொடங்கியது. இப் பெரும் அடிகளாரின் கொலை நிரந்தரமான இரகசியமாகியது.

சிந்தக அமரசிங்க தனது பரம எதிரி என சொத்தி உபாலியே கூறியுள்ளான். சிந்தகவையும் கொலை செய்து தானும் சாகப்போவதாக சொத்தி உபாலி கூறியுள்ளான்.

சிந்தக அமரசிங்க என்பவன் சொத்தி உபாலியின் பரம விரோதி என்பதை சொத்தி உபாலிக்கு நெருக்கமான இரு பொலீஸ் அதிகாரிகள் அறிவர். இதனால கட்டான பொலீசாரால் கைது செய்யப்பட்ட சிந்தக அமரசிங்கவை உடனடியாக சி.ஐ.டி தலைமையகத்துக்கு பாரமளிக்குமாறு அவர்கள் கட்டளையிட்டனர். அப்போது அங்கு உதவி பொலீஸ் அத்தியட்சகராக உபாலிக்கு நெருக்கமான ஒருவரே கடமையாற்றினர்.

சிந்தக அமரசிங்கவை சி.ஐ.டி தலைமையகத்துக்கு பாரம் கொடுத்த பின்னர் இத்தகவல் பொலீசாராலேயே சொத்தி உபாலிக்கு அறிவிக்கப்பட்டது. இதன் பின்னர் அங்கு சென்ற சொத்தி உபாலி பெரியதொரு குண்டாந் தடியால் சிந்தக அமரசிங்கவினுடைய உடம்பையும் காலையும் தாக்கினான் கொழும்பு சி.ஐ.டி தலைமையகத்தைச் சார்ந்த பொலீஸ் இன்ஸ்பெக்டர் தேவசுரேந்திர, உதவி பொலீஸ் இன்ஸ்பெக்டர் தென்னக்கோன், சார்ஜன்ட் விஜேரத்ன ஆகிய மூவரும் இத்தாக்குதலின் போது சொத்தி உபாலிக்கு உதவியாகவிருந்தனர் எனவும் கூறப்படுகிறது. இது தொடர்பான வழக்கு விசாரணை ஒன்று நீதிமன்றத்தில் உண்டு.

நாம் இப்போது கித்சிறி கனேகம எனப்படும் பம்பலப்பிட்டி ஓ.ஐ.சி எத்தகைய நபர் என்பதை ஆராய்வோம்.

கித்சிறி கனேகம ஒரு தடவை பொலீசாராலேயே கைது செய்யப்பட்ட நபராகும். அரசாங்க அதிபர் ஒருவரது (அவருக்கு அபகீர்த்தியும் மனவேதனையும் ஏற்படலாம் என்பதால் பெயர் குறிப்பிடாமல் விடுகிறோம்) மனைவியுடன் கெஸ்ட் ஹவுஸ் ஒன்றில் இருக்கும்போது பொலீசார் முற்றுகை இட்டதால் கனேகம பொலீசாரிடம் அகப்பட்டுக கொண்டார். பொலீஸ மா அதிபர் இவ் அதிகாரியை சேவை நீக்கம் செய்தார். ஆனால் உபாலியின் அரசியல் பெரும்புள்ளி கனேகமவுக்கு மீண்டும் தொழில் வழங்குவதற்காக உதவி செய்தார்.

கோனவல சுனில் கொலை செய்யப்பட்ட தினம் சூடுபட்ட மற்ற நபர் என்பதை மறைக்க முடியாது. பிள்ளை ஒன்றை பாடசாலையில் சேர்ப்பதற்கு பிரதேசத்தின் பலம் பொருந்திய அமைச்சர் ஒருவரது உதவியை பெற வேண்டும் என்பதற்காக அவ் உதவியைக் கோரி கோனவல சுனிலை சந்திக்க வந்தது கித்சிறி. கனேகம எனப்படும் இப் பொலீஸ் அதிகாரியின் உறவுச் சகோதரரே அவ்வாறு சூடுபட்ட மற்ற நபராகும்.

இம் மூவரும் "மறைந்திருந்து" சொத்தி உபாலியை கைது செய்தனரா அல்லது இம் மூவரில் ஒருவரது வீட்டில் மறைந்திருந்த இக் கிரிமினல் குற்றவாளியை மக்களது கண்ணில் மண்ணைத் தூவி கவனமாக கட்டுகஸ்தோட்டைக்கு கொண்டு சென்றனரா என்னும் சந்தேகத்தை தீர்த்துக் கொள்வது உங்களுடைய பொறுப்பாகும்.

கைது செய்யப்பட்ட சொத்தி உபாலி, பஸ் வண்டியினுள் சிகரட் ஒன்றை புகைத்த வண்ணமே பத்திரிகையாளரின் கேள்விகளுக்கு பதில் கூறியுள்ளான். ஒரு நாட்டையே பீதிக்குள்ளாக்கிய இச்சந்தேக நபரின் இரு கைகளுக்கும் விலங்கு மாட்டக் கூட எமது பொலிசார் முன்வரவில்லை. அவர்கள் இவ்வளவு தூரம் நாகரீகமான மனிதர்களாக மாறியுள்ளனர். ஆனால் வயிற்றுப்பசியை தாங்கிக் கொள்ள முடியாமல் மரத்திலிருந்து பலாக்காய் ஒன்றை பிடுங்குபவனை தர்மச் சக்கரத்துள் போட்டு எலும்புகளை நொருக்குகின்றனர். பொலீஸ் பெரும்புள்ளிகள் உபாலியின் அடிமையாக மாறியுள்ளதை இதிலிருந்து காணலாம்.

அரம்பேவெலகே தொன் உபாலி என்னும் நபர் எவ்வாறு சொத்தி உபாலியாக மாறினன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதை அறியும் உரிமை மக்களுக்குண்டு. குண்டுத் தாக்குதல் ஒன்றின் மூலமாக தனது கை காயமடைந்ததாக அவன் கூறினுலும் அது உண்மை அல்ல.

மாணிங் டவுனில் அமைந்திருந்த "எரிஸ்டன்" கராஜின் வயதான காவலாளிக்கு புதை குழியிலிருந்து எழும்ப முடியுமாயின இதன் உண்மைக் கதையை நன்ருக அறியலாம்.

"எரிஸ்டன்" கராஜ் என்பது இரும்பு வேலைத் தலமாகும். இங்கு தொன் கணக்கில் இரும்பு சலாகைகளும் கம்பிகளும், எல்லா இடங்களிலும் குவியலாக போடப்பட்டிருக்கும். தொன் உபாலி தனது உதவியாளனுன ஜயந்த என்பவனுடன் சேர்ந்து இவ் வேலைத்தலத்திலுள்ள இரும்புகளை திருடுவது வழக்கம். கள்வன் யார் என்பதை வயதான காவலாளி அறியவில்லை. ஆனுலும் "என்றைக்காவது அகப்படட்டும், அன்றைக்கு நல்லதொரு பாடம் படிப்பிக்கிறேன்" என எண்ணிய காவலாளி இரும்புச் சலாகையை கூர்மையாக்கி வாள் போன்ற ஆயுதம் ஒன்றைச் செய்தார். ஒரு நாள் கள்வர் இருவரும் காவலாளியிடம் மாட்டிக் கொண்டனர். காவலாளி இரும்பு சலாகையினுல் இருவரையும் தாக்கினுர். ஜயந்தவின் காலிலும் கையிலும் காயங்கள் ஏற்பட்டன. தன்னை நோக்கி வந்த அடியை தடுக்க உபாலி கையை உயர்த்தினுன். கையில் பயங்கரமான வெட்டு வீழ்ந்தது.

காயம் குணமடைந்த போதிலும் உபாலியின் கை குணமாகவில்லை அன்றிலிருந்து தான் அறம்பேவெலகே தொன் உபாலி சொத்தி உபாலி என்னும் பெயரில் பிரபல்யமடைந்தான்.

பிரேமதாசாவின் காலத்திலிருந்து விஜேதுங்கவின் காலம் ஆரம்பமாகும் வரை நாட்டின் முதலாம் நம்பர் கிரிமினலாகபெயர் பெற்றிருந்த சொத்தி உபாலி அரசியலில் நுழைந்தது எவ்வாறு என பார்ப்போம்.

இவன் ஜாவத்தையிலுள்ள ஹட்டே (அறுபதாவது) தோட்டத்தில் பிறந்தான். ஜாவத்தை இந்திரே எனப்படும் பிரபல்யமான சண்டியன் இவனது மூத்த சகோதரன். இந்திரே காடை அரசியலின் கையாள் அல்ல. அவன் ஊர் சண்டியன் மட்டும் தான் ஹட்டே தோட்டம் அமைந்துள்ள பிரதேசத்தின் மாநகர சபை உறுப்பினர் பேட்டிரம் ரொட்றிகோ என்பவராகும் இவர் ஐக்கிய தேசியக் கட்சியை சார்ந்தவர். பேட்டிரம் அவர்களுக்கு பின்னுல் போஸ்டர் ஒட்டுவதற்கு, கூச்சல் இடுவதற்கு, கூழ் முட்டை எறிவதற்கு என திரிந்த சொத்தி உபாலிக்கு தனது தமையன இந்திரேயின் சண்டித்தனத்தின் சூடு கொஞ்சம் கொஞ்சமாக பிடித்துக் கொண்டது. இக் காலகட்டத்தில் அறிமுகமான இன்னுமொரு நகரசபை உறுப்பினர் மூலமாக கொழும்பு கிழக்கு (ஐக்கிய தேசியக்கட்சி) பாராளுமன்ற உறுப்பினர் எட்மண்ட் சமரவிக்கிரம அவர்களின் அறிமுகமும் சொத்தி உபாலிக்கு கிடைத்தது.

ஹட்டே தோட்டத்து சேரி வீட்டிலிருந்த சொத்தி உபாலிக்கு பொரளை கோத்தமிபுர தொடர் மாடியில் வீடு கிடைக்க உதவியது எட்மண்ட் சமரவிக்கிரமவாகும். கோத்தமிபுரத்திற்கு வந்த சொத்தி உபாலிக்கு அங்கு ஜஸ்டின் (பிரபல்யமான காட்டுன் ஓவியர் ஜூனுஸ் அவர்களது வாயுள் கைத்துப்பாக்கியை திணித்து கையை கத்தியால் வெட்டியவன்) சுனில்சாந்த போன்ஸேரின் அறிமுகம் கிடைத்தது. இதன் பின்னர் இவர்களைக் கொண்ட கோஷ்டியை உருவாக்கிய சொத்தி உபாலி கசிப்பு ஒன்றை ஆரம்பித்தான். இவ் வியாபாரம் பொரளை, தெமட்டகொடை, ராஜகிரிய, கொட்டியாகொட, மஹறநியர, ஐ.டி.எச் ஆகிய இடங்களில் நடைபெற்றன.

எவ்வாருயினும் சொத்தி உபாலி தினமும பாராளுமன்ற உறுப்பினர் சமரவிக்கிரமவை சந்திக்க சென்ருர். சமரவிக்கிரமவின் நெருங்கிய ஆதரவாளனுக மாறுவதற்கு சொத்தி உபாலிக்கு அவ்வளவு காலம் செல்லவில்லை.

இக் காலகட்டத்தில வீடமைப்பு நிர்மாண அமைச்சிலேயே கூடுதலான கொந்தராத்துக்கள் இருந்தன. வெள்ளை அடித்தல், மண் நிரப்புதல், கட்டிடங்களை உடைத்தல், புல் தரைகள் (வெட்டுப் புல் மூலமாக) அமைத்தல் ஆகிய வேலைகள் இவற்றுள் அடங்கும். சமரவிக்கிரம மூலமாக அமைச்சர் சிறிசேன குரேயை சொத்தி உபாலி அறிந்து கொண்டதோடு குரே தனது அமைச்சுக்குரிய பெண்டர்களை சொத்தி உபாலிக்கு வழங்கினுர். கேட்போரை அதிர்ச்சிக்குள்ளும் பீதிக்குள்ளும் ஆழ்த்திய பயங்கரமான யுகம் ஆரம்பமாகியது இவ் இடத்திலிருந்துதான்.

இக் காலகட்டத்தில தான் பிரேமதாச கம் உதாவ இயக்கத்தை ஆரம்பித்தார். கம் உதாவ இயக்கத்தின் வேலைகளில் பெரும் பங்கு அமைச்சர் குரேயினுடையதாக இருந்ததோடு விழா மைதானங்களுக்கு புல்லுடன் கூடிய மண் கட்டிகளை பதிக்கும் கொந்தராத்தை இவர் சொத்தி உபாலிக்கு வழங்கினுர். சுகததாச விளையாட்டரங்கை நவீன மயப்படுத்தும் காலத்தில் அங்கு புல்லுடன் கூடிய மண்கட்டிகளை பதிக்கும் கொந்தராத்துக்காரராக சொத்தி உபாலியை அமைச்சர் குரே பிரேமதாசவுக்கு அறிமுகப்படுத்தினுர். இதன் பின்னர் சொத்தி உபாலி ஜனுதிபதியினுடைய நெருக்கமான நபராளுன்.

இக்காலத்தில் தான் நுவரேலியாவில் உள்ள கிரகரி வாவியின் சேறு அகற்றும் கருத்திட்டம் ஆரம்பமாகியது. அகற்றப்படும் சேறுகளால் தாழ்ந்த நிலங்கள் நிரம்பின. ஜனுதிபதி பிரேமதாச இக்காணியை கொள்ளை விலைக்கு ஹரியூபட் ஜயக்கொடிக்கு பாரமளித்தார். (பிரேமதாசாவின் மகள் துலாஞ்சலி ஹரியூபட் ஜயக்கொடியின் மகனுன ரோகான் ஜயக்கொடியையே திருமணம் செய்துள்ளார்) இக்காணிகளில் சிறிய, சிறிய நீர்ப்பாசன வேலைகள் புற் தரை பதித்தல் நீர் அரிப்பை தடுத்தல ஆகியவற்றுக்கான கொந்தராத்து பிரேமதாசா அவர்களால் சொத்தி உபாலிக்கு வழங்கப்பட்டது. அத்துடன் நிறுத்திக் கொள்ளாத பிரேமதாச தனது அதிகாரத்தை பயன்படுத்தி சொத்தி உபாலியை ஐக்கிய தேசியக்கட்சியின் நிறைவேற்றுக் குழு அங்கத்தவராகவும் நியமித்தார். இந்நியமனம் அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமாகவிருந்த சிறிசேன குரேயினுல் அங்கீகரிக்கப்பட்டது.

சொத்தி உபாலிக்கு மேலும் ஒரு கொந்தராத்து வழங்கப்பட்டது அதாவது ஜனுதிபதி தேர்தலில் பிரேமதாச வெற்றி பெறுவதற்கு அவசியமான ஆழமே மேல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாகாணத்தில் ஏற்படுத்துவதாகும். அமைச்சர் சிறிசேன குரே அவர்கள் கூறுவதைப் போன்று "சொத்தி உபாலி பிள்ளை" ஜனாதிபதி தேர்தல் போராட்டத்தில் கொழும்பின் நான்கு திக்குகளிலும் போஸ்டர்களை ஒட்டினார். "கொலைகார ஜே.ஆர். ஐத் துரத்துவோம், வாக்களிப்பவர்களுக்கு மரண தண்டனை, வாக்கு அளிக்கவரும் முதல் ஏழு பேருக்கும் மரண தண்டனை" ஆகிய போஸ்டர்களே இந்நாட்களில் கூடுதலாக ஒட்டப்பட்டிருந்தன.

இப் போஸ்டர்ப் புரட்சி மூலமாக மக்கள் மத்தியிலே தேர்தல் குறித்து காணப்பட்ட விருப்பை இல்லாமல் செய்வதற்காக பீதியைப் பரப்பியோர் தமக்கு எதிரானவர்களை படுகொலை செய்யவும் தொடங்கினர். இவ் இலக்குக்கு ராஜகிரிய ஒபேசேகரபுரத்தைச் சார்ந்த அமரசிங்க குடும்பமே முதலாவதாக இரையாகியது.

ராஜகிரியவிலுள்ள மொகம்மதுவின் இறைச்சிக்கடையை பெறுவதற்காக சொத்தி உபாலியும் நோயல் அமரசிங்கவும் டெண்டர் சமர்பித்தனர். டெண்டரில் ஏற்பட்ட பிணக்கு காரணமாகவே இப் படுகொலை இடம்பெற்றது. நோயேல் அமரசிங்க சிந்தக பெரேராவின் சிறிய தகப்பனாகும்.

பிரேமதாச, சிறிசேன குரே போன்ற அரசியல்பெரும்புள்ளிகளின் அரவணைப்பில் வளர்ந்த சொத்தி உபாலி தனக்கிருந்த அரசியல் அதிகாரத்தைப் பாவித்து ஒபேசேகர புரத்திற்குச் சென்று சிந்தகவின் உறவினர்களைப் படு கொலை செய்தான்.

பசில் அமரசிங்க, சிந்தகவின் தந்தையான யூ.எல் பெரேரா, ஜோசப் அமரசிங்க நோயேல் அமரசிங்க, டோனி கிரிஷாந்த, ருவன் அமரசிங்க, எட்வேர்ட் திலகரத்ன ஈவா அமரசிங்க ஆகியோர் சொத்தி உபாலி கோஷ்டியினரால் அவ்வாறாக கொல்லப்பட்டவர்களில் சிலராகும்.

இப் படுகொலைகளுக்கு கோத்தமி புரத்தைச் சார்ந்த மாறு நிஹாலும் சீனு என்பவரும் நேரடியாகவே உதவியாயிருந்தனர். ஒரு நாள் திடீரென கோத்தமிபுரத்தை முற்றுகையிட்ட சிந்தக அமரசிங்க இவ் இருவரையும் சுட்டு கொலைசெய்தான். இது இரத்தத்திற்கு இரத்தத்தால் பழிவாங்கியதாகும்.

**கடந்த காலங்களில் சொத்தி உபாலியால் செய்யப்பட்டது எனக் கூறப்படும் கொலை, தீ வைப்பு, கடத்துதல் கற்பழிப்பு ஆகிய கிரிமினல் குற்றங்களுக்கு எதிராக பொலீசார் ஒரு வார்த்தை கூடப் பேசாதது அரசியல் பெரும்புள்ளிகள் மீதான பயத்தினால் ஆக இருக்கலாம். இன்று பிரேமதாச உயிருடன் இல்லை, சிறிசேன குரேயும் செல்லும் வழி தெரியாமல் திகைக்கின்றார். இதனால் நீர் கொழும்பு சூட்டுடன் சொத்தி உபாலி அனாதையாகி விட்டான். இலங்கையின் முதலாம் நம்பர் மாபியாவை இன்று பொலீசார் கைது செய்துள்ளனர்.**

இவ் மரணச் சடங்குக்கு வந்து துக்கம் விசாரித்த அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொலீஸ் அதிகாரிகளுள் சொத்தி உபாலியை கைது செய்தவரென கூறப்படும் கொழும்பு தெற்கு உதவி பொலீஸ் அத்தியட்சகர் எம்.ஏ. ஞானரத்னவும் ஒருவராவார்.

சிந்தகவின் முழுக் குடும்பத்தையும் அழித்த சொத்தி உபாலியின் இறுதி இலக்கு சிந்தக வாகும். பல தடவைகள் சிந்தகவை கொலை செய்ய நடவடிக்கை எடுத்த போதிலும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் குறி தவறியது.

இறுதியாக சிந்தக அமரசிங்கவை நீர்கொழும் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் கொலை செய்வதற்காக திட்டமிடப்பட்டது. இக் கொலையைச் செய்வதற்காக சொத்தி உபாலியின் சீடனான சமிந்த பத்பேரிய என்பவன் ஈடுபடுத்தப்பட்டான் ஆனால் அவ்விடத்திலும் சிந்தகவின் கொலையாளி தோல்வி கண்டான்.

நீர்கொழும்பு நீதி மன்றத்தில் வெடித்த வேட்டுடன் இதுவரைகாலமும் பாதாள உலகத்தில் சொத்தி உபாலிக்கு இருந்த பலமும் சிதறிப் போயிற்று இது வரையும் மூடி மறைக்கப்பட்ட சொத்தி உபாலியின் காடைத்தனம், இழிவான வேலைகள் எல்லாம் அம்பலத்துக்கு வந்தன. அவனுக்கு எதிராக விசாரணை ஆரம்பமாகியது.

கடந்த காலங்களில் சொத்தி உபாலியால் செய்யப்பட்டது எனக் கூறப்படும் கொலை, தீ வைப்பு, கடத்துதல் கற்பழிப்பு ஆகிய கிரிமினல் குற்றங்களுக்கு எதிராக பொலீசார் ஒரு வார்த்தை கூடப் பேசாதது அரசியல் பெரும்புள்ளிகள் மீதான பயத்தினால் ஆக இருக்கலாம். இன்று பிரேமதாச உயிருடன் இல்லை, சிறிசேன குரேயும் செல்லும் வழி தெரியாமல் திகைக்கின்றார். இதனால் நீர் கொழும்பு சூட்டுடன் சொத்தி உபாலி அனாதையாகி விட்டான். இலங்கையின் முதலாம் நம்பர் மாபியாவை இன்று பொலீசார் கைது செய்துள்ளனர்.

ஆனால் விசாரணைகளுக்கு பொறுப்பாக இருப்பது சொத்தி உபாலிக்கு நெருக்கமானவர்களே. வேறு கிரிமினலல்களுக்கு பொலிசாரால் வழங்கப்படும் 'உபசரணை' சொத்தி உபாலிக்கு வழங்கப்படவில்லை. அதற்கு பதிலாக தலையணை மெத்தை, படுக்கை விரிப்பு, புரியாணி, சிகரட் என்பனவே அவனுக்கு வழங்கப்படுவதாக கூறப்படுகிறது.

அவனுக்கு எதிராக விசாரணை நடாத்தும் இப் பொலீஸ் உத்தியோகத்தர்கள் பத்திரிகை மூலம் அறிக்கை விடுத்து தமது மாற்றுடையையும் சொத்தி உபாலியையும் பாதுகாக்க முயற்சிக்கும் முறையை மறைக்க முடியாது. கள்ளனுடைய அம்மாவிடம் அஞ்சனம் பார்க்கச் செல்வதைப்போன்று "திருபிப்பதற்கு சாட்சியம் இல்லை" எனக்கூறி சொத்தி உபாலியை பிணையில் விடுதலை செய்யவும் கூடும்.

சொத்தி உபாலியின் சம்பவத்தை அவ்வாறு முடிப்பதற்கு இடமளிக்க முடியாது அப்படியாயின் சொத்தி உபாலியின் நிழல் கூடப் படாத நேர்மையான அதிகாரிகள் மூலமாக சம்பவங்களின் வேர்களை ஆராய வேண்டும்.

ஜனாதிபதி டி.பி விஜேதுங்க அண்மையில் விடுத்த அறிக்கையில் பாதாள உலகத்தின் எல்லாக் காடையர்களையும் கைது செய்ய வேண்டும் எனக் கூறியுள்ளார். ஆயினும் கைது செய்வதன் மூலம் மட்டும் இப்பிரச்சனையை தீர்க்க முடியாது. பக்க சார்பு விசாரணை நடாத்தி குற்றவாளிகளை நீதிமன்றத்தில் நிறுத்தும்வரை மக்கள் உன்னிப்பாக கவனம் செலுத்துவர் என்பதை அரசாங்கம் நினைவில் கொள்வது முக்கியமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள்.
எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'

# சங்கக்கடையா? கடைச்சங்கமா?

## அறுஞர் போராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜீ

சமீபத்தில் என் மனதைக் குழப்பிய விடயம் ஒன்று... பொதுமக்கள் கூடும் இடம் ஒன்றுக்கு சென்றிருந்த போது.. .. ஆறு வயதிருக்கக் கூடிய சிறுவன் ஒருவன் Where is daddy? என்று தேடி அலைந்து கொண்டிருந்தான். தமிழ் பண்பாடு காப்பதற்காக மாநாடு இங்கே நடந்து கொண்டிருக்கிறது. (ஒகே.. அது பற்றி பின்னால்..) சிறுவல் ஒருவன் தந்தையைத் தேடுவதற்கு கூட ஆங்கிலத்தில் தேட வேண்டியிருக்கிறதே என்று மன வேதனை கியூறியஸ்க்கு.. தமிழை ஒரு தலைமுறை முற்றாக மறந்து கொண்டிருக்கிறதே என்று கவலை கொள்வ தற்குள்..

இன்னொரு வாண்டு.. வயது சுமார் இரண்டிற்குள் இருக்கலாம்.. அப்பா.. அப்பா.. என்று கூப்பிட்டுக் கொண்டபடி வந்தது. அப்பாவின் பதிலைக் காணோம்.. பொறுமையிழந்து 'அப்பா சனியன், அப்பா சனியன்' என்று உச்சஸ்தாயியில்.. அப்பா கேட்டிருந்தால் நிச்சயம் மேசைக்கு கீழே ஒளிந்திருப்பார்.

தந்தையை சனியன் என்று அழைத்தாலும் தூய தமிழ் பேசுகிறானே என்று மகிழ்ச்சி கொள்ளவா? இல்லை, முதல் சிறுவன் தமிழில் பேசாவிட்டாலும் ஆங்கிலத்திலாவது பண்போடு அழைக்கிறானே என்று திருப்திப்பட்டுக் கொள்ளவா?

★ ★ ★

தமிழ் மொழியும் பண்பாடும் இங்கே காப்பாற்றப்படும் வழிகளைப் பார்க்கும் போது கவலையாக இருக்கிறது. முன்பு சிறுவயதில் அம்புலிமாமா, முத்து காமிக்ஸ் புத்தகங்கள் கிடைத்தால் வகுப்பில் மூன்று பேர் எட்டி எட்டி வாசிப்பார்கள். கியூறியஸின் வேகமான வாசிப்புக்கு ஈடு கொடுக்காததால் திட்டுகின்ற நண்பர்களும் உண்டு. இதைப் போல ஒரு நாள் சப்வேயில் அவசரமாகப் போன போது மூன்று பாடசாலை மாணவர்கள் ரொம்பவும் அக்கறையோடு ஒரு தமிழ் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார்கள். என்ன மகிழ்ச்சியான விடயம்.. தமிழ் புத்தகத்தை வாசிப்பதால் தமிழ் தொடர்ந்து வளரும் என்று பார்த்தேன். என்ன புத்தகம் என்று பார்த்தால் பருவ காலம்.. இதற்கு இவர்கள் ஆங்கில புத்தகம் படித்திருக்கலாம் என்பதா? இல்லை. இந்தப் புத்தகமாயிருந்தாலும் தமிழில் படிக்கிறார்களே என்று திருப்திப்படவா?

★ ★

தமிழ் பண்பாடு என்றதும் ஞாபகம் வருகிறது. சூரிய அழகி பற்றி ரொம்பத்தான் அலட்டிக்கிறார்கள். சில அழகிகளைப் பார்த்தால் உண்மையிலேயே பரிதாபமாக இருக்கிறது. ரொறன்ரோ சண்ணில் வருகின்ற மூணும் பக்க அழகிகள் மாதிரி.. லண்டன் சண்ணில் மேலாடையின்றி 'ரொப்லெஸ்' ஆக வருவதாக சொன்னார்கள். உண்மை பொய் தெரியாது. இதில்தோன்று கின்றவர்கள் பலர் மொடலிங் முயற்சிகளில் ஈடுபடுபவர்கள். எனவே தங்களுக்கு அனுபவம் சேர்ப்பதற்காக இவ்வாறு இலவசமாகத் தோன்றுவதுண்டு.

எத்தனை காலத்திற்கு தான் இந்திய சினிமா நடிகைகளின் படங்களை பொம்மை, குமுதத்திலிருந்து இந்த நகைக்கடைகாரர்களும், புடைவைக் கடைகாரர்களும் வெட்டி ஒட்டி மறுபிரசுரம் செய்வார்கள்? நம்ம மொடலிங் அழகிகளின் படங்களைப் போட்டால் நல்லது தானே, எனவே சுதேசப் பொருட்களை ஆதரியுங்கள் என்ற கோஷம் விரைவில் எழலாம்.

மூணும் பக்க அழகிகளையே விழுங்குகின்ற அளவில், பிளேபோய், பென்ற்ஹவுஸ் சஞ்சிகைகள் நிர்வாணப் படங்களையே வெளியிடுகின்றன. பெரிய நடிகைகள் எல்லாம் ஆடை அவிழ்க்க, களம் அமைத்துக் கொடுத்த சஞ்சிகைகள் அவை.

அமெரிக்காவில் உள்ள தமிழர் ஒருவரின் மகள் இந்த சஞ்சிகை ஒன்றில் நடுப்பக்க அழகியாக போஸ் கொடுத்ததாக நண்பர் ஒருவர் சொன்னார். அவர்கள் முற்றிலும் மேல் நாட்டுப் பாணி யிலான வாழ்வு முறைக்கு மாறிக் கொண்டவர்களாம். பரவாயில்லை. நடுப்பக்க அழகிக்கு இரண்டரை லட்சம் டொலர்கள் கிடைக்கும். பெரிய இடத்து சகவாசம். வெறும் பண்பாடு இதெல்லாம் தருமா என்ற எண்ணம் தோன்றும். பிறகென்ன?

தமிழ் பண்பாடு போகும் போக்கில் 'ரொப்லெஸ்' ஆக என்ன, நிர்வாணமாகவே போஸ் கொடுக்கக் கூடிய நிலையில் பெண்களும் அதைப் பிரசுரித்து பணம் பண்ணக் கூடிய அளவில் புகலிடப் பத்திரிகைகளும் தோன்றக் கூடும். எதற்காக இந்திய இறக்குமதிகளான பருவகாலத்தை வாங்குகிறீர்கள். சுதேச வெளியீடுகளையே வாங்குங்கள் என்ற கோஷம் விரைவில் எழுமோ என்னவோ? யார் கண்டது?

★ ★ ★

ஆனால் இந்த மூணும் பக்க அழகிகளில் கியூறியஸ்க்கு பெரும் ஆர்வமெல்லாம் கிடையாது. கியூறியஸ் ஆர்வத்தோடு பார்ப்பது.. சண்ணில் ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு படம் வருகிறது.. அதைத் தான். முப்பரிமாணப் படத்தை இரு பரிமாணப் பேப்பரில் அச்சிட்டிருக்கிறார்கள். படத்தை உடனே பார்த்தால் ஒன்றும் புரியாது. கொஞ்ச நேரம் கண் மங்கலான நிலையில் பார்த்தால் கண்ணாடிக்குள்ளால் பார்ப்பது போன்ற பிரமை தோன்றும்.. அது வித்தியாசமான அனுபவம்.. முயற்சித்துப் பாருங்கள். இந்தப் படம் உண்மையில் கண்ணையும் மூளையையும் ஏமாற்றும் தந்திரமே. அது எப்படி செயற்படுகிறது என்று





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

முதன்முதலாக சண் அந்தப் படங்களை வெளியிட்ட போது எழுதியிருந்தார்கள். அழகிகளின் முப்பரிமாணங்களான அங்க அளவுகளைப் பார்ப்பதை விட, இந்த முப்பரிமாணப் படங்களைப் பார்ப்பது மேல். சினிமாவிலும், டி.வியிலும் முப்பரிமாணப் படங்களை ஒரு தடவை காட்டியிருந்தார்கள். இதற்கு விசேடமான கண்ணாடி வேண்டும்.

★ ★ ★

தமிழ் பத்திரிகைகளின் நிலைமை கொஞ்சம் போகக் கூடாத பாதாளங்களைத் தொடுவது போல சில தகவல்கள் அடிபடுகின்றன. வர்த்தகர்களிடம் விளம்பரம் கேட்கும் போது, அவர்கள் மறுத்தால் 'இதைப் பற்றி நாங்கள் பேப்பரில் எழுதுவோம்' என்றார்களாம். எப்படியிருக்கிறது? விளைவு ஒரு வர்த்தகர் தனது நிறுவனத்தில் பிரஸ்தாப பத்திரிகையை விற்பனைக்கு/ வினியோகத்திற்கு வைக்க மறுத்துவிட்டார். இப்போது அங்கு விற்பனை/ வினியோகத்திற்கு வைப்பதற்கு பணம் தருகிறோம் என்று வர்த்தகரை கேட்கிற அளவுக்கு சமரசத்திற்கு சென்று விட்டார்களாம்.

ஒன்று இது ஒரு வகையில் பிளாக் மெயிலிங். கப்பம் கேட்பது போல, விளம்பரம் தர மறுத்தவர்களைப் பற்றி மோசமாக எழுதுவதாக மிரட்டுவதற்கும் பண(ய)ம் தராமல் விட்டால் வெளியே விடமாட்டோம் என்று புலிகள் மிரட்டுவதற்கும் என்ன வித்தியாசம்? பணம் சம்பாதிப்பதற்கு பேனாவை காட்டி மிரட்டுவதை abuse என்பதா? misuse என்பதா?

★ ★ ★

கடைகள் எல்லாம் சேர்ந்து கடைச்சங்கம் அமைத்திருக்கின்றன. எல்லாரும் உயிர் வாழ வேண்டிய நிலையை உணர்ந்து எல்லாருமாகச் சேர்ந்து, சங்கம் அமைத்திருக்கிறார்கள். கியூறியஸின் Count the money கனவு காணும் கவுண்ட மணிகள் கட்டுரையைப் பார்த்தால் இந்த யோசனை வந்திருக்குமோ என்னவோ? எப்போதுமே வர்த்தக முயற்சிகள் regulate பண்ணப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. சந்தை சக்திகள் பல விடயங்களைத் தீர்மானித்தாலும் அதற்கும் அப்பாற்பட்ட சக்திகளும் உண்டு. இங்கே ஏகபோக வியாபாரங்கள் தவிர்ந்த மற்றவை வழமையில் regulate பண்ணப்படுவதில்லை. முதலில் மூலைக்கு ஒரு கடை திறப்பதை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

சமீபத்தில் ஒரு புதிய கடைக்காரர் தனது கடைக்கு தாயகம் போடும்படி கேட்டார். கடை எங்கே இருக்கிறது என்று கேட்ட போது இரு தெருக்கள் சந்திக்கும் பகுதியைச் சொன்னார்... அங்கே ஏற்கனவே ஒரு கடை இருக்கிறதே. அதற்கு பக்கத்திலா? என்று கேட்ட போது, 'இல்லை, இல்லை, ஏழு கடை தள்ளி' என்றார். ஏதோ ஏழு கடல் தாண்டி கடை வைத்திருப்பது மாதிரி.. ஏற்கனவே உள்ள கடைக்காரர்கள் பாடு கஷ்டம். இதற்குள் இன்னொரு கடை...

★ ★ ★

பாண் தயாரிப்பாளர்களுக்கான போட்டி முடிவுக்கு வந்து விட்டது போலும். அன்று ஒரு கடையில் 'சீனிச்சம்பலும் பாணும்' கேட்ட போது, அந்தப் பாண் இப்போது வருவதில்லை என்றார்கள். வெண்காயம் விலை ஏறியிருக்குமோ? அசல் வெங்காயங்கள் தான். மாலை நேரங்களில் ஸ்காபரோவில் சுடச்சுட ரோஸ்ட் பாண் கிடைக்கிறது. எங்கும் கிடைக்கிறது. பாணை வாங்கி வீட்டில் சம்பல் செய்யுங்கள். (கியூறியஸ் பையலாய் இருந்த காலத்தில் முதன் முதலாக கற்றுக் கொண்ட சமையல் பாகம்.. சம்பல் செய்வது தான். தேங்காய்ப் பூவுடன் மிளகாய்த் தூள் சேர்த்து வெண்காயத்தை நசித்து தேசிக்காய் விட்டால் சம்பல் ரெடி.. பாணுடன் சாப்பிடலாம்)

★ ★ ★

நம்மாளுங்க செய்யிற முதல் தப்பே அது தான். எந்தக் கடையையாவது வாங்கினால்... அந்த கடையில் முன்பு வாடிக்கையாளர்களாக இருந்த வெள்ளையர்களை வரவிடாமல் செய்வது தான் இவர்களது முதல் வேலை.. நல்ல பெயராய் இருந்த கடையின் பெயரை மாற்றி.. இஷ்ட தெய்வத்தின் பெயருடன், அல்லது பிள்ளையின் பெயருடன் நியூமரோலஜி முறைப்படி ஆங்கிலத்தை பிழிந்தெடுத்து 'மொழிப்பேர் திருத்தம்' செய்து (சீர்திருத்தம் அல்ல) பெயர்ப் பலகையை மாட்டி விடுவார்கள்.

பிறகு மிளகாய்த்தூள் மணம், சாம்பிராணி புகை.. பிறகு சதா அந்த வாரப் புதுப்படம் வீடியோவில் ஓடிக் கொண்டிருக்கும். இப்படியாக சிகரெட், பால் வாங்கக் கூட பிற இனத்தவர்கள் வருவதைத் தடை செய்து விடுவார்கள். தமிழர்களுக்கு சேவை செய்வதில் அவ்வளவு அக்கறை. ஆமா.. பைரவன் சேவை நாட்டுக்குத் தேவை.

ஊரில் பங்கருக்குள் இருந்த பழக்கமோ என்னவோ.. கடையின் முன்புறமாக உள்ள கண்ணாடிக்குள் மண் மூட்டை அடுக்கிய மாதிரி அரிசி மூடைகள் அடுக்கியிருக்கும். ஏதோ கல்லாவுக்குள் லட்சக்கணக்கில் இருக்கிற மாதிரியும் அதைக் கொள்ளையடிக்க வாறவன் துப்பாக்கியால் சுட்டாலும் என்பதற்காக பாதுகாப்பு கொடுப்பதற்காக என்றோ என்னவோ. . இந்த அரிசி மூடைகள் பாதுகாப்பு நோக்கத்தில் அடுக்கியிருக்கும். அதுவும் சரிதான். ரொறன்ரோவில் தமிழர்களின் வீரசாகச துப்பாக்கி விளையாட்டுக்களைப் பார்க்கும் போது வீடுகளுக்கும் வாசலில் அரிசி மூடைகளை அடுக்கி வைக்க வேண்டும் போலிருக்கிறது.

இப்படி மற்ற இனத்தவர்களை அந்தப் பக்கமே தலைவைத்துப் படுக்காதபடி செய்துவிட்டு, பக்கத்துக் கடைக்காரரை விழுத்துவதற்கான பணிகளில் ஈடுபடுவார்கள்.. மொத்தத்தில் வியாபாரம் தொடங்குவது லாபம் சம்பாதிப்பதற்காக அல்லாமல்.. மற்றவர்களை விழுத்துதல், பாடம் படிப்பித்தல் போன்ற நோக்கங்கள் பெரிதாகும்.

ஒரு கடையில் பங்குதாரர்களுக்கு இடையில் சச்சரவு. மற்றவர் 'இந்தா உனக்கு படிப்பிக்கிறன் பாடம்' என்று பத்துக் கடை தள்ளி கடையைத் திறந்துவிட்டு இலையான் கலைக்கிறார். இத்தனைக்கும் இவர்களுக்கான வாடிக்கையாளர்கள் இவர்களின் கடைக்கு முன்னால் உள்ள அப்பாட்மெண்ட் கட்டடம் வாழ் தமிழர்கள். இனியென்ன.. பத்து ரூபாவிற்கு மேல் மீன் வாங்குபவர்களுக்கு வீட்டே வந்து மீன் கறி வைத்துக் கொடுக்கப்படும்.

★ ★ ★

அச்சு வாகனமேறுமுன்னர் இங்கே 'தென்னக உயர் நட்சத்திரம்' பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டிகள் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. தற்போது புதிய நோட்டீஸ் ஒன்று உதயமாகியிருக்கிறது. ரஜனி தோளில் புலியைச் சுமந்திருக்கும் படமும் பிரபாகரனின் படமும் போட்டு 'தமிழ் ஈழப் போராட்டத்திற்கான நிதி சேர்க்கும் நிகழ்ச்சியில் ரஜனி கலந்து கொள்வதால் பெருமளவில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதாக மூவரின் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த நோட்டீஸின்

www.tamilarangam.net

நோக்கம் என்னவோ தெரியாது.

அத்தோடு அவருக்கு ஆதரவாக ஆசிரிய தலையங்கங்கள் வேறு. 'போக்கிரிகளின் இறுதிப் புகலிடம் தேசப்பற்று' என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. புலிகள் கொண்டிருப்பதும் தமிழீழத் தேசப்பற்று என்பதால் அவர்களையும் போக்கிரிகள் எனப்படுகிறது என்று கருதலாமோ என்னவோ? பிரச்சனை வேறொன்றுமல்ல... 85ல் ஈழத்தமிழர்களுக்கான நிகழ்ச்சியில் அன்னார் கலந்து கொள்ளாதது பற்றி வாசகர் ஒருவர் தெரிவித்த கருத்து அறு(சு)வையில் வந்திருந்தது. இதை அவரிடம் கேட்ட போது அவர் மறுத்திருக்கிறார். 'அல்லலுறும் ஈழத்தமிழர்களுக்காக உயிரையும் கொடுக்கத் தயாராக உள்ளேன். அவர்களுக்கு எதிராக நான் கருத்து வெளியிட்டதாக கூறும் பத்திரிகைச் செய்திகள் முற்றிலும் பொய்யானவை'. ஆனால் தாயகத்திற்கு அந்தக் கருத்தை தெரிவித்தவரை மீண்டும் தொடர்பு கொண்ட போது, அவர் அந்தச் செய்தி குறித்து உறுதியாக இருந்ததுடன் புலமைப்பித்தனே இது குறித்து அன்னாருடன் தொடர்பு கொண்டதாக சொன்னதுடன் off the record ஆக பல விடயங்கள் சொன்னார். (இப்படி அவர்கள் சொல்வதும் அதை பிரசுரிக்காது விடுவதும் பத்திரிகை மரபு என்பது அறிந்ததே.. ஹா)

விளம்பரம் தங்கள் பத்திரிகைகளுக்கு கிடைத்த நன்றியுணர்வு அவர்களுக்கு இருக்கலாம். ஆனால் கியூறியஸ்க்கு தாயகத்திற்கு விளம்பரம் தரப்படவில்லை என்ற கோபம் எதுவும் இல்லை. விளம்பர டொலர்களுக்காக வால் ஆட்ட வேண்டிய நிர்பந்தமோ, தலையங்கம் எழுத வேண்டிய தேவையோ நமக்கில்லையே. நிகழ்ச்சி நடத்தியவர்களுக்கு தாயகம் ஒரு தொடர்பு சாதனமாக தோற்றம் அளிக்காது போயிருக்கலாம். இதனால் பத்திரிகையாளர் மாநாட்டுக்கு தாயகம் அழைக்கப்படவில்லை. இருந்தாலும் அங்கு தாயகம் பற்றி பிரஸ்தாபிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம். ஆனால் சுப்பர்ஸ்டார் பதிலளிக்க வேண்டிய தேவையை தாயகம் உருவாக்கியதே தாயகத்தின் தவிர்க்க முடியாத தன்மையைக் காட்டுகிறதே.

பிரதேச வாதம் ஈழத் தமிழர்களுக்குள் இருப்பதற்கே கியூறியஸ் எதிரானவன். இதற்குள் தமிழகம், தமிழீழம் என்று பிரிவினை பேசுவதையும் ஆதரிக்கப் போகின்றானா? ஆனால் இன்று வரிந்து கட்டிக் கொண்டு வக்காலத்து வாங்குவோர் கவனிக்க வேண்டும். இந்திய எதிர்ப்புணர்வு புலிகளாலேயே வளர்க்கப்பட்டு வருகிறது. இந்திய கலாசார ஆக்கிரமிப்பு என்று இந்தியப் படங்கள், பாடல்கள், சஞ்சிகைகளுக்கு ஈழத்தில் தடை விதித்து போர்க்கால உள்ளூர் கலை முயற்சிகளுக்கே புலிகள் இடம் கொடுக்கிறார்கள். தமிழக, தமிழீழ வேறுபாட்டை வளர்ப்பது அவர்களே.

ஆனால் உண்மையில் 'தவறான புரிந்துணர்வு' தமிழர்களுக்கு அல்ல, அவருக்கே நேர்ந்துள்ளது. ஆட்சேபம் தெரிவித்தவர்கள் சொன்னது ஈழத்தில் அகதிகளாக உள்ளவர்களையே. புகலிடத்தில் உள்ளவர்களை அல்ல. இதனால் தான் அவர் 'இங்குள்ள நாமே கஷ்டப்படுகிறோம். எங்களுக்கு உதவி செய்வதை விட்டு'' என்று இங்குள்ளவர்கள் முறையிட்டதாக புரிந்து கொண்டுள்ளார்.

ஆனால் ஒன்று... கர்நாடகத்தில் தமிழர்கள் அகதிகளான போது, தான் கன்னடியன் என்பதையும் மறந்து ஆக்ரோஷமான எதிர்ப்புத் தெரிவித்தவர் இவர். இந்த இனம் கடந்த இவரது பரந்த மனப்பான்மை எங்கள் தமிழர்களில் பலருக்கே இல்லை. தனது இனத்தவன் தவறு செய்தாலும் தட்டிக் கேட்ட அவரோடு ஒப்பிடும் போது, தன் இனத்தவனை கொலை செய்யும் போதே நியாயப்படுத்துகின்ற நம்மவர்கள் வெட்கப்பட வேண்டியவர்கள். இருந்தாலும் ஈழத்தமிழர் விடயத்தில் முன்பு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கும் தற்போதைய நோக்கத்திற்குமான முரண்பாடே அறு(சு)வையில் சுட்டிக் காட்டப்பட்டது.

★ ★ ★

அலக்சாண்டர் சொல்சனெற்சின் என்ற ரஷ்ய எழுத்தாளர். இரண்டாம் உலக யுத்தத்தின் போது தான் எழுதிய கடிதங்களில் ஸ்டாலினை விமர்சித்ததற்காக சைபீரியாவில் கடூழியச் சிறைத்தண்டனை கிடைத்தது எட்டு வருடங்கள். அந்த நேரம் இவருக்கு தேசதுரோகம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. பின்னர் வெளியே வந்து எழுத்தாளரானார். ரஷ்ய அரசுகளை விமர்சித்ததற்காக ரஷ்ய எழுத்தாளர் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். சைபீரிய சிறைகள் பற்றி எழுதிய நூலுக்காக நோபல் பரிசு கிடைத்தது. பின்னர் பிரஸ்னேவ் காலத்தில் இவரது

# அறு(சு)வை

விமர்சனங்களை தாங்க முடியாமல் கையில் விலங்கிட்டு கே.ஜி.பி ஏஜண்டுகள் இவரை விமானத்தில் ஏற்றி ஜேர்மனிக்கு நாடு கடத்தினர். பின்னர் அமெரிக்காவில் வேர்மன்ட் மாநிலத்தில் வசித்தார். கொர்பி பதவிக்கு வந்ததும் இவருக்கு மீண்டும் ரஷ்ய குடியுரிமை வழங்கப்பட்டது. தன் மீதான தேசதுரோக குற்றச்சாட்டு வாபஸ் பெறப்பட்டால் மட்டுமே தான் ரஷ்யா திரும்புவதாக இவர் நிபந்தனை விதித்திருந்தார். இப்போது இந்த குற்றசாட்டு வாபஸ் பெறப்பட்டு, நாடு திரும்பியிருக்கிறார். 'தனது வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் இந்த ஆட்சி முறை ஒழியும் என்ற நம்பிக்கை தனக்கு இருந்ததாக' கூறியிருக்கிறார். அங்கே அவருக்கு பெருவரவேற்பு.. தனது எழுத்துப்பணி முடிந்து விட்டதாகவும் இனி தன் நாட்டுக்காக உழைப்பது தான் தனது நோக்கம் என்றும் கூறியிருக்கிறார் அவர்.

★ ★ ★

ரஷ்யாவில் யாராவது 'புதுவை' இருந்திருந்தால் இவரையும் 'வெளிநாட்டிற்கு நக்கச் சென்ற நாய்' என்றிருப்பார். புதுவை என்றதும்... இம்மாதம் மனிதம் இதழில் வந்த குறிப்பு ஒன்று.. யாருக்கு சொல்லியழ? என்று.. அப்பு எழுதியிருக்கிறார்.

'எந்த மடையன் சொன்னவன் உங்கு எழுதத் தடை என்று. புலிகளையும் அதிலும் மேலாக அதன் தலைவரையும் புகழ் பாடும் சுதந்திரம் இன்னும் வளர்ந்து கொண்டல்லவா வருகிறது. அதனினும் மேலாக அப்படியான எழுத்துக்களுக்கு பரிசுகள், கௌரவங்கள் வேறு'. நீங்கள் நல்லாய் எழுதுங்கள். ரத்தினதுரை அவர்களே! பிழைக்கத் தெரிந்தனீங்கள். இன்னும் புகழ் பாடுங்கள். ஆனால் நீங்கள் வளர்க்கும் எழுத்துச் சுதந்திரம் பற்றி இன்னோர் கேள்வி.. ராஜினி என்ற பெண் நடுவீதியில் நாய் போல சுடடுக் கொல்லப்பட்டார். கேசவன், செல்வி போன்றோர் உங்கள் சிறைகளில். அவர்களும் ஏதோ எழுதியதால் தானும். அதுசரி, அதைப் பற்றி எங்களுக்கு என்ன.. மூச்சு விடாதீர்கள். இன்னும் எழுதுங்கள். சுட்டுக் கொல்வதும் சிறையில் அடைப்பதும் புலிகளின் சுதந்திரம். அதனை அங்கீகரித்து எழுதுங்கள். தலைவர் இன்னும் பரிசுகள் தருவார்..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

. ஆனால் ஒன்று மட்டும் உறுதி.. உங்களைப் போல உண்மைகளை மறைத்து பொய்களை உண்மை என எழுதுவதன் மூலம் தான் உங்கு இருக்க வேண்டும் என்றால் அந்த இருப்புத் தேவையில்லை. அதைவிட புலம் பெயர்ந்து உண்மையை எழுதுவதே மேல்.

வெளிநாடு சென்றவர்களை 'நாயிலும் கீழவன்' என்றும் 'பாய் விரித்தால் படுத்துறங்கும் நாய்ச்சாதி இவர்கள்' என்றும் இன்னும் எப்படியெல்லாமோ கவிதை படித்து ஒலிப்பதிவு நாடா வெளியிடுங்கள். பின் அவர்களிடமே பணம் சேகரியுங்கள். அவர்கள் சிந்திக்கும் வரை உங்கள் காட்டில் மழையோ மழைதான்.

★ ★ ★

சொல்ற்சனெற்சின் விசயத்திற்கு வருவோம். தான் இறப்பதற்கு முன்னர் ரஷ்ய சாம்ராஜ்யம் உடையும் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்தவர் இப்போது தன் கண் முன்னாலேயே அதன் சரிவைக் கண்டு இப்போது நாட்டுக்கு திரும்பியிருக்கிறார். நாட்டுக்கு திரும்புவதற்கு தற்போது தான் சரியான நேரம் என்கிறார். இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் இரண்டு வல்லரசுகளும் பாலத்தில்மேல் மோதிக்கொள்கின்ற ஆடுகள் மாதிரி, ஒன்று கீழே விழும் வரை, மோதிக் கொண்டிருந்தன என்கிறார். அரசியலில் நேரடியாகக் குதிக்கா விட்டாலும் இவரது ஆளுமையை பலரும் பயன்படுத்தக் கூடும் என்கிறார்கள், மாஜி கம்யூனிஸ்டுகள் உட்பட.

இருந்தாலும் சோல்சனெற்சின் அதிஷ்டக்காரர். ரஷ்யர்களும் புலிகள் அளவுக்கு இருக்கவில்லை. ரஷ்யர்கள் கைவிலங்கிட்டு நாட்டை விட்டு வெளியேற்றினார்கள். பிரபல்யமான அதிருப்தியாளர்கள் ரஷ்யாவில் தொடர்ந்தும் வாழத்தான் செய்தார்கள். அந்ரே சக்காரோவ் என்ற ஐதரசன் குண்டைக் கண்டுபிடித்தவர் கூட ரஷ்யாவில் தொடர்ந்தும் அதிருப்தியாளராகத் தான் இருந்தார். அவரை சுட்டுக் கொல்லவில்லை. சாதாரண அதிருப்தியாளர்கள் வெளியே தெரியாமல் துன்பங்களை அனுவித்தாலும் பிரபலமானவர்கள் விட்டு வைக்கப்பட்டார்கள்.

நம்ம நாட்டில் ராஜினி கொல்லப்பட்டதும் செல்வி போனறோர் சிறையில் இருப்பதும், ஏன் வெளிநாட்டில் கூட சபாலிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டதும் அராஜகத்தின் உச்சத்தைத் தான் காட்டுகின்றன.

சொல்சனெற்சினை சைபீரியாவுக்கு அனுப்பிய ஸ்டாலின் இன்று ரஷ்யாவில் பகிரங்கமாக விமர்சிக்கப்படுவதும் அவரை நாட்டை விட்டு வெளியேற்றிய பிரஸ்னேவின் ஊழல்கள் கொர்பி காலத்தில் வெளியே வந்ததும் அந்த ரஷ்ய சாம்ராஜ்யமே தகர்ந்து போனதும் நாங்கள் கண்முன்னால் காண்பவை. இவை எங்கள் நாட்டிலும் நடக்காது என்று என்ன நிச்சயம்? இன்றைய நாயகர்கள் நாளையே துரோகிகளாக கைகழுவப்படலாம். அன்றைய அமிர் நேற்று துரோகி. நேற்றைய மாத்தயா இன்று துரோகி என்றால்.. இன்றைய?

★ ★ ★

நம் நாட்டிலும் இந்த துப்பாக்கிக் கலாசாரம் முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கை எத்தனை பேருக்கு இருக்கிறது? பிரச்சனை தீர்ந்தால நாளையே போகத் தயார் என்று சொல்பவர்கள் கூட இன்றைய வெல்பெயரை விட்டுப் போகத் தயாராகவில்லை. கேட்டால் பிள்ளைகள் படிக்கிறார்கள் என்பார்கள். தற்போதைய சூழ்நிலைகள், நிபந்தனைகளின்படி பார்த்தால ஒருவேளை எமது நாட்டில் பிரச்சனை தீர வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லைத் தான். ஆனால் ரஷ்யாவில் இந்த நிலை வரும் என்று ஐந்து வருடத்திற்கு முன்னர் யார் சொன்னார்கள்? இதைப் போல நிபந்தனைகளும் சூழ்நிலைகளும் மாறும் போது நாங்கள் எதிர்பார்க்காத, கனவிலும் நினைக்காத மாற்றங்கள் நடக்க சந்தர்ப்பங்கள் இருக்கத் தான் செய்கின்றன. சொல்சனெற்சினுக்கு நாட்டுக்கு திரும்ப இருபது வருடம் எடுத்தது. நாங்கள் இப்போது தானே பத்தாண்டுகளை கழித்திருக்கிறோம்.

நம்பிக்கை மனித வாழ்வின் முக்கியமானதொன்று. வாழ்வுக்கு அர்த்தத்தை கொடுப்பது. நாளை நல்லாய் இருப்போம் என்ற நம்பிக்கை தானே இன்று எங்களை வாழ வைக்கிறது. அப்போது 'இந்த ஊருக்கு ஒரு நாள் திரும்பி வருவேன், அது தான் எனக்கு திருநாள், என் கனவுகள் பலித்திடும் பெருநாள்' என்றோ, அல்லது வாத்யார் மாதிரி 'புதிய வானம் புதிய பூமி' என்றோ நீங்களும் கியூறியஸும் அந்த மண்ணுக்கு திரும்பத்தான் போகிறோம்.

*This newspaper is published by*
*Georgicka communications.*
*A member of*
*Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
Georgicka communications
P.O.Box 1031, Station "F",
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216*
*@Compuserve.com*

வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

*உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.*

தாயகம்
சந்தா விபரம்
கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ், ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்


★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

www.tamilarangam.net


SIVA'S TRADING CO LTD 321-2739

## ஸ்காபரோ நகரின்
## தன்னிகரற்ற
## தமிழ் வியாபார நிலையம்

**அனைத்துப் பொருட்களும் மலிவுவிலையில்**

- ★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
- ★ உடன் இறைச்சி,கடலுணவு,
- ★ பசுமையான மரக்கறி வகைகள்
- ★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்)
- ★ சமையல் உபகரணங்கள்
- ★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

## சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

3852 Finch Ave East (Kennedy/Finch)
Tel:(416) 321 2739

## P.S.T.T

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

5210 Finch Ave East #23
(Finch/Middlefield)
Tel:609-0141

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

**Video Transfer (Any system) $8.99**